# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## இளங்கலை இலக்கியம் - மூன்றாமாண்டு

## பி.லிட். (தமிழ்)

## ஐந்தாம்பருவம்

# தாள். 10753

# ஊடகவியல்

**Author:**
**Dr.M.Palniappan,** *Associate Professor and Head, Department of Tamil , Government Arts and Science College, Thiruvadanai.*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

**Reviewer : Dr. V. THIRUVENI,** *Assistant Professor of Tamil, Directorate of Distance Education, Alagappa University, Karaikudi -630003.*

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: A-27, 2nd Floor, Mohan Co-operative Industrial Estate, New Delhi-110044
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE12-27/Preparation and Printing of Course Materials/2020 Dated 12.08.2020 Copies 2000**

# பி.லிட். தமிழ் மூன்றாம் ஆண்டு
# ஐந்தாம் பருவம்

## தாள். 10753 – ஊடகவியல்
## பாடத்திட்டம்

**பிரிவு -1 தகவல் தொடர்பு**

கூறு-1 ஊடகவியல் விளக்கம், தகவல் தொடர்பியல், இதழியல்

கூறு.2. ஊடகவியல், சொற்பொருள் விளக்கம் வரையறை

கூறு.3. அறிஞர்களின் கருத்துக்கள், தோற்றம்- வளர்ச்சி, - வரலாறு – வகைகள்- பணிகள்- இன்றைய நிலை

கூறு-4 வார, மாத காலாண்டு, அரையாண்டு, ஆண்டு இதழ்கள், சிறுவர்- மகளிர் இதழ்கள்

**பிரிவு-2 இதழ்கள் -செய்தி – சிறப்பு நிகழ்வுகள்**

கூறு. 5.வணிகம் -மருத்துவம்- அரசியல்- ஆன்மீகம்- திரைப்படம் (சினிமா) –நிறுவன இதழ்கள்

கூறு.6. இதழ்களின் உள்ளடக்கம், செய்தி விளக்கம் - சேகரிப்பு, -செய்தியாக்கம் - செய்தி வகைகள்

கூறு.7. அரசியல், திரைப்படம், இலக்கியம், மருத்துவம், ஆன்மீகம், வேலைவாய்ப்பு. விளையாட்டுச் செய்திகள், நிருபர்கள், தகுதிகள்

கூறு.8. ஆசிரியர்கள் -தலைப்பு – முகப்பு – உடல்பகுதி- பக்க ஒருங்கிணைப்பு- தலையங்கம்- சிறப்பு நிகழ்வுகள்

**பிரிவு-3. பத்திரிக்கைச் சட்டம்**

கூறு.9. விளம்பரம் -சொற்பொருள் வரையறை- இலக்கணம்- வகைகள்- பத்திரிக்கைச் சட்டங்கள், பதிப்புரிமை.

கூறு.10. இந்திய, உலகச் செய்தி நிறுவனங்கள்- பத்திரிக்கை மன்றம்

கூறு.11 ஊடகங்கள், மரபு வழி- அச்சுவழி- மின்வழி- அஞ்சல்-தந்தி- வானொலி- திரைப்படம் - தொலைநகலி

**பிரிவு. -4. கணினியியல், இணையம்**

கூறு 12 தொலைக்காட்சி, செயற்கைக்கோள் -கணினி - இணையம்- வலைதளம்- முகநூல், மின்னஞ்சல், மின்னனு இதழ்

கூறு. 13. கைபேசி, வாட்ஸ்அப், குறுஞ்செயலி- பிற சாதனங்கள்

கூறு. 14. மின்தமிழ்- இணையத்தில் இணைந்த தமிழ்- இணையவழி தமிழ்க்கல்வி- கணினியியலில் தமிழ் - தமிழில் மக்கள் தகவல் தொடர்பியல்

**பிரிவு -1 தகவல் தொடர்பு**

**கூறு-1 ஊடகவியல் விளக்கம், தகவல் தொடர்பியல், இதழியல்**

1.1.ஊடகவியல் விளக்கம்

1.2.ஊடகவியலின் செயல்முறை

1.2.1. தகவல் தெரிவித்தல்

1.2.2.அறிக்கையிடுதல்

1.2.3. பிரதிபலிப்பை உருவாக்குதல்

1.3. மக்கள் தகவல் தொடர்பியல் (Mass communication)

1.4. இதழியல்

**கூறு.2. ஊடகவியல், சொற்பொருள் விளக்கம் வரையறை**

2.1. ஊடகவியல் சொற்பொருள் விளக்கம்

2.2. ஊடகவியல் தோன்றியதற்கான காரணம்

2.3. ஊடகவியலால் ஏற்படும் நன்மைகள்

2.4. சமூக ஊடகவியல்

**கூறு. 3 ஊடகவியல் அறிஞர்களின் கருத்துகள், தோற்றம், வளர்ச்சி, வரலாறு, வகைகள், பணிகள், இன்றைய நிலை**

3.1.ஊடகவியல் பற்றிய அறிஞர்களின் கருத்துகள்

3.2.தோற்றமும் வளர்ச்சியும்

3.3. ஊடகவியலின் வகைகள்

3.3.1.ஊடக வடிவங்களின் வகைகள்

3.3.1.1.வழக்காற்று ஊடகவியல்

3.3.1.2.ஒளிபரப்பு ஊடகவியல்

3.3.1.3.குடிமகன் ஊடகவியல்

3.3.1.4.தரவுத்தள ஊடகவியல்

3.3.1.5.வானியல் புகைப்பட ஊடகவியல்

3.3.1.6.கொன்ஸோ ஊடகவியல்

3.3.1.7.ஊடாடும் ஊடகவியல

3.3.1.8.துப்பறிதல் ஊடகவியல்

3.3.1.9.ஒளிப்பட ஊடகவியல்

3.4. பணிகள்

3.5. இன்றைய நிலை

**கூறு -4.வார, மாத , காலாண்டு, அரையாண்டு, ஆண்டு இதழ்கள் சிறுவர், மகளிர் இலக்கியம்**

4.1.இதழ் ஊடகம்

4..1.1.வார இதழ்கள

4.1.2.வாரம் மும்முறை இதழ்கள்

4.1.3.வாரம் இருமுறை இதழ்கள்

4.1.4.வார இதழ்கள்

4.1.5.மாத இதழ்கள்

4.1.6.மாதம் மும்முறை இதழ்கள்

4.1.7.மாதம் இருமுறை இதழ்கள்

4.1.8.மாத இதழ்கள்

4..1.9. ஓர் ஆண்டின் காலப் பகுதியில் வெளிவரும் இதழ்கள்

4.1.9.1.காலாண்டிதழ்

4.1.9.2. அரையாண்டிதழ்

4.1.9.3.ஆண்டிதழ்

4.2. சிறுவர் இலக்கியம்

4.2.1.சிறார் இலக்கிய வரலாறு

4.2.2.சிறார் இலக்கிய வளர்ச்சியில் இதழ்களின் பங்கு

4.2.3.பணிகள்

4.2.4.வகைகள்

4.2.4.1. குழந்தைகளுக்கான இதழ்கள்

4.2.4.2.குழந்தைகளுக்கான இணைப்புப் பகுதியை வழங்கும் பெரும் இதழ்கள்

4.3.மகளிர் இலக்கியம்

4.3.1.மகளிர் இதழ்கள்

**பிரிவு -2 இதழ்கள் - செய்தி - சிறப்பு நிகழ்வுகள்**

**கூறு. 5 வணிகம், மருத்துவம், அரசியல், ஆன்மிகம், திரைப்படம் (சினிமா) – நிறுவன இதழ்கள்**

5. இதழ்களின் வகைகள்

5.1.வணிக இதழ்கள்.

5.1.1.வணிகமணி

5.1.2.மோட்டார் விகடன்

5.2.மருத்துவ இதழ்கள்

5.2.1.சித்த மருத்துவ இதழ்கள்

5.2.2.அலோபதி மருத்துவ இதழ்கள்

5.2.3.ஹோமியோபதி மருத்துவ இதழ்கள்

5.4.அரசியல் இதழ்கள்

5.4.1.திராவிடநாடு

5.4.2.காஞ்சி இதழ்

5.4.3.முரசொலி

5.4.4.நமது எம்.ஜி.ஆர்

5.4.5.சங்கொலி

5.4.6.தீக்கதிர்

5.4.7.ஜனசக்தி

5.5.ஆன்மிக இதழ்கள்

5.5.1.தெய்வ முரசு

5.1.2.குமுதம் பக்தி

5.1..3.சக்தி விகடன்

5.6. திரைப்பட இதழ்கள்

5.6.1.இரு மாத இதழ்கள்

5.6.2.மாத இதழ்கள்

5.6.3.இருவார இதழ்கள்

5.6.4.வார இதழ்கள்

**கூறு 6.இதழ்களின் உள்ளடக்கம், செய்தி விளக்கம், சேகரிப்பு, செய்தியாக்கம்,**

6. செய்தி –விளக்கம்

6.1.செய்தி என்பது குறித்து அகராதிகள் தரும் விளக்கங்கள்

6.2.செய்தி என்பது குறித்து அறிஞர்களின் கருத்துகள்

6.3.செய்தி – உள்ளடக்கம்

6.3.1.என்ன நடந்தது?

6.3.2.ஏன் நடந்தது?

6.3.3. எப்பொழுது?

6.3.4. எப்படி?

6.3.5.எவ்வளவு

6.3.6.எங்கே?

6.4. செய்தி சேகரிப்பு

6.4.1.நிருபர்கள் வழி செய்தி சேகரிப்பு

6.4.2.செய்தி நிறுவனங்கள் வழி செய்தி சேகரித்தல்

6.5.செய்தியாக்கம்

**கூறு. 7 செய்தி வகைகள்,அரசியல் செய்திகள், திரைப்படச் செய்திகள், இலக்கியச் செய்திகள், மருத்துவச் செய்திகள், ஆன்மிகச் செய்திகள், வேலைவாய்ப்புச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள்,,நிருபருக்கான தகுதிகள்**

7.செய்தி வகைகள்

7.1.அரசியல் செய்திகள்,

7.1.1.தினமணியில் காந்தி 150

7.1.2.தினத்தந்தியில் காந்தி 150

7.1.3.தமிழ் இந்துவில் காந்தி 150

7.2.திரைப்படச் செய்திகள்,

7.2.1.திரைப்பட விமர்சனம்

7.2.1.1.தினமலர் நாளிதழில் வெளிவந்துள்ள ஒரு திரைப்படம் குறித்தான விமர்சனம்

7.2.1.2.ஆனந்தவிகடன் இதழில் வெளிவந்த மேற்குறித்தபடத்திற்கான விமர்சனம்

7.3.இலக்கியச் செய்திகள்,

7.3.1.தினமணி தமிழ்மணியில் வந்த ஒரு கட்டுரை

7.3.2. தினத்தந்தி- இலக்கியவாதியின் பக்கங்கள்

7.4. மருத்துவச் செய்திகள்,

7.4.1.“ நுரையீரலை பாதுகாப்பது எப்படி?

7.4.2. 40 வயதுகளில்...

7.5.ஆன்மிகச் செய்திகள்

7.5.1.தினத்தந்தியில் அத்திவரதர் பற்றிய செய்தி

7.5.2.தினமலரில் அத்திரவரதர் செய்தி

7.5.3.தினமணியில் அத்திவரதர் பற்றிய செய்தி

7.6. வேலைவாய்ப்புச் செய்திகள்,

7.7.விளையாட்டுச் செய்திகள்,

7.8.நிருபரின் தகுதிகள்

7.8.1.செய்தியாளர் (நிருபர்)

7.8.2.செய்தி அறிதிறன்

7.8.3.கல்வி அறிவு

7.8.4.செய்திகளைச் சரியாகத் தருதல்

7.8.5.விரைந்து செயல்படல்

7.8.6.நடுநிலை

7.8.7.பொறுமை

7.8.8.தனித்தன்மை

7.8.9.பல்வகைத் தொடர்புகள்

7.8.10.நம்பிக்கையைப் பாதுகாத்தல்

7.8.11.நேர்மை

7.8.12.கலந்து பழகும் ஆற்றல்

7.8.13.தன்னம்பிக்கை

7.8..14. சட்டத் தெளிவு

**கூறு.8. ஆசிரியர்கள், தலைப்பு, முகப்பு, உடல்பகுதி, பக்க ஒருங்கிணைப்பு, தலையங்கம், சிறப்பு நிகழ்வுகள்**

8.செய்தி ஆசிரியப்பணி

8.1.ஆசிரியர்

8.2.இதழ் ஆசிரியர் பணியின் பண்புகள்

8.2.1.மக்கள் மனமறிந்த பணி

8.2.2.கூட்டு முயற்சிப் பணி

8.2.3.மனித நேயப் பணி

8.3. துணையாசிரியர்கள்

8.4.செய்தி ஆசிரியர்

8.5. செய்தியின் கட்டமைப்பு

8.5.1.தலைப்பு

8.5.2.முகப்பு,(முன்னுரைப் பகுதி)

8.5.2.1 முன்னுரை எழுதும் முறை

8.5.3.உடல்பகுதி

8.5.4.முடிவுப்பகுதி

8.6.பக்க ஒருங்கிணைப்பு,

8.7.தலையங்கம்

8.8.சிறப்பு நிகழ்வுகள்

**பிரிவு. 3 பத்திரக்கை சட்டம்**

**கூறு 9 விளம்பரம், சொற்பொருள் வரையறை -இலக்கணம்- வகைகள்- பத்திரிக்கை சட்டங்கள், பதிப்புரிமை**

9.விளம்பரங்கள்

9.1.விளம்பரம் - சொற்பொருள் விளக்கம்

9.1.2.விளம்பரத்தின் பணிகள்

9.1.3.விளம்பரத்தின் வகைகள்

9.1.3.1.தள அடிப்படையில் விளம்பரத்தின் வகைகள்

9.1.3.2.கருப்பொருள் வழி விளம்பர வகைகள்

9.1.3.2.1.உற்பத்திப் பொருள் விளம்பரம்

9.1.3.2.2.நிறுவனப் பொருள் விளம்பரம்

9.1.3.2.3.நிறுவன விளம்பரம்

9.1.3.2.4.தொழில் விளம்பரம்

9.1.3.2.5.வணிக விளம்பரம்

9.1.3.2.6. பகுக்கப்பட்ட விளம்பரம்

9.1.3.2.7.அறிவிப்பு விளம்பரம்

9.1.3.2.8.சட்ட விளம்பரம்

9.1.3.2.9.அரசு விளம்பரம்

9.1.3.2.10.விழாக்கால விளம்பரம்

9.1.3.2.11 பொது சேவை விளம்பரம்

9.1.4.விளம்பரம் இடம்பெறும் இடம் அடிப்படையிலான வகைகள்

9.2.பத்திரிக்கை சட்டங்கள்

9.2.1.தொழில் முறை இதழாளர் சட்டம்(1955)

9.2.2.செய்தித்தாள் புத்தகப் பதிவுச் சட்டம் (1867)

9.2..3.பிரஸ் கவுன்சில் சட்டம் (1978)

9.2.4.காவல் துறைச் சட்டம் (1933)

9.2.5.அலுவலக இரகசியக் காப்புச் சட்டம் (1923)

9.2.6.மந்திர மருத்துவத் தடுப்புச் சட்டம் (1954)

9.2.7.குற்றவியல் தடுப்புச் சட்டம் (1973)

9.2.8.நாடாளுமன்ற நடவடிக்கைச் சட்டம் (1956)

9.2.9.இளையோர் தீங்கிழைப்புத் தடுப்புச் சட்டம் (1956)

9.2.10.பதிப்புரிமைச் சட்டம் (1957)

9.2.11.அவதூறுச் சட்டம்

9.2.12.ஆட்சி துரோகச் சட்டம்

9.2.13.பத்திரிகைக் குழுச்சட்டம்

9.2.14.இதழியல் தொடர்பான இந்திய தண்டனைச் (பீனல்கோடு) சட்டங்கள்

9.2.15.தணிக்கைச் சட்டம் (1988)

9.3.பதிப்புரிமை

**<u>கூறு. 10 இந்திய உலகச் செய்தி நிறுவனங்கள், பத்திரிக்கை மன்றம்.</u>**

10.செய்தி நிறுவனங்கள்

10.1.இந்திய அளவிலான செய்தி நிறுவனங்கள்

10.1.1.பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா

10.1.2.யுனைடெட் நியுஸ் ஆப் இந்தியா

10.1.3.ஹிந்துஸ்தான் சமாச்சார்

10.1.4.சமச்சார் பாரதி

10.1.5.இந்தோ ஆசியன் செய்திச் சேவை

10.2.வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள்

10.2.1.ஆசியன் நியுஸ் இண்டர்நேஷனல்

10.2.2.இந்தோ ஆசியன் நியுஸ் சர்வீஸ்

10.2.3.ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம்

10.2.4.அசோசியெட்டட் பிரஸ்

10.2.5.டாஸ்

**கூறு. 11,ஊடகங்கள், மரபுவழி, அச்சுவழி, மின்வழி, அஞ்சல் தந்தி, வானொலி, சினிமா, தொலைநகலி**

11.ஊடகங்கள் .

11.1. ஊடகத்தின் வெளியீட்டுத் தன்மையின் அடிப்படையில் அமைந்த வகைகள்

11.1.1.ஓவிய ஊடகம்

11.1.2.ஒலி ஊடகம்

11.1.3.எழுத்து ஊடகம்

11.1.4.தோல் கருவி ஊடகம்

11.1.5.அஞ்சல் ஊடகம்

11.1.6.அச்சு ஊடகம்

11.1.7.வானொலி ஊடகம்

11.1.8.தொலைக்காட்சி ஊடகம்

11.1.9.திரைப்பட ஊடகம்

11.1.10.தொலைபேசி ஊடகம்

11.1.11.கணினி ஊடகம்

11.1.12.இணையம்

11.2. ஊடக சாதனங்களின் வகைகள்

11.2.1.மரபு சார் ஊடக சாதன வகைகள்

11.2.2.அச்சு ஊடக சாதன வகைகள்

11.2.3.அலை ஊடக சாதனங்கள்

11.2.4.காட்சி ஊடக சாதனங்கள்

11.2.5.மின்னனு ஊடக சாதனங்கள்

**பிரிவு 4 : கணினியியல், இணையம்**

**கூறு. 12. தொலைக்காட்சி, செயற்கைக்கோள், கணினி, இணையம், வலைதளம், முகநூல், மின்னஞ்சல், மின்னணு இதழ்**

12.நவீன கால ஊடக வளர்ச்சி

12.1.செயற்கைக்கோள் தொலைக்காட்சி

12.1.1.நிலையான சேவை செயற்கைக்கோள்

12.1.2.நேரடி ஒளிபரப்பு செயற்கைக்கோள்

12.2.இணையம்

12.2.1.வலைத்தளம்

12.2.2.முகநூல்

12.2.3.மின்னஞ்சல்

12.2.4.மின்னணு இதழ்கள்

12.2.4.1. இணையத்தில் மட்டும் வெளிவரும் இதழ்களும் அவற்றின் தனித்தன்மைகளும்.

12.2.4.2.அச்சு வடிவிலும், இணையத்திலும் வெளிவரும் இதழ்கள்

**கூறு.13 கைபேசி – வாட்ஸ்அப், குறுஞ்செயலி – பிற சாதனங்கள்**

13.1.கைபேசி

13.2.வாட்ஸ் அப் (கட்செவி)

13.3.குறுஞ்செயலி

**கூறு 14.மின்தமிழ்- இணையத்தில் இணைந்த தமிழ், இணையவழி தமிழ்க்கல்வி, கணினியியலில் தமிழ் - தமிழில் தகவல் தொடர்பியல்**

14.மின்தமிழ் - இணையத்தில் இணைந்த தமிழ்

14.1.இணைய நூலகம்

14.1.இணையத்தில் இயல் தமிழ்

14.2. இணையத்தில் இசைத்தமிழ்

14.4.இணையத்தில் நாடகத்தமிழ்

குறிப்பு

# பிரிவு-1

## தகவல் தொடர்பு

## கூறு -1

## ஊடகவியல் - மக்கள் தகவல் தொடர்பியல் - இதழியல்

### நோக்கம்

ஊடகவியல் பாடத்தின் முதல் பிரிவாக விளங்கும் இப்பாடப்பகுதியின் நோக்கம் ஊடகவியல் குறித்தும் மக்கள் தகவல் தொடர்பியல் குறித்தும், இதழியல் குறித்தும் சரியான புரிதலை அறிவித்தல் என்பதாகும். இப்பாடத்தின்வழி ஊடகவியலின் தற்கால வலிமை, இனிமை, பரவலாக்கம் குறித்து அறிந்து கொள்ள இயலும்.

தற்காலத்தினைத் தகவல் தொழில் நுட்ப உலகம் என்று அழைக்கலாம். செய்திகள் வலிமை வாய்ந்தன என்பதை இக்காலத் தகவல் தொழில்நுட்ப உலகம் தெளிவாக உணர்த்தி வருகிறது.

ஒரு நாட்டின் தேர்தல் முடிவுகளை இருந்த இடத்தில் இருந்து கொண்டே அப்போதைக்கு அப்போது தெரிந்து கொள்ளமுடிகின்றது. ஒரு மாநிலத்தில் அரசியல் இழுபறியாக இருக்கின்றபோது அடுத்து அடுத்து என்ன நடைபெறுகிறது, யார் ஆட்சி அமைப்பார்கள் என்பதை ஊடகச் செய்திகள் அறிவிக்கின்றன. தங்கத்தின் விலை நிலவரம், பெட்ரோல் விலை ஏற்றம், மழை பெய்யும் அளவு, புயலின் வேகம், புகழ்பெற்ற விருதுகள் பெற்றோர் விபரம், வேலை வாய்ப்பு விபரம், தேர்வு கால அட்டவணை என்று பற்பல செய்திகளையும் ஊடகத்தின் வாயிலாக மக்கள் அறிந்து கொள்கின்றனர். அதற்கேற்ப தங்களை வடிமைத்து வாழப் பழக்கிக் கொள்கின்றனர். இதன் காரணமாக தகவல்

தொழில் நுட்பம் சார்ந்த இவ்வுலகம் சார்ந்து இயங்குகிறது என்பதை மறுக்க இயலாது.

ஒரு அலுவலகத்திற்கு ஒரு பணியாளர் வரவில்லை என்ற நிகழ்வு அலுவலகத் தொடக்க நேரம் முற்பகல் பத்துமணி அளவில்தான் தெரியவரும் என்றாலும், அவர் வராமைக்கான காரணத்தை, தன் விடுப்பினைத் தொலைபேசி வழி தன் மேலதிகாரிக்குச் சொல்கிறார். மேல் அதிகாரி தன் அலுவலகத்தில் வருகைப் பதிவு செய்யும் அலுவலர்க்கு இதனைச் சொல்கிறார். குறிப்பிட்ட பணியாளர் இன்று வரமாட்டார் என்ற செய்தி அவர் செய்கைக்கு முன்பே அறிவிக்கப்பட்டுவிடுகிறது. அவர் செய்யவேண்டிய அன்றைய பணிகள் வேறு ஒருவருக்கு அளிக்கப்படுகிறது. அலுவலகம் குறையின்றி நடைபெற ஆவன செய்யப்படுகிறது.

இவ்வாறு அப்பணியார் வராத செய்தி முன்னரே அறிவிக்கப்படவில்லை எனில் தகவல் குறைபாடு ஏற்பட்டு அப்பணியாளர் பல தண்டனைகளுக்கு உள்ளாக்கப்படலாம். அலுவலகப் பணிகள் தடைபடலாம். இது ஒரு சிறு எளிய நிகழ்வு என்றாலும் இங்கு ஆட்சி செலுத்துவது தகவல் என்பதை உணர்ந்தாக வேண்டும். தகவலே மனிதர்களை ஆட்டி வைக்கிறது. அதுவே மனிதர்களை இயங்கவும், இயங்கவிடாமலும் செய்கிறது.

இந்நிலையில் தொடர்பியல் என்பது மக்களின் வாழ்வில் இன்றியமையாததாகின்றது. ‘கம்யூனிகேசன்’ (Communication) என்ற சொல்லால் தொடர்பியல் அழைக்கப்படுகிறது. இத்தொடர்பியல் ஊடக வழி நிகழும் நிலையில் ஊடகவியல் என்றும், மக்களுக்குத் தகவல் தரும் நிலையில் மக்கள் தகவல் தொடர்பியல் என்றும், இதழ்கள் வழி தகவல் தரும் நிலையில் இதழியல் எனவும் அழைக்கப்படுகிறது. இப்பகுதி ஊடகவியல்,

மக்கள் தகவல் தொடர்பியல், இதழியல் குறித்தான அறிமுக செய்திகளை வழங்கும் நிலையில் வடிவமைக்கப்பெற்றுள்ளது.



**குறிப்பு**

## 1.1.ஊடகவியல் விளக்கம்

ஊடகம் என்ற சொல் 'மீடியா' (Media) என்ற சொல்லுக்கு ஈடான பொருள் தரக்கூடிய தமிழ்ச் சொல்லாக உருவாக்கப்பெற்றுள்ளது. மீடியா என்ற ஆங்கிலச் சொல் ஒரு கூட்டுவடிவம் ஆகும். இச்சொல் ஆங்கிலத்தில் பன்மைத் தன்மை உடையதாகவும் கொள்ளப்படுகின்றது,

"ஊடு" என்பதற்கு உள், நடு, இடை என்று தமிழ் அகரமுதலி பொருள்தருகின்றது. ஊடு என்பதே ஊடகவியலின் அடிச்சொல் ஆகும். நடுவாக அல்லது ஒரு மனிதருக்கும், மற்றொரு மனிதருக்கும் ஊடாக நடுவாக நடத்தப்பெற்றுக்கொள்ளும் செய்திகளைப் பரிமாறிக்கொள்வது என்பது ஊடகம் என்று பொருள் கொள்ள முடிகின்றது.

ஊடகம் என்றால் கடத்துவது என்ற பொருளும் உண்டு. செய்திகளைக் கடத்தும் நிலையில் ஊடகம் என்பதும் பொருத்தமானதாக உள்ளது.

ஊடகம் என்பது ஒரு செய்தியை வெளியிடும் மையம், அல்லது நிறுவனம், அல்லது வெளியீட்டு வழி என்று பொருள்படும். செய்திகளைச் சேகரிக்கவும், சேகரித்த செய்திகளை வழங்கவுமான தொடர்பு மையமாக ஊடகம் செயல்படுகின்றது. வெளிப்படுத்தப்படும் செய்திகள் இதுவரை மக்கள் அறியாத செய்தியாக இருக்கவேண்டும் என்பது குறிக்கத்தக்கது. எனவே மக்கள் அறியாத செய்திகளைத் தகுந்த ஊடகம் வழியாக தகுந்த முறையில் வெளியிடும் நிலைப்பாடு ஊடகவியல் ஆகின்றது.

*ஊடகவியல்*

ஊடகவியல் என்பது மனிதர்களுக்கு ஊடாக கருத்துக்களை, தகவல்களை பரப்புகின்ற பணியைச் செய்கின்ற தொடர்பாடல் சார்ந்த துறையைக் குறிப்பதாகும்.

**குறிப்பு**

தகவல்களைப் பரப்புதல் என்பது பொதுப் பணியாக இருந்தாலும் ஊடகங்கள் பல சிறப்பான பணிகளைச் செய்கின்றது. அவை

- கருத்தியலை கட்டமைப்பது
- மனிதர்களின் இருப்பை, சமுகத்தின் இருப்பை எடுத்துக்காட்டுவது
- சந்தைப் பொருளாதாரத்தின் மதிப்பினைத் தீர்மானிப்பது.
- அரசியல், தத்துவம், அறிவியல், சட்டம், மருத்துவம் , பொறியியல் போன்ற பல்துறை சார்ந்த நிகழ்வுகளை, இயக்கங்களைத் தீர்மானிப்பது போன்றனவாகும்.

ஒரு செயல் இயற்கையாக நடந்தாலும் அல்லது செயற்கையாக அதாவது திட்டமிட்டு நடத்தப்பட்டாலும் அதைப் பதிவு செய்து மக்கள் மத்தியில் மீள்நிகழ்த்தலாகப் பரப்புவது என்பதே ஊடகத்தின் பணியாக உள்ளது.

ஒரு நிகழ்ச்சி நடைபெறும் நிலையில் அந்நிகழ்ச்சி அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கு ஓரளவிற்குத் தெரியும் அல்லது பரப்பப்படும். அதே நிகழ்ச்சி பதிவு செய்யப்பெற்று ஊடக வழி வெளியிடப்படும் நிலையில் ஊர் நிகழ்ச்சியாக இருந்த அந்நிகழ்ச்சி உலகம் அறியக் கூடிய நிகழ்ச்சியாகி விடுகிறது. இதனை நேர்மையோடும், உண்மையோடும் மீள் வெளியீட்டுக்கு உள்ளாக்குவது என்பது ஊடகவியலாளர்களின் பணியாகின்றது.

தொடக்க காலத்தில் எழுத்து வழி என்பது மட்டும் ஊடகமாக இருந்தது. தற்போது அச்சு, வானொலி, தொலைக்காட்சி,

*Self-Instructional Material*

குறிப்பு

தொலைபேசி, இணையம் போன்றவற்றின் வழியாக செய்திகள் சேகரிக்கவும், சேகரித்தவை மீள வழங்கவும் படுகின்றன. செய்தி ஒன்றாக இருந்தாலும் அது வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்றவற்றில் வெளிவரும் நிலையில் வெவ்வேறு பரிணாமங்களைப் பெறுகிறது. வெவ்வேறு தரப்பு மக்களைச் சென்றடைகிறது. இவ்வாறு சென்றடையும் நிலையில் பல நன்மைகள் நிகழ்கின்றன. குற்றங்கள் குறைகின்றன. குறைகள் களையப்படுகின்றன. அரிய செய்திகள் அறிந்து கொள்ளப்பெறுகின்றன. வரலாற்று ஆவணத் தன்மை ஊடகவியலால் கிடைக்கின்றது.

ஊடகத்தின் செய்தி வழங்கல் என்பது ஒரு கலை ஆகும். எழுத்து ஊடகமாக இருக்கும் நிலையில் தகுந்த நேரிய நடை தேவைப்படுகிறது. காட்சி ஊடகமாக இருக்கும் நிலையில் அச்சமூட்டாத, நாகரீகமான முறையில் காட்சிகள் படமெடுக்கப் பட்டிருக்கவேண்டும்.

## 1.2.ஊடகவியலின் செயல்முறை

ஊடகவியல் என்பது பல செயல்முறைகளை உள்ளடக்கியது என்றாலும் அடிப்படையாக மூன்று நிலைகள் உள்ளன.

1. தகவல் தெரிவித்தல்,
2. அறிக்கையிடுதல்,
3. பிரதிபலிப்பை உருவாக்குதல்

என்பன அம்மூன்று அடிப்படைகள் ஆகும். இவற்றின் அடிப்படையில் ஊடகவியல் இயங்குகிறது.

### 1.2.1. தகவல் தெரிவித்தல்

ஒரு கருத்தினை மக்களிடம் கொண்டு சேர்க்கிற பணிதான் ஊடகவியலின் முக்கியமான அடிப்படைப் பணியாகும். செய்திகள் வழியாக, படைப்புகள் வழியாக, ஒலி ஒளி ஊடகம் வழியாக,

ஆவண மற்றும் குறும்படங்கள் வழியாக, விளம்பரம் வழியாக செய்திகள் மக்களைச் சென்றடைகின்றன.



### 1.2.2.அறிக்கையிடுதல்

ஒரு கருத்தினைக் கட்டமைத்து அதனை மக்கள் ஏற்கும் நிலையில் அறிக்கையாக்குதல் என்பது ஊடகவியலின் அடுத்த அடிப்படை நிலைப்பாடாக உள்ளது. தகவல் தெரிவித்தல், ஒப்பீட்டுக்கு உள்ளாக்கல், உண்மையை வெளிப்படுத்தல், நம்பிக்கையூட்டல் போன்ற நடைமுறைகளின் வழி ஒரு கருத்தை மக்களின் மனதில் கட்டமைக்கப்படும்.

அறிக்கையிடுதல் என்பது இருவழிப்பாதையாகும். அதிகார மையத்தில் இருந்து மக்களுக்கும், மக்களிடமிருந்து அதிகார மையத்திற்கும் செய்திகளைக் கொண்டு சேர்ப்பது என்ற நிலையில் அறிக்கையிடுதல் மிக முக்கிய அடிப்படையாக ஊடகவியலில் விளங்குகின்றது.

### 1.2.3. பிரதிபலிப்பை உருவாக்குதல்

ஒரு செய்தி மக்களைச் சென்றடையும் நிலையில் அச்செய்தி அறியப்பெறுகிறது. அலசி ஆராயப் பெறுகிறது. இவற்றிற்குப் பின்பு இச்செய்தியை அறிந்த நிலையில் மக்கள் இதற்கான பிரதிபலிப்பு நிலையில் செயல்பட துவங்குகிறார்கள்.

செய்தியை அறிவிப்பதே மக்களின் மனங்களின் பிரதிபலிப்பை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கமே ஆகும்.

இம்மூன்றின் அடிப்படையில் ஊடகவியல் செயல்படுகிறது. அவ்வாறு செயல்படும் நிலையில் அதன் உண்மைத் தன்மை என்பது மிகவும் நம்பகத்தன்மைக்கு உரியதாக இருக்கவேண்டியுள்ளது. மேலும் ஊடகவியல் பண்பு என்பது பின்வரும் நல்ல பண்புகளை உடையதாக இருக்க வேண்டியுள்ளது.

குறிப்பு

1. உள்ளதை உள்ளபடி சொல்வது.
2. எவர் மூலம் ஒரு தகவல் பெறப்பட்டது என்பதை எந்த நிலையிலும் வெளிப்படுத்தாமல் இருப்பது.
3. நேர்மை
4. மொழியைக் காப்பது.
5. கண்ணியத்தைக்காப்பது.

இவ்வகையில் மனிதர்கள் வீட்டில் இருந்தபடியே உலக நடப்புகளை அறிந்து கொள்வது, அவை குறித்து ஆராய்வது, அறிந்த செய்திகள் வழி பிரதிபலிப்பைப் பெறுவது என்ற நிலையில் ஊடகவியல் செயல்பட்டுவருகிறது.

## 1.3. மக்கள் தகவல் தொடர்பியல் (Mass communication)

மக்கள் திரளுக்குக் கருத்துகளையும், செய்திகளையும் அறிவித்தல் மக்கள் தகவல் தொடர்பியல் எனப்படுகிறது. ‘மாஸ் கம்யூனிகேசன்’ (Mass communication) என்ற ஆங்கிலச் சொல்லிற்கான தமிழ் மொழிபெயர்ப்பு மக்கள் தகவல் தொடர்பியல் என்று கொள்ளப்படுகின்றது. ‘மாஸ்’ என்ற ஆங்கிலச் சொல் மக்கள் திரள் என்பதைக் குறிக்கும். ‘கம்யூனிகேசன்’ என்ற சொல்லுக்கான பொருள் தொடர்ப என்பதாகும். இவ்வகையில் மக்கள் தகவல் தொடர்பியல் என்ற தொடர் உருவாக்கப்பெற்றுள்ளது.

ஒரு செய்தியையோ. கருத்தையோ. நிகழ்ச்சியையோ குறியீடுகளின் வழியாகவோ, வாய்மொழியாகவோ, படங்களின் வாயிலாகவோ, மரபுச் சாதனங்கள் வழியாகவோ, நவீன சாதனங்கள் வழியாகவோ மக்கள் கூட்டத்திற்கு அறிவித்து, அல்லது அறிவுறுத்தி நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு கொள்வது பற்றியதான முறைமை மக்கள் தகவல் தொடர்பியல் ஆகின்றது.

தகவல் தொடர்பியல் என்பது

1. தகவல் அனுப்புபவர்
2. தகவல்
3. தகவல் செல்லும் வழி (ஊடகம்)
4. தகவல் பெறும் மக்கள் களம்

ஆகிய நான்கின் அடிப்படைப் பண்புகளை உடையதாக உள்ளது.

தகவல் அனுப்புபவர் தோற்றுவாய் எனப்படுகிறார். இவர் செய்திகளை உரிய தகவல் ஊடகம் வழி, செய்தி பெறுபவராக உள்ள மக்கள் கூட்டத்திற்கு ஒரு செய்தியை அளிக்கிறார். இவ்வகையில் தகவல் தொடர்பு பண்பு அமைகிறது.

மக்கள் தகவல் தொடர்பில் பயன்படுத்தப்படும் சாதனங்கள் பல்வகைப் படுகின்றன. மரபுவழிச் சாதனங்கள், நவீனச் சாதனங்கள் என்று இவற்றை இருவகையாகப் பிரிக்க இயலும். மரபு வழிச் சாதனங்கள் என்பன முரசறைதல், பறையறைதல், தெருக் கூத்து ஆடுதல் போன்ற முறைமைகள் ஆகும். நவீனச் சாதனங்கள் என்பன அச்சு இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், இணையம் போன்றனவாகும்.

தகவல் தொடர்பில் பல தடைகளும் ஏற்படுவதுண்டு. ஊடக இடையீடு, மொழி சார்ந்த இடையீடு, மொழியற்ற தகவல் தொடர்பு இடையீடு போன்றன இவற்றில் குறிக்கத்தக்கன.

மக்கள் தகவல் தொடர்பு சாதனங்கள் அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல், சமுதாயச் சார்புடையவராக ஆக்குதல், வாணிகத் தொடர்பினை உருவாக்கல் போன்ற பல பணிகளையும் செய்கின்றன.

## 1.4. இதழியல்

இதழியல் என்பது அச்சு இதழ்கள் வழியாக மக்களுக்குச் செய்திகளைக் கொண்டு சேர்க்கும் வடிவம் ஆகும். செய்தித்

குறிப்பு

தாள்கள், சிறப்பு இதழ்கள், போன்றவற்றின் வழியாக செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் தருவது இதழியல் எனப்படுகிறது.

இதழ்களில் வெளிவரும் செய்திகள் தனித்துவம் மிக்கனவாகும். இதழ்களில வெளிவரும் செய்திகள் நம்பகத்தன்மை, உண்மை, துல்லியம் உடையனவாக இருக்கும். ஒரு பக்கம் சாராத நிலையில் பொதுத்தன்மை மிக்கதாக இதழ்களின் செய்திகள் இருக்கும். பண்பாடு, கலாச்சாரம் சார்ந்த செய்திகளை வழங்குவதாக இதழ்களின் செய்திகள் அமைகின்றன. நியாயமான நடவடிக்கைகளின் வெளிப்பாடாகவும் இதழ்களின் செய்திகள் அமைகின்றன.

இதழ்களில் செய்தி அளிப்பவராக விளங்கும் நிருபர்கள் குறிக்கத்தக்க பண்புகளை உடையவர்களாக இருக்கவேண்டும். செய்தி மோப்பத்திறன் உடையவராக நிருபர்கள் இருக்கவேண்டும். மேலும் அவர்கள் செய்திகளை விரைவாக, நடுவுநிலைமையுடன், சரியாகத் தருதல் வேண்டும். நன்னடத்தை, இலஞ்சம் பெறாதிருத்தல், மரபுகளை அறிந்திருத்தல், சட்டங்களை அறிந்திருத்தல் போன்ற பண்புகளைப் பெற்றவராகவும் நிருபர்கள் இருக்கவேண்டும்.

இதழ்கள் செய்தி அறிவித்தல் பணிகளுடன், இலக்கியப்பணி, சமுதாயப் பணி, ஆணவப்படுத்தல் பணி போன்றவற்றையும் செய்கின்றன.

தற்காலத்தில் செய்திகளின் பதிவுக்களமாக விளங்குவன இதழ்களே ஆகும்.

இவ்வாறு ஊடகவியல், மக்கள் தகவல் தொடர்பியல், இதழியல் பற்றிய அறிமுகச் செய்திகளை இப்பகுதி தந்து நிற்கிறது.

# கூறு. 2

குறிப்பு

## ஊடகவியல் சொற்பொருள் விளக்கம் - வரையறை

ஒருவரின் செய்திகள் ஊடகம் வழியாக மற்றொருவருக்குப் பரப்பும் அமைப்புமுறை பற்றியதான இயல் ஊடகவியல் ஆகும். இவ்வூடகவியல் தற்கால சமுதாயத்தில் மிக இன்றியமையாத இடத்தைப் பெற்றுவருகிறது. செய்திகளை அரசு சார்ந்த அமைப்புகளே வெளியிட்டுவந்த நிலை மாறி ஊடகங்கள் வழியாக கருத்து பரப்பு ஆர்வம் மிக்க எவரும் வெளியிடலாம் என்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பல நன்மைகள் எழுந்துள்ளன. இவ்வகையில் ஊடகவியல் குறித்தான விழிப்புணர்வு தற்போது அவசியமாகின்றது. ஊடகவியல் குறித்தான சொற்பொருள் விளக்கத்தினையும், அத்துறைக்கான வரையறைகளையும் இப்பகுதி எடுத்துரைக்கின்றது.

## 2.1. ஊடகவியல் சொற்பொருள் விளக்கம்

ஊடு, அகம், இயல் என்ற மூன்று சொற்களின் சேர்க்கை ஊடகவியல் ஆகின்றது. ஊடு என்பதற்கு “இதன் வழியாக” என்று பொருள் கொள்ளலாம். அகம் என்து இருப்பிடம் என்ற பொருளில் கொள்ளப்பெற்று ஊடகம் என்ற சொல் பெறப்பட்டுள்ளது. ஊடகத்தைப் பற்றிய இயல் ஊடகவியல் என்று ஆக்கமானது. ஊடகங்கள் என்பவை தகவல் தொடர்பு சாதனங்கள், மீடியாக்கள் வெகுஜன தொடர்பு சாதனங்கள் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

ஊடகம் என்பது ‘தனித்திருக்கும் தன்மையை மாற்றி ஐக்கியப்படுத்துதல்’ என்ற பண்பினைப் பெற்றது.

ஒரு கருத்தை அல்லது தகவலை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பரிமாற்றம் செய்ய உதவும் கருவிதான் ஊடகம் எனப்படும்.

‘தகவலை அனுப்புபவருக்கும் பெறுப வருக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவது, இருவர் அல்லது இரு அமைப்புகளுக்கிடையே நடைபெறுகின்ற செய்திப் பரிமாற்றமும் அதனால் ஏற்படும் தெளிவும் போன்ற செயல்பாடுகளைக் கொண்டது ஊடகவியல் எனப்படுகிறது.

செய்திகள், எண்ணங்கள், உணர்ச்சிகள், திறன்கள் போன்றவற்றைக் குறியீடு, பேச்சு, எழுத்து, படம், வரைபடம் போன்றவற்றின் வழியாகப் பரப்புவதும் ஊடகவியல் ஆகும்.

தொடர்பியல் என்னும் சொல்லிற்குப் ‘பொதுமையாக்குதல்’ எனப் பொருள் கொள்ளலாம். பெறுபவருடைய மனதில் அனுப்புபவரின் கருத்து அல்லது கருத்துப் படிவத்தை உருவாக்குவது பொதுமையாக்குதல் எனப்படும். இப்பொதுமையாக்கல் பண்பு ஊடகவியலுக்கும் உரியதாகும்.

ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலில் செய்தி அனுப்புபவருக்கும் பெறுபவருக்கு மிடையே நிகழும் செய்திப் பரிமாற்றச் செயல்முறை ஊடகவியல் எனப்படும்.

மக்கள் விரும்புவதை மட்டுமல்ல, மக்களுக்குத் தேவையான செய்திகளை உண்மைத் தன்மையுடன் வழங்குவதுதான் ஊடகத்தின் பணியாகும்.

ஊடகவியலானது பலதரப்பட்ட பார்வையாளர்களைக் கொண்ட பல்வேறுபட்ட வடிவங்களில் செயல்பட்டு வருகின்றது. இவ்வூடகத்துறை அரசுகளின் செயல்பாடுகளை காவல் செய்யும் காவல் நாய் போல இருந்து தவறுகளைச் சுட்டிக்காட்டும்

பொறுப்பைக் கொண்டுள்ளது. எனவேதான் இத்துறை ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனக் கொள்ளப்படுகின்றது.



சமுதாயத்தினை வழி நடத்துவது, சமுதாயத்தில் தவறுகளைச் சுட்டுக்காட்டுவது. விழிப்புணர்வு ஏற்படுத்துவது, அழகியலை ரசிப்பது போன்ற பல்வேறு செயல்பாடுகளை ஊடகவியல் செய்கின்றது.

## 2.2. ஊடகவியல் தோன்றியதற்கான காரணம்

ஊடகவியல் என்னும் தகவல் தொடர்பு முறை மனிதன் தோன்றிய காலம் முதல் இருந்து வருகிறது. ஒரு சமுதாயம் வளர அடிப்படைத் தேவையாக கருதப்படுவது தொடர்பு ஆகும்.

தன்னைச் சுற்றி நடக்கும் செய்திகளை அறிந்து கொள்வதிலும், பிறரைப் பற்றி அறிவதிலும் மனிதனுக்கு ஈடுபாடு உண்டு. இந்த ஈடுபாடே ஊடகவியல் தோன்றக் காரணமாக அமைந்தது. கற்காலம் முதல் கணினி யுககாலம் வரை இந்தச் செய்தித் தேடலே ஊடகவியல் வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக அமைகின்றது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடக்கும் செய்திகளை அறிந்துகொள்ளும் நிலைக்கு மனிதன் உயர்ந்த போது வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் பரிணாமமும் மாறத் தொடங்கியது, வளர்ச்சியடையத் தொடங்கியது.

பண்டைக் காலத்தில் ஓலைச்சுவடிகளில் எழுதப்பெற்று, செப்போடுகளில் பொறிக்கப்பெற்று, கல்வெட்டுக்களாகச் செதுக்கப்பெற்றுத் தகவல்கள் பரப்பப்பெற்றன. தொடர்ந்து அச்சு ஊடகங்கள் வாயிலாக தாள்களில் செய்திகள் வெளிவந்தன. தற்போது எந்திரங்களின் துணைகொண்டு தகவல்கள் பரப்பப்பெறுகின்றன. இவ்வகையில் பெரிய வளர்ச்சியை ஊடகவியல் பெற்று வளர்ந்து வருகிறது.

## 2.3. ஊடகவியலால் ஏற்படும் நன்மைகள்



குறிப்பு

மக்கள் இனம் வாழத் தொடங்கிய காலத்தில் இருந்தே ஊடகவியல் தன் பணியைத் தொடங்கிவிட்டது. சக மனிதருடன் தொடர்பாடல் என்ற நிலையில் துவங்கிய இந்நடைமுறை இன்று பெரிதும் வளர்ந்துள்ளது.

- இன்றைக்கு ஊடகவியல் நடைமுறைகளால் பல நன்மைககள் ஏற்பட்டுள்ளன. அந்நன்மைகளில் சில இங்கு எடுத்துரைக்கப் பெறுகின்றன.
- வேண்டிய தகவலை குறுகிய காலத்தில் துல்லியமாகப் பெற ஊடகவியல் துறை உதவுகின்றது.
- புவியில் வாழும் உயிரினங்கள், தாவரங்கள், பறவையினங்கள் ஆகியவற்றின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்வதற்கு ஊடகவியல் துறை பயன்படுகிறது.
- தொல் பழங்குடிகள், தொன்மச் சின்னங்கள், தொன்ம வரலாறுகள், தொன்மை அரசுகள், அரசியல் அமைப்புகள், தத்துவங்கள் போன்றன பற்றி அறிந்து கொள்ள இத்துறை உதவுகின்றது.
- பிற நாட்டுக் கலாச்சாராங்கள், வாழ்க்கைமுறை. உணவு, உடை முறைகள், கலை வடிவங்கள், விளையாட்டுகள், பழக்க வழக்கங்கள், வழிபாட்டுமுறைகள் போன்றவற்றை அறிந்து கொள்ளமுடிகின்றது.
- இருந்த இடத்தில் இருந்து செல்லும் வழியை, பயணத்திட்டத்தை வகுத்துக்கொள்ள முடிகின்றது.
- நிலவியல் அமைப்பினை, பருவ காலச் சூழல்களை அறிந்து கொள்ளமுடிகின்றது.

❖ தலைசிறந்த படைப்பாளர்கள், கல்வியாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், கலைஞர்கள் பற்றி அறிந்து கொள்ளமுடிகின்றது. தலைசிறந்த படைப்புகளையும் வாசிக்க, பார்க்க, பதிவுசெய்யவும் வாய்ப்பளிக்கிறது.

❖ உலகச் சந்தை நிலவரம், கனிமப்பொருள் நிலவரம், புயல் நிலவரம், சுனாமி எச்சரிக்கைகள் போன்றவற்றையும் இத்துறை வழங்குகிறது.

❖ தகுந்த பின்னூட்டங்கள் அளிப்பதற்கும் இவை வாய்ப்பளிக்கின்றன.

## 2.4. சமூக ஊடகவியல்

செய்திகளைப் பரப்பும் ஊடகவியல்துறை தற்போது, சமூக ஊடகவியலாக வளர்ந்துள்ளது. ஒரு காலத்தில் செய்தியை அதிகாரத்தில் இருப்பவர்கள் மட்டுமே தர இயலும், அதனை மற்றவர்கள் ஏற்று நடக்க வேண்டும் என்ற போக்கு இருந்தது. தற்காலத்தில் அதிகாரத்தில் இருப்பவர்கள் தரும் செய்திகளை ஆராய்வதற்கான விடுதலை கிடைத்துள்ளது. இந்நிலையில் ஊடகவியல் ஒற்றைத்தன்மையில் இருந்து இரட்டைத் தன்மைக்கு நகர்ந்துள்ளது.

சமூக ஊடகம் என்பதை “ஒன்றுபட்ட விருப்பங்கள், சிந்தனைகள் கொண்டோர்கள் இணைய வழியாகத், தமக்குள் ஒரு குழுவை உருவாக்கி, அதன்வழியாகக தமக்கிடையேயான பகிர்வுகளைப் பகிர்ந்துகொள்ளும் நடைமுறை சமூக ஊடகம் ஆகின்றது. முகநூல், கட்செவி போன்றன தற்கால சமூக ஊடகங்களாகப் பரவலாக ஏற்கப்பெற்றுள்ளன. இவ்வூடகங்கள், அசை படங்கள், புகைப்படங்கள், காணொளிகள் போன்ற காட்சி வடிவங்களாகவும், பேச்சு வடிவங்களாகவும் செய்திகளை வழங்குவதால் இவை பெரிதும் பயன்படுத்தப்படுவனவாக உள்ளன.

குறிப்பு

இணைய இணைப்பின் வழியாக ஒருவர்தம் கணினியில் உள்ள செய்திகளைத் தன்னோடு தொடர்புடைய பிறரின் கணினிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு உரிய மையமாக சமூக ஊடகங்கள் அமைகின்றன. நேருக்கு நேரான பகிர்தல் முறையில் இத்தொடர்பு இயங்குவதால் பயன்பாட்டாளர்களால் இது பெரிதும் விரும்பப்படுவதாக உள்ளது.

செய்திகளைப் பகிர்தல் என்பது மட்டும் அல்லாமல் சிறுகதை, நாவல், கவிதை போன்ற படைப்புகளை வழங்குவதிலும் இச்சமூக
ஊடகங்கள் முன்நிற்கின்றன. இவற்றைப் படிக்கும் வாசகர்கள் கூட்டமும் பெருகி வருகிறது. செலவின்றி எழுத்தாளனும், வாசகனும் ஒன்றிணைய முடிகின்றது. தகுந்த பின்னூட்டங்கள் எழுதவும், அவற்றைக் கண்டு தன் எழுத்து வளத்தை மேம்படுத்திக்கொள்ளவும் படைப்பாளனுக்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

இவ்வகையில் ஊடகமானது உலகினை ஒருங்கிணைக்கவும், உலகச் செய்திகளை அறிந்து பயன்பெறவும், அதற்கு பிரதிபலிப்பினை ஏற்படுத்திக்கொள்ளவும் உதவுகின்றது.

## கூறு. 3

## ஊடகவியல் அறிஞர்களின் கருத்துகள், தோற்றம், வளர்ச்சி, வரலாறு, வகைகள், பணிகள், இன்றைய நிலை

### 3.1.ஊடகவியல் பற்றிய அறிஞர்களின் கருத்துகள்

மரபு ஊடகம், அச்சு ஊடகம், மின்னணு ஊடகம் என்று பற்பலத் துறைகளின் ஒட்டு மொத்த தலைமைத் துறையாக ஊடகவியல் விளங்குகின்றது. ஒவ்வொரு ஊடகவியல் துறையும்

தனக்கென தனித்தன்மையும், தனிப்பண்புகளும் கொண்டு விளங்குகின்றன.

இவ்வூடகவியல் பற்றிய அறிஞர்களின் கருத்துகள் ஊடகவியல் பற்றிய தெளிவான சிந்தனை முடிவுகளைத் தருவனவாக உள்ளன.

❖ "ஒரு சமூகத்தின் தொடர்பு ஊடகங்களையும், அதன் வழிமுறைகளையும் பற்றிய அறிவின்றி அச்சமூகத்தின் சமூக கலாசார மாறுதல்களைப் புரிந்து கொள்ள முடியாது" என்பது மார்சல் மைக்லுகான்˙ என்பவரின் கருத்தாகும்.

இக்கருத்தின்படி சமுதாயத்திற்கும், சமூக டகங்களுக்குமான தொடர்புமுறையை அறிந்து கொள்ளமுடிகின்றது.

❖ "விமர்சனப் பார்வை கொண்ட சுயாதீன ஆய்ந்தறியும் ஊடகமே எந்தவொரு ஜனநாயகத்திற்கும் உயிர் மூச்சாகும். ஊடகமானது அரச தலையீடு இன்றி சுயாதினமாக இயங்கல் வேண்டும். அரசாங்க அதிகாரிகளின் அதிகார வெளிப்பாட்டிற்கு எதிராக எழுந்து நிற்கிற பொருளாதார பலம் ஊடகத்திடம் இருக்க வேண்டும். தனிப்பட்ட நலன்களுக்கு எதிராக துணிச்சலுடன் எவ்வித அச்சமோ, பக்கச் சார்போ அற்ற நிலையில் செயற்படக் கூடிய போதிய அளவு சுயாதீனத்தன்மை இருத்தல் வேண்டும். அரசியலமைப்பு ரீதியான பாதுகாப்பு ஊடகத்திற்கு இருத்தல் வேண்டும். அப்போது பிரஜைகள் என்ற முறையில் எமது உரிமைகளை ஊடகம் பாதுகாக்க முடியும்" என்பது ஊடகவியல் தொடர்பான நெல்சன் மண்டேலா அவர்களின் கருத்தாகும்.

ஊடகவியல் சார்பற்று இயங்கவேண்டும். அவ்வாறு இயங்கினால் மட்டுமே மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற கருத்தினைப் பெறமுடிகிறது.

குறிப்பு

- “தரையில் சிந்திய தண்ணீர் எட்டுத் திக்கிலும் தவழ்ந்து பரவுவதைப் போல தகவல் ஊடகம் என்பது இன்றைக்குப் பல முகங்கள் கொண்டு பரந்து விரிந்துகிடக்கின்றது. பராம்பரியமான அச்சு ஊடகத்திலிருந்து பத்து ஆண்டுகளுக்கு முன் அறிமுகமான சமூக ஊடகங்களான முகநூல், டிவிட்டர் வரை பலவாறாக பரிணமித்துள்ளது தகவல் ஊடகம். நூற்று நாற்பது எழுத்துக்களுக்குள் எழுதப்பட வேண்டிய குறுஞ்செய்தியிலிருந்து, நூற்றுக் கணக்கான வார்த்தைகளில் எழுதப்படும் தலையங்கங்கள் வரை அவை அளிக்கும் தகவல்கள் பல கோடி நூறாயிரம்” என்பது பத்திரிக்கையாளர் மாலன் அவர்களின் கருத்தாகும்.

  இக்கருத்தின் வழியாக ஊடகவியல் பரந்த பரப்புடையது, அதன் வளர்ச்சி பல கோடி நூறாயிரம் செய்திகளைப் பரப்புவதாக உள்ளது என்பதை உணரமுடிகின்றது.

- “ஊடகங்கள் இல்லாத உலகை இன்றைக்கு கற்பனை செய்துகூட பார்க்க இயலாது. நவீன வாழ்வில் ஊடகங்கள் இரண்டறக் கலந்து விட்டன என்பது மிகையல்ல. உண்மை” என்பது சு.பொ. அகத்தியலிங்கம் அவர்களின் கருத்தாகும்.

  மக்கள் வாழ்வில் ஊடகம் இரண்டறக் கலந்து விட்ட நிலையை இக்கருத்து எடுத்துரைக்கிறது.

- ”வெகுஜன ஊடகங்கள் மக்களைக் காக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு வாய்ந்த சமூகச் சாதனங்கள்” என்கிறார் எஸ்.மோசேஸ்.

மக்களைக் காக்கும் கவசம் போன்றது ஊடகவியல் என்பதை மேற்கருத்து உரைக்கின்றது.



இவ்வாறு ஊடகவியலின் பரப்பு, தன்மை, அதன் வலிமை ஆகியன பற்றிய கருத்துகளை அறிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

## 3.2.தோற்றமும் வளர்ச்சியும்

ஊடக வழியான தகவல் தொடர்பு என்பது மனிதகுலம் தோன்றிய நாள் முதற்கொண்டே தோற்றம் பெற்றிருக்க வேண்டும். விலங்குகளை வேட்டையாடிய வேட்டைச் சமுதாயத்தில் சைகை மொழிகள், ஒலிக்குறிப்புகள் போன்றவற்றால் ஒரு மனிதன் தன் உணர்வை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கவேண்டும். அவ்வகையில் மனிதகுலம் தோன்றிய நாள் தொட்டே தகவல் பரிமாற்றம் இருந்துள்ளது.

அது மெல்ல மெல்ல வளர்ந்து புதிய கண்டுப்பிடிப்புகள் வளர வளர தானும் வளர்ந்தது. அச்சு எந்திரம் வந்த போது அச்சு ஊடகமாகவும், வானொலி கண்டுபிடித்தபோது வானொலி ஊடகமாகவும், தொலைக்காட்சி கண்டுபிடிக்கப்பட்டபோது தொலைக்காட்சி ஊடகமாகவும், கணினி கண்டறிந்தபோது கணினி ஊடகமாகவும், இணையம் கண்டுபிடிக்கப்பட்டபோது இணைய ஊடகமாகவும் அது வளர்ந்தது. இன்னமும் அறிவியல் கண்டுபிடிப்புகள் வர வர அவை சார்ந்த ஊடகமாகவும் அது பரிணமிக்கும்.

## 3.3. ஊடகவியலின் வகைகள்

ஊடகவியல் பல்வேறு வகைப்பட்டதாக வளர்ந்து வருகிறது என்பது ஒரு புறம். ஊடகச் சாதனங்களும் பல்வேறு வகையினதாக வளர்ந்துவருகிறது என்பது இன்னொரு பக்கம். இங்கு முதலில் ஊடகவியலின் வகைகள் சுட்டப்பெறுகின்றன. இதன் பின்பு ஊடக சாதனத்தின் வகைகள் விரித்துரைக்கப்பெறுகின்றன.

## 3.3.1.ஊடக வடிவங்களின் வகைகள்



குறிப்பு

### 3.3.1.1.வழக்காற்று ஊடகவியல்

குறிப்பிட்ட கருத்துரைகளை மக்கள் ஏற்கும் வண்ணம் செயல்படும் துறை வழக்காற்று ஊடகவியல் ஆகும்.

### 3.3.1.2.ஒளிபரப்பு ஊடகவியல்

வானொலி அல்லது தொலைக்காட்சிகளில் எழுத்து அல்லது பேச்சு வடிவிலான ஊடகவியல்

### 3.3.1.3.குடிமகன் ஊடகவியல்

இத்துறை குடிமகன் தன் உரிமைகளுடன் பங்கேற்கும் நிலைப்பாட்டுடன் கூடியது.

### 3.3.1.4.தரவுத்தள ஊடகவியல்

எண்கள் மற்றும் தரவுகளில் இருந்து செய்திகளைத் திரட்டுதல் கண்டுபிடித்தல், செய்திகளைக் கூற தரவுகளையும் எண்களையும் பயன்படுத்துதல்.

### 3.3.1.5.வானியல் புகைப்பட ஊடகவியல்

ஆளில்லாத பறக்கும் ஒளிப்பட கருவிகளை இயக்கி சம்பவங்களை நேரடியாக படம்பிடித்தல்

### 3.3.1.6.கொன்ஸோ ஊடகவியல்

இம்முறை ஊடகவியலானது ஹன்டர் எஸ். தாம்சன் என்பவரால் உருவாக்கப்பெற்றது. இது செய்திகளை மிகவும் தனிப்பட்ட பாணியில் வெளிப்படுத்தும் பாங்கினை உடையது

### 3.3.1.7.ஊடாடும் ஊடகவியல்

இணைய இதழ்களுக்கான ஊடகவியல் இதுவாகும்.

### 3.3.1.8.துப்பறிதல் ஊடகவியல்

சமூகப் பிரச்சனைகள் தொடர்பாக ஆழமாகவும் விரிவாகவும் துப்பறிந்து அதனைத் தீர்க்கும் வழிமுறைகளை நோக்கி செய்திகளை வெளியிடுவது

### 3.3.1.9.ஒளிப்பட ஊடகவியல்

புகைப்படங்கள் மூலமாக செய்திகளை வெளியிடுதல் ஒளிப்பட ஊடகவியலாகின்றது.

## 3.4. பணிகள்

ஊடகங்கள் மனித வாழ்வில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றன. மேலும் ஒத்த கருத்துடையவர்களை இணைக்கும் பெரும்பணியையும் ஊடகங்கள் செய்துவருகின்றன. ஊடகங்கள் வளர்ந்த நாடுகள், வளரா நாடுகள், படித்தவர்கள், படிக்காதவர்கள், ஆண்கள், பெண்கள், பெரியவர்கள், சிறியவர்கள் என எல்லாரையும் பாகுபாடின்றி செய்திகளைப் பெறவைக்கின்றன. இச்செய்திகளை வழங்குவதன் வழியாக

1. கவனத்தை ஈர்த்தல்
2. சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்துதல்
3. விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
4. நடத்தையை மாற்றி அமைத்தல்
5. வாழ்வில் அறநெறியை ஏற்க வைத்தல்
6. வன்முறையைப் புறக்கணிக்க வைத்தல்
7. ஆவணப் படுத்தல்

போன்ற பல பணிகளை அமைதியாக ஊடகவியல் செய்துவருகின்றது.

மேலும் மக்களுக்கு

1. அறிவித்தல்

குறிப்பு

2. அறிக்கையிடுதல்
3. பிரதிபலிப்பை ஏற்படுத்தல்
4. மகிழ்வித்தல்

போன்ற பணிகளையும் செய்திகள் வழங்குவதன் வாயிலாக ஊடகவியல் செய்து வருகின்றது.

## 3.5. இன்றைய நிலை

இன்றைய நிலையில் தனித்த ஒரு மனிதர் சமுதாயத்திற்குத் தேவையான கருத்துகளை அதிக செலவின்றி இயந்திரங்கள் வாயிலாக இருபத்து நான்கு மணி நேரமும் வழங்கிக்கொண்டிருக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தனிமனிதர்கள் காட்சிகளைப் படம் பிடித்தல் வாயிலாக சமுதாயக் குற்றங்களைக் களைந்துவிட முடிகிறது. கண்காணிப்புப் படப்பிடிப்புக் கருவிகள் போல ஊடகங்கள் இன்று செயல்பட்டு குற்றமிலா சமுதாயத்தை உருவாக்க முயல்கின்றன.

ஊடகங்கள் பெருவளர்ச்சியை எட்டியுள்ளன. என்றாலும் இவற்றாலும் சில குறைபாடுகள் சமுதாயத்திற்கு ஏற்பட வாய்ப்பு உண்டு. ஊடகங்கள் அறநெறியைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும். அவதூறான செய்திகளைப் பரப்பி விடுதல் கூடாது. மக்களின் கவனத்தைத் திசை திருப்பும் வகையில் செய்திகளைத் தருதல் கூடாது. மக்களை செய்தி வழங்குதவன் வாயிலாகப் பிளவுபடுத்திவிடக் கூடாது. அறியாமையை விளக்கி அறிவியல் கண்ணோட்டத்துடன் மக்களை வாழ வைக்கவேண்டும். சமுதாயத்திற்கான பண்பாடு, கலாச்சாரத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். ஆண், பெண், மூன்றாம் பாலினத்தார் உரிமைகள், மதிப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும். சமுதாய நிறுவனங்களின் மதிப்புகள் பாதுகாக்கப்பட வேண்டும். தேர்தல் காலங்களில் மிகக் கவனமாக செய்திகள் பரிமாறப்படவேண்டும். இவையெல்லாம் நடைபெற ஊடகத் தணிக்கை முறை அவசியம்.

ஊடகத்திற்கெனத் தனித்துவமான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

ஊடகங்கள் தவறுசெய்வதில்லை. மாறாக அதனைப் பயன்படுத்தும் மனிதர்கள் தான் தனது சுயநலத்திற்காக ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர் என்பதே உண்மையாகும். ஊடகங்கள் மூலம் மனித மாண்பும் அறநெறியும் வளரவேண்டும்.

# கூறு -4.

## வார, மாத , காலாண்டு, அரையாண்டு, ஆண்டு இதழ்கள் சிறுவர், மகளிர் இலக்கியம்

குறிப்பு

### 4.1.இதழ் ஊடகம்

ஊடகவியலின் ஒரு பகுதியாக விளங்கும் இதழியல் குறிக்கத்தக்க ஆளுமைப் பண்பு உடையதாக விளங்குகின்றது. உடனுக்கு உடன் செய்திகளைக் கலைவடிவில் பிறருக்குத் தரும் ஊடகம் இதழ் ஊடகம் ஆகும். அரசியலுடன், அரசாங்கத்துடன், சமுதாயத்துடன், இலக்கியத்துடன் பெருத்த தொடர்புடையதாகவும் இதழியல் விளங்குகின்றது. நாளுக்கு நாள் செய்திகளை வழங்கும் இடையறாத பணியை இதழியல் செய்து வருகிறது. இது தவிர மாதந்தோறும், வாரந்தோறும், காலாண்டுதோறும், அரையாண்டு தோறும் செய்திகளைப் படைப்புகளை வழங்கும் முறைமையிலும் இதழ்கள் வெளிவந்து கொண்டுள்ளன. இன்றைய செய்தி நாளைய வரலாறு என்ற அடிப்படையில் இதழியல் மிக முக்கியமான ஆவணமாகக் கொள்ளப்பெறுகின்றது.

வார இதழ்கள், மாத இதழ்கள், காலாண்டு இதழ்கள், அரையாண்டு இதழ்கள், ஆண்டு இதழ்கள் போன்றன பற்றிய செய்திகள் இங்குத் தொகுத்து தரப்பெறுகின்றன.

### 4..1.1.வார இதழ்கள்

ஒரு வாரத்தில் நடந்த செய்திகளைத் தொகுத்து செய்திக் கட்டுரைகளாக வெளியிடும் இதழ்கள் வார இதழ்கள் ஆகின்றன. இவை குறிப்பிட்ட ஒருநாளில் வெளிவரும் என்று வரையறுக்கப்பெற்றாலும் அதற்கு முன்னதாகவே மக்களைச் சென்று சேரும் வகையில் வெளிவந்து கொண்டுள்ளது.

குறிப்பு

ஒரு நிகழ்ச்சி எவ்வாறு நடந்தது, எப்படி நடந்தது, ஏன் நடந்தது, எதற்காக நடந்தது என்ற நிலைகளில் ஆராய்ந்து வார இதழ்களில் செய்திக்கட்டுரைகள் இடம் பெறச் செய்யப்பெறுகின்றன.

வார இதழ்களில்

1. இலக்கியம்,
2. சமயம்,
3. தத்துவம்,
4. கலை,
5. தொழில்,
6. திரைப்படம்,
7. கல்வி,
8. பொருளாதாரம்,
9. விளையாட்டு
10. நகைச்சுவை
11. கதை,
12. கட்டுரை
13. ஓவியங்கள்
14. விளம்பரங்கள்

போன்றன இடம் பெறுகின்றன. வார இதழ்கள் அவை வெளியாகும் கால இடைவெளி அடிப்படையில் பின்வரும் நிலையில் பகுக்கலாம்.

### 4.1.2.வாரம் மும்முறை இதழ்கள்

வாரத்தின் ஏழு நாட்களில் ஒரு நாள் விட்டு ஒருநாள் என்ற அடிப்படையில் வாரத்தில் மூன்றுமுறை வெளியாகும் இதழ்கள் மும்முறை இதழ்கள் எனப்படுகின்றன. இவை பெரும்பாலும் நாளிதழ் போன்றனவே ஆகும். தமிழின் முதல் இதழான காலக்கணிதன் வாரம் மும்முறை வெளியிடப்பெறும் கால அளவில்

வெளியிடப்பெற்றது. சுதேச மித்திரன் என்ற இதழும் வாரம் மும்முறை இதழாகவே வெளிவந்தது.

### 4.1.3.வாரம் இருமுறை இதழ்கள்

வாரத்தின் கால அளவை இரண்டாகப் பகுத்துக்கொண்டு மூன்று நாள்களுக்கு ஒருமுறை என்ற அளவில் வெளிவரும் இதழ்கள் வாரம் இருமுறை வெளிவரும் இதழ்கள் எனப்படுகின்றன. புனித ஜார்ஜ் கெஜட் என்ற இதழ் 1832 ஆம் ஆண்டில் வாரம் இருமுறை வெளிவரும் இதழாக விளங்கியது. தமிழில் வெளிவரும் ஜூனியர் விகடன், குமுதம் ரிப்போர்ட்டர் போன்றன இவ்வகையில் அடங்கும்.

### 4.1.4.வார இதழ்கள்

வாரத்திற்கு ஒருமுறை வெளியாகும் இதழ்கள் வார இதழ்கள் எனப்படுகின்றன. இவ்விதழ்களில் செய்திகளோடு சிறுகதை, கட்டுரை, கவிதை போன்றவையும் இடம் பெறுகின்றன. 1823ஆம் ஆண்டு புதுவையிலிருந்து வெளியான புதுவை அரசிதழ் தமிழில் வெளிவந்த முதல் வார இதழ் ஆகும். வார இதழ்கள் இலக்கியத் தன்மை உடைய இதழ்களாக விளங்குகின்றன. குமுதம், ஆனந்த விகடன், குங்குமம், கல்கி போன்றன வாரந்தோறும் வெளிவரும் இதழ்களாக உள்ளன.

### 4.1.5.மாத இதழ்கள்

மாதந்தோறும் வெளிவரும் இதழ்கள் மாத இதழ்கள் எனப்படுகின்றன. இவை திங்கள் இதழ்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. சில தமிழ் மாத இதழ்கள் தமிழ் மாதத்தை அடிப்படையாக வைத்து வெளிவருகின்றன. மாத இதழ்களின் பக்க அளவும், செய்திகளின் அளவும் கூடுதலாக இருக்கும். இவற்றையும் அவை வெளிவரும் கால இடைவெளியை அடிப்படையாக வைத்துப் பகுக்க முடிகின்றது.

குறிப்பு

### 4.1.6.மாதம் மும்முறை இதழ்கள்

ஒரு மாதத்தில் மூன்றுமுறை வெளிவரும் இதழ்கள் மாதம் மும்முறை இதழ்கள் எனப்படுகின்றன. 1833ஆம் ஆண்டு வெளியான இராசவிருத்திபோதினி என்பது தமிழின் முதல் மாதம் மும்முறை இதழாகும். தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளில் இவ்விதழ் வெளிவந்தது. இதற்கு அரசாங்கம் பண உதவியையும் அளித்தது. மதியம், திருவாங்கூர் அபிமானி முதலிய இதழ்கள் மாதம் மும்முறை இதழ்களில் குறிப்பிடத்தகுந்தவையாகும்.

### 4.1.7.மாதம் இருமுறை இதழ்கள்

மாதத்தில் இருமுறை அதாவது பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வெளியாகும் இதழ்கள் மாதமிருமுறை இதழ்கள் எனப்படுகின்றன. 1835 ஆம் ஆண்டு சென்னையிலிருந்து வெளியான சத்திய தூதன் என்ற இதழ் தமிழின் முதல் மாதமிருமுறை இதழாகும். இது கிறித்துவ சமயக் கல்விக் கழக வெளியீடாகத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் வெளியானது. “இலாசரசு” என்பவரை ஆசிரியராகக் கொண்டு மற்றொரு சத்தியதூதன் இதே ஆண்டில் ஒருபைசா விலையில் சென்னையிலிருந்து வெளியானது.

தற்போது அவள் விகடன், இந்தியா டுடே போன்றன மாதமிருமுறை இதழ்களாக வெளிவந்து கொண்டுள்ளன.

### 4.1.8.மாத இதழ்கள்

மாதம் ஒருமுறை வெளிவரும் இதழ்களை மாத இதழ்கள் என வரையறை செய்வர். நிறுவன இதழ்கள், துறை சார்ந்த இதழ்கள், ஆராய்ச்சி இதழ்கள் போன்ற இதழ்கள் மாத இதழ்களாக வெளிவந்து கொண்டுள்ளன. 1812ஆம் ஆண்டு வெளியான மாச தினச் சரிதை என்ற இதழ் தமிழின் முதல் மாத இதழாகும். தற்போது கலைமகள், காலச்சுவடு, செந்தமிழ்,

செந்தமிழ்ச் செல்வி, புதுகைத் தென்றல், மக்கள் சிந்தனை, அறிக அறிவியல் போன்ற இதழ்கள் மாத இதழ்களாக வெளிவந்து கொண்டுள்ளன.

## 4..1.9. ஓர் ஆண்டின் காலப் பகுதியில் வெளிவரும் இதழ்கள்

ஓர் ஆண்டின் காலப்பகுதியில் வெளிவரும் இதழ்கள் ஆண்டு இதழ்கள் எனப்படுகின்றன. பள்ளிகள், கல்லூரிகளில் வெளியிடப்பெறும் ஆண்டுமலர்கள் இவ்வகையில் அடங்கும். இவ்வாண்டு இதழ்களும் வெளிவரும் கால அளவில் பின்வரும் பகுப்புகளை உடையதாகும்.

### 4.1.9.1.காலாண்டிதழ்

ஓர் ஆண்டின் காற்பகுதியாக விளங்கும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளிவரும் இதழ்கள் காலாண்டிதழ்கள் ஆகும். இவ்வகை இதழ்கள் பெரும்பாலும் ஆய்வு மற்றும் துறை சார்ந்த இதழ்களாக உள்ளன. 1815ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து வெளியான யாழ்ப்பாணத் தமிழ்த் திருச்சபை இதழ் முதல் தமிழ்க் காலாண்டிதழாகும். தமிழில் தொடரும் என்ற இதழ் காலாண்டு இதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

### 4.1.9.2. அரையாண்டிதழ்

ஆண்டின் அரைப்பகுதியான ஆறுமாதங்களுக்கு ஒருமுறை வெளியாகும் இதழ்களை அரையாண்டு இதழ்கள் எனப் பகுக்கப்படுகின்றன. 1894ஆம் ஆண்டு வெளியான பிரம்ம வித்யா என்பது தமிழின் முதல் அரையாண்டிதழ் ஆகும்.

### 4.1.9.3.ஆண்டிதழ்

ஆண்டுதோறும் வெளியாகும் இதழ்கள் ஆண்டிதழ்கள் எனப்படும். 1885ஆம் ஆண்டு வெளியான சாமியின் ஆண்டிதழ் முதல் தமிழ் ஆண்டிதழாகும். மனோரமா என்ற செய்தி நிறுவனம்

ஆண்டுதோறும் ஓர் ஆண்டில் நடைபெற்ற செய்திகளை ஆண்டிதழாகக் கொண்டுவருகிறது.



இவ்வாறு இதழ்கள் தாம் வெளிவரும் கால இடைவெளி அடிப்படையில் பல்வகைப் பகுப்புகளைக் கொண்டுள்ளன.

## 4.2. சிறுவர் இலக்கியம்

சிறுவர் இலக்கியம் என்பது வளர்ந்து வரும் இலக்கிய வகையாக உள்ளது. இதழ்கள் வழியாகவும், தனிநபர் படைப்புகள் வழியாகவும் சிறுவர் இலக்கியம் எழுச்சி பெற்று வளர்ந்து வருகிறது. பதின்ம வயது சிறுவர்கள், இருபது வயதைத் தொட உள்ள சிறுவர்கள் போன்றோரைக் களமாகக் கொண்டு சிறுவர் இலக்கியம் படைக்கப்பெறுகின்றது.

சிறுவர் இலக்கியம் என்பது சிறுவர்களுக்கான மொழிநடை, சிறுவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய கருப்பொருள், சிறுவர்களைப் படிக்கத் தூண்டும் வடிவ அழகு, வண்ணக்கலவை ஆகியன கொண்டு படைக்கப்பட வேண்டியுள்ளது. சிறுவர்கள் தமக்குத்தாமே படைத்துக்கொள்ளும் இலக்கியமும் சிறுவர் இலக்கியம் என்ற நிலையில் அமையும் என்றாலும் பெரும்பான்மையும் சிறுவர்களுக்காக பெரியவர்கள் சிறுவர்தம் மனநிலையை ஒட்டி எழுதுவது சிறுவர் இலக்கியமாகின்றது.

சிறுவர் இலக்கியம் என்பது எளிமையான எதுகை மோனை உடைய பாடல்கள், எளிய கதைகள், படக்கதைகள், சிறுகதைகள், நாடகங்கள், சிறுவர்க்கான நாவல்கள், விளையாட்டுகள், புதிர்கள், விடுகதைகள், எளிய கணக்குகள், காரண காரியத் தேடல்கள் போன்ற வகைகளில் படைக்கப்பெறுகின்றது. இவை குழந்தைகள் படிக்கும் பாடங்களில் இருந்து வேறானவையாகும். குழந்தைகள் படிக்கும் பாடங்கள் அறிவினை வளர்க்கச் செய்யும் முயற்சிகளாகும். குழந்தைகள் படிக்கும் படைப்புகள் அவர்களை

மகிழ்ச்சிப்படுத்தி அவர்களின் குழந்தைமையை அவர்களுக்கு உணர்த்தும் உன்னதப் படைப்புகளாகும்.

## 4.2.1.சிறார் இலக்கிய வரலாறு

1901 ஆம் ஆண்டில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை குழந்தைகளுக்கான பாடல்களைப் பாடினார். 1915 ஆம் ஆண்டு ஓடிவிளையாடு பாப்பா என்று பாப்பா பாட்டு பாடினார். அவரே புதிய ஆத்திச்சூடியையும் எழுதினார். இவர்களைத் தொடர்ந்து, கா.நமச்சிவாய முதலியார், மணி திருநாவுக்கரசு மயிலை. முத்துகுமார சுவாமி போன்றோர் சிறார் இலக்கிய வளர்ச்சிக்கு உதவினர்.

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா வருகைக்குப் பின்பு குழந்தை இலக்கியம் மலர்ச்சி பெற்றது. தன் இளம் வயதிலேயே குழந்தைப் பாடல்களைப் பாடத்தொடங்கிய இவர் அறுபது நூல்களைக் குழந்தைகளுக்காக இயற்றியுள்ளார். இவரது முதல் நூல் மலரும் உள்ளம் என்பதாகும். பாட்டிலே காந்தி, பாப்பாவுக்குப் பாட்டு, பெரியோர் வாழ்விலே, நல்ல நண்பர்கள் (கதை), சின்னஞ்சிறு வயதில், பிள்ளைப்பருவத்திலே ஆகியன இவர் படைத்த நூல்களில் சிலவாகும். இவர் குழந்தை எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பினைத் தொடங்கினார். இவ்வமைப்பு இன்றுவரை சிறுவர் இலக்கியம் சிறக்க பாடுபட்டுவருகிறது. இவரின் மகளார் தேவி நாச்சியப்பன் இவரின் குழந்தை இலக்கியப் பணிகளைத் தொடர்ந்து வருகிறார். இவரும் குழந்தை இலக்கியப் படைப்பாளியாக விளங்குகிறார்.

மயிலை சிவமுத்துவும் குழந்தை இலக்கிய முன்னோடிகளில் ஒருவராவார். இவர் முத்துப் பாடல்கள், தங்க நாணயம், நல்ல எறும்பு, நல்ல குழந்தை, முத்துக் கதைகள், சிவஞானம், நாராயணன் போன்ற பல நூல்களைப் படைத்துள்ளார். நித்தில வாசகம் என்ற பெயரில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புகளுக்கான

பாடநூல்களைப் படைத்தார். குழந்தைகளுக்கான இதழ் ஒன்றையும் இவர் நடத்தி வந்தார்.

குறிப்பு

பெரியசாமி தூரன் என்பவர் சூரப்புலி, மாயக்கள்ளன், ஆனையும் பூனையும், பறக்கும் மனிதன், ஓலைக்கிளி, தம்பியின் திறமை, நாட்டிய ராணி, மஞ்சள் முட்டை, கொல்லிமலைக் குள்ளன், கடக்கிப்பட்டி முடக்கிப்பட்டி போன்ற பல நூல்களைப் படைத்துக் குழந்தை இலக்கியம் வளர பாடுபட்டார்.

இவர்களைத் தொடர்ந்து தம்பி சீனிவாசன், நெ.சி.தெய்வசிகாமணி, பூவண்ணன், கிருங்கை சேதுபதி, முதலியவர்களும் இத்துறையில் பங்கேற்று உள்ளனர்.

### 4.2.2.சிறார் இலக்கிய வளர்ச்சியில் இதழ்களின் பங்கு

தமிழகத்தின் சிறார் இலக்கியப் பொற்காலமாக 1940 முதல் 1970 வரையான காலத்தைக் குறிப்பிடலாம். இக்கால எல்லையில் வெளிவந்த குழந்தை இதழ்களின் எண்ணிக்கை ஐம்பதைத் தாண்டுகின்றது. அவற்றில் சிலவற்றின் பெயர்கள் பின்வருமாறு.

1. அணில் மாமா,
2. அணில்,
3. அம்பி,
4. அம்புலி மாமா,
5. அரும்பு
6. அல்வா,
7. அன்னம்,
8. கங்கணம்,
9. கண்ணன்,
10. கரும்பு,
11. கல்கண்டு,
12. கிளி,
13. குஞ்சு,

14. கோகுலம்,

15. சங்கு,

16. சந்த மாமா,

17. சந்திர ஒளி,

18. சாக்லெட்,

19. சித்திரக் குள்ளன்,

20. சித்திரா,

21. சிற்பி,

22. சிறுவர் உலகம்,

23. சின்னக் கண்ணன்,

24. டமாரம்,

25. டிங் – டாங்,

26. தமிழ்ச்சிட்டு,

27. துளிர்,

28. பாப்பா மலர்,

29. பாப்பா,

30. பார்வதி,

31. பாலர் மலர்,

32. பாலர் முரசு,

33. பாலவிநோதினி,

34. பாலியர் நேசன்,

35. பூஞ்சோலை,

36. பூந்தளிர்,

37. பொம்மை வீடு,

38. மத்தாப்பு,

39. மயில்,

40. மிட்டாய்,

41. முத்து,

42. முயல்,

43. ரத்னபாலா,

44. ரேடியோ,

45. வானர சேனன்,

46. ஜிங்லி,

47. ஜில் ஜில்

குறிப்பு

போன்ற அக்காலத்தில் வெளிவந்த சிறுவர் இதழ்களாகும். இவற்றில் அம்புலி மாமா, பூந்தளிர் போன்ற சில இன்னமும் வெளிவந்து கொண்டுள்ளன.

வெ.சுப.நடேசன் என்பவர் பாலர் மலர், டாமாரம், சங்கு ஆகிய மூன்று இதழ்களை அழ. வள்ளியப்பாவை ஆசிரியராகக் கொண்டு வெளியிட்டார். ‘டமாரம்’ குழந்தைகளின் படைப்புகளுக்கு அதிக இடமளித்தது. காலணா விலை கொண்ட இவ்விதழ் இருபதாயிரம் படிகள் விற்பனை கண்டுள்ளது.

அக்காலத்தில் காலணா, அரையணா, ஓரணா விலையில் வண்ண ஓவியங்களுடன் குழந்தை இதழ்கள் அழகுடன் வெளிவந்தன. ‘அணில்’ எனும் இதழினை சக்தி வை. கோவிந்தன் வெளியிட்டார். இவ்விதழில் தமிழ்வாணன் அறிமுகப் படுத்தப்பட்டார்.

‘குழந்தைகள் செய்தி’ என்ற நாளிதழைக் குழந்தைகளுக்காக முதன் முதலில் நடத்தியவர் சக்தி வை.கோவிந்தன் ஆவார். ‘குழந்தைகள் செய்தி’தான் தமிழ்க் குழந்தைக்கான முதல் தினசரி. கடைசி தினசரியும் அதுதான்.

### 4.2.3.பணிகள்

குழந்தை இலக்கிய இதழ்கள் மிக முக்கியமான மூன்று பணிகளைச் செய்தன.

1. குழந்தைகள் படித்து இன்புற வாய்ப்பளித்தது.
2. குழந்தைகளுக்காக எழுதுபவர்களுக்கு உரிய வாய்ப்புகளை அதிகரித்தது.

3. குழந்தைகளை எழுத வைத்தது.

ஆகியன குழந்தை இலக்கிய இதழ்கள் செய்கின்ற முப்பெரும் பணிகள் ஆகும். இம்மூன்றும் சிறார் இலக்கியம் வளர்வதற்கான காரணங்கள் ஆகும்.

### 4.2.4.வகைகள்

சிறார் இலக்கிய வளர்ச்சியை இருவகைகளாகப் பகுக்க இயலுகின்றது.

1. குழந்தைகளுக்கான இதழ்கள்
2. குழந்தைகளுக்கான இணைப்புப் பகுதியை வழங்கும் பெரும் இதழ்கள்

என்பன அவ்விரு வகைகளாகும்.

#### 4.2.4.1. குழந்தைகளுக்கான இதழ்கள்

அழ. வள்ளியப்பா பூஞ்சோலை என்ற இதழையும், பூவண்ணன் கரும்பு என்ற இதழையும், சக்தி வை. கோவிந்தன் அணில் என்ற இதழையும், நாரா. நாச்சியப்பன் முத்து என்ற இதழையும் , கலைவாணர் மான் என்ற இதழையும் நடத்தினர்.

1947 முதல் வெளிவந்த ‘அம்புலிமாமா’ என்ற இதழ், சிறுவர்களைக் கட்டிப் போட்ட இதழ்களில் ஒன்று. இந்தியாவிலுள்ள 11 மொழிகளில் வெளி வந்தது. அதில் தமிழும் ஒன்று. 60,000 பிரதிகளுக்கும் மேலாக விற்பனையானது. இரு வண்ணங்களில் வந்தது. இன்று நின்று விட்டது.

தனித்தமிழ் இயக்கத்தின் சார்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ‘தமிழ்ச்சிட்டு’ என்னும் சிறுவர் இதழை நடத்தினார். ‘துளிர்’ எனும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழாகும். ‘அரும்பு’ என்ற இதழில் தன்னம்பிக்கைச் செய்திகள் வழங்கப்பெற்றன. சிங்கப்பூர் குழந்தைகளுக்காக வளர்நிலா என்ற

பத்திரிக்கை தமிழகத்தில் இருந்துநடத்தப்பட்டது. பெரியார் பிஞ்சு என்ற இதழ் பகுத்தறிவுச் சிந்தனைகளைச் சிறார்களிடம் பரப்பி வருகிறது. சுற்றுச் சூழல் செய்திகளைச் சிறார்களுக்கு வழங்க பூவுலக மின்மினி என்ற இதழ் துணைபுரிந்து வருகிறது.

'தும்பி', மின்மினி, பொம்மி, சம்பக், குட்டி ஆகாயம், றெக்கை, பஞ்சு மிட்டாய் போன்ற இதழ்கள் தற்காலத்தில் சிறார் இலக்கியத்தை வளர்த்து வருகின்றன.

### 4.2.4.2.குழந்தைகளுக்கான இணைப்புப் பகுதியை வழங்கும் பெரும் இதழ்கள்

கலைமகள், ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்கள் சிறுவர் பகுதியை இணைப்பாக இடம் பெறச் செய்தன. கலைமகள் இதழ் 'கண்ணன்' என்ற சிறுவர் இதழை வெளியிட்டது. இதன் ஆசிரியராகப் பிரபல எழுத்தாளர் ஆர்.வி. இருந்தார். இதனுள் ராஜாஜி, கி.வா.ஜ. கிருபானந்த வாரியார், பெ.தூரன், கி.சந்திரசேகரன் போன்ற பெரியோர்களும் சிறுவர்களுக்கு எழுதினர். 'கண்ணன்' நிறைய சிறுவர் கதைகளை வெளி யிட்டது. சிறுவர் நாடகங்களையும் பாடல்களையும் வெளியிட்டது. 'கண்ணன் கழகம்' என்றும் சிறுவர்கள் பங்கேற்கும் கூட்டங்களை நடத்தி, குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு உதவியது. 22 ஆண்டுகள் வெளிவந்த 'கண்ணன்' 1971-இல் நின்று போனது.

கல்கி 'கோகுலம்' என்ற சிறுவர் இதழைக் கொண்டு வந்தது. 40 ஆண்டுகளுக்கு மேலாக வெளி வந்த கோகுலம் சமீப ஆண்டுகளில் நின்று போனது. மூத்த குழந்தை எழுத்தாளர் ரேவதி ஆசிரியராக இருந்து புதியவர்கள் எழுத ஊக்கமளித்தார்.

விகடன் குழுமம் சுட்டி விகடன் என்பதை வெளியிட்டது. இவ்விதழ் பல மாதிரிகள் செய்ய குழந்தைகளுக்குப் பயிற்சி

தந்தது. இருப்பினும் இதுவும் நின்று போனது.

குறிப்பு

தினமணி சிறுவர் மணியையும், தினத்தந்தி தங்க மலரையும், தினமலர் சிறுவர் மலரையும் வெளியிடுகின்றன.

இவ்வாறு குழந்தைகளுக்கான இதழ்கள் சிறார் இலக்கிய வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியுள்ளன. தற்போது சாகித்திய அகாதமி வழங்கும் பால புரஸ்கார் விருது பல குழந்தை எழுத்தாளர்களின் பணியைக் கௌரவித்து வெளிப்படுத்தி வருகிறது. கமலவேலன், கவிஞர் செல்லகணபதி, வேலு சரவணன், ரேவதி, சேதுபதி, தேவி நாச்சியப்பன் போன்றோர் பால சாகித்திய புரஸ்கார் விருது பெற்றவர்கள் ஆவர். இவ்விருது குழந்தை எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளித்து வருகிறது.

## 4.3.மகளிர் இலக்கியம்

பெண்ணியம் சார்ந்த கருத்துகள் தற்போது உலகின் பல பக்கங்களிலும் பரவியுள்ளன. சமத்துவமாக, அதனைத் தாண்டி மகளிர்க்கான உரிமைகளுடன் வாழ்வதற்கான அடிப்படையைப் பெண்ணிய விழிப்புணர்ச்சி தந்து, பெண்களை முன்னேற்றி வருகிறது. மகளிரால் எழுதப்படும் இலக்கியங்களே மகளிர் இலக்கியம் என்ற நிலைப்பாடு பொருத்தமுடையதாக உள்ளது. மகளிர்க்காக ஆண்கள் எழுதும் இலக்கியம் போலச் செய்தல் போன்றதே ஆகும். அல்லது ஆண்களின் பெண்கள் குறித்த பார்வையை வெளிப்படுத்துவதே ஆகும்.

சங்க காலம் முதற்கொண்டு மகளிர் இலக்கியம் வளர்ந்து வந்ததற்கான சான்றுகள் உள்ளன. இதற்கு முன்னதாக வாய்மொழி இலக்கியங்களாக மகளிர் இலக்கியம் வளர்ந்திருக்கவேண்டும். காக்கைப் பாடினியார், ஔவையார், பொன்முடியார், பெருங்கோப்பெண்டு போன்ற முப்பதுக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் மகளிர் இலக்கியம் படைத்துள்ளனர். இவர்களைத்

தொடர்ந்து காரைக்காலம்மையார், ஆண்டாள் ஆகியோரின் பங்களிப்பும் குறிக்கத்தக்கது. இவர்களுக்கு அடுத்த நிலையில் வை.மு கோதைநாயகி அம்மாள், செய்யூர் சாரநாயகி அம்மாள், சித்தி ஜுனைதா பேகம், மூவலூர் இராமாமிர்தத்தம்மாள், வசுமதி, குமுதினி, அநுத்தமா போன்றவர்கள் புனைகதை இலக்கியம் படைத்தனர். அசலாம்பிகை அம்மையார் காந்தி புராணம் என்ற காப்பியம் பாடியவர் ஆவார். நீலாம்பிகை அம்மையார் கட்டுரை இலக்கியத்தில் முன்னிற்பவர். லட்சுமி, அனுராதாரமணன், சிவசங்கரி, வாஸந்தி போன்றோரும் மகளிர் இலக்கியப் பாதையில் பயணித்தவர்கள் ஆவர். சிவகாமி, திலகவதி, கனிமொழி, மீனாட்சி, குட்டிரேவதி, திலகபாமா, தமிழ்ச்செல்வி, சுமதி, பாமா, மாலதி மைத்திரி, சல்மா போன்றோரும் பெண்ணியக் கருத்தாக்கங்களுக்கு இலக்கிய வடிவம் தருவோராக விளங்கி வருகின்றனர். பிரேமா, தேவதத்தா, கமலி போன்றோர் ஆய்வாளர்களாக விளங்கி வருகின்றனர்.

மகளிர்க்கான இலக்கியம் என்பது சகோதரித்துவத் தன்மை வாய்ந்ததாகும். பெண்களுக்கு எதிரான கருத்துகள், விளம்பரங்கள், செய்திகள் தவிர்க்கப்பெற்ற நிலையில் மகளிர் இதழ்களும் வெளிவந்து கொண்டுள்ளன. இவையும் மகளிர் இலக்கியம் வளர வழி வகுக்கின்றன.

மகளிர் இலக்கியம் வளர இதழியல் ஊடகமும் உதவி செய்துவருகிறது.

### 4.3.1.மகளிர் இதழ்கள்

1860 ஆம் ஆண்டில் அமிர்தவசனி என்ற இதழ் தமிழில் வெளிவந்து முதல் மகளிர் இதழாகக் கொள்ளத்தக்கதாகும். ஜனவிநோதினி, சுகுண போதினி, மகாராணி, விவேக போதினி, மாதரிமித்திரி, பெண்மதி போதினி, மாதர் மனோரஞ்சனி போன்ற 1900 ஆண்டிற்கு முன்னரே வெளிவந்த மகளிர் இதழ்களாக

குறிப்பு

விளங்குகின்றன. பாரதியார் சக்கரவர்த்தினி என்ற மகளிர் இதழை நடத்தியுள்ளார். பாசரசு, புதுமைப் பெண், பாக்கிய லட்சுமி, மண்மகள், காதம்பரி தமிழ்மாது போன்றனவும் மகளிர் இதழ்களாக வெளிவந்துள்ளன. வை.மு. கோதைநாயகி அம்மாள் ஜகன்மோகினி என்ற இதழை நடத்தினார். இதில் அவரின் நாவல்கள் தொடராக வெளிவந்தன. இதற்கு முன்னதாக ஹிதகாரணி என்ற இதழும் வெளிவந்துள்ளது.

மங்கை என்ற இதழ் 1975 ஆம் ஆண்டு துவங்கப்பெற்றது. இதே ஆண்டில் கல்கி நிறுவனத்தின் சார்புடன் மங்கையர் மலர் என்ற இதழ் துவங்கப்பெற்றது. சுமங்கலி (1984), ராஜம் (1987) போன்ற இதழ்களும் மகளிர் இதழ்களாக வெளிவந்துள்ளன.

பெண்மணி (1996), லேடிஸ் ஸ்பெஷல் (1996), அவள் விகடன் (1998), குமுதம் சிநேகிதி (1998) போன்றனவும் மகளிர் இதழ்களாக வெளிவந்துள்ளன. தற்போது பெண்ணே நீ, தங்க மங்கை போன்ற இதழ்களும் மகளிர் இதழ்களாக வெளிவந்து கொண்டுள்ளன.

மகளிர் இதழ்கள் பெரும்பாலும் சமையல் குறிப்புகள், அழகுக் குறிப்புகள், ஆடை அணிகலன் தயாரிப்புக் குறிப்புகள் போன்றனவற்றைக் கொண்டு வெளிவருகின்றன. இராசிபலன்கள் பெண்களை மையமிட்டு எழுதப்படுவது ஒரு வேற்றுமையாகும். பெண்களே பெரும்பாலும் மகளிர் இதழ்களின் ஆசிரியர்களாக விளங்குகின்றனர். இணையத்திலும் சில மகளிர் இதழ்கள் வெளிவருகின்றன. பெண்ணியம் என்ற இதழ் உலக அளவிலான பரப்புதலைப் பெற்றுள்ளது.

இவ்வாறு மகளிர் இலக்கிய வளர்ச்சிக்கு மகளிர் இதழ்கள் பெரும் பங்காற்றி வருகின்றன.

குறிப்பு

## தற்சோதனை வினாக்கள்

### குறு வினாக்கள்

1. ஊடகவியல் என்றால் என்ன?
2. தகவல் தொடர்பயில் என்றால் என்ன?
3. இதழியல் என்றால் என்ன?
4. மகளிர் இதழ்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.
5. சிறுவர் இதழாசிரியர்கள் சிலரைக் குறிப்பிடுக.

### நெடுவினாக்கள்

1. இதழ்களின் வகைகள் பற்றிக் கட்டுரை எழுதுக.
2. ஊடகவியல் குறித்த அறிஞர்களின் கருத்தினை எழுதுக.
3. ஊடகவியலின் வரலாறு வளர்ச்சி ஆகியன குறித்து எழுதுக.
4. மகளிர் இலக்கியம் பற்றி எழுதுக.
5.

## கூடுதலாக வாசிக்க

**அறிவியல் தமிழ்** - இராதா செல்லப்பன், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, 2016

**மக்கள் தகவல் தொடர்பியல்**, இராஜா வரதராஜா, மு. அருணாசலம், ஆரா பதிப்பகம், திருச்சிராப்பள்ளி

குறிப்பு

# பிரிவு -2

## இதழ்கள் - செய்தி - சிறப்பு நிகழ்வுகள்

## கூறு. 5 வணிகம், மருத்துவம், அரசியல், ஆன்மிகம், திரைப்படம் (சினிமா) – நிறுவன இதழ்கள்

### நோக்கம்

ஊடகவியலின் தனித்த பகுதியாக விளங்கும் இதழியல் குறித்த அடிப்படை செய்திகள் இப்பாடப்பகுதியில் தரப்பெற்றுள்ளன. இப்பாடத்தைப் படிப்பதன் வாயிலாக, இதழ்களின் உள்ளடக்கம், செய்தி பிரசுரிப்பு, செய்தி நிருபரின் தகுதிகள், தலையங்கங்கள், ஆசிரியர் பகுதி போன்ற பல செய்திகளை அறிந்து கொள்ள இயலும்.

### 5.இதழ்களின் வகைகள்

இதழ்கள் அவை தரும் செய்திகளின் அடிப்படையில் பல்வகைப்படுகின்றன. வணிகஇதழ்கள், மருத்தவ இதழ்கள், அரசியல் இதழ்கள், ஆன்மிக இதழ்கள், திரைப்பட இதழ்கள்,நிறுவன இதழ்கள் என்று அவை பலவகைப்படுகின்றன. அவை பற்றிய விரிவான தகவல்கள் இங்குத்தரப்பெறுகின்றன.

### 5.1.வணிக இதழ்கள்

வணிகம் தொடர்பான செய்திகளை, சந்தைக்குப் புதிதாக வந்துள்ள பொருள்கள் பற்றிய செய்திகளைத் தாங்கி வரும் இதழ்கள் வணிக இதழ்கள் எனப்படுகின்றன. இலங்கையில் பெருவாரியான வணிக இதழ்கள் தமிழில் வெளிவந்துள்ளன. வணிகஒளி, வணிகசுரபி, வணிக ஜோதி, வணிக தீபம், வணிக நாதம், வணிக மஞ்சரி, வணிக வாணி, வணிகச்சுடர், வணிகநாதம்,

வர்த்தக உலகம், வர்த்தகி போன்ற பெயரில் வணிக இதழ்கள் வெளிவந்துள்ளன.

தமிழகத்தில் வளர்தொழில், வணிகமணி, மோட்டார் விகடன் போன்ற இதழ்கள் வணிக இதழ்களாக வெளிவந்து கொண்டுள்ளன.

வளர்தொழில் என்ற மாத இதழ் முன்மாதிரி தொழில்முனைவோர், தொழில் சார் ஆலோசகர்கள் ஆகியோர்களை அறிமுகம் செய்கின்றது. இது வணிகம் தொடர்பாக எழும் சந்தேகங்களுக்கு விடை அளிக்கும் பகுதியைக் கொண்டுள்ளது. நிர்வாகத் தகவல்கள், தொழில் துறைத் தகவல்கள் போன்றவற்றிற்கு இவ்விதழ் இடமளிக்கிறது.

### 5.1.1.வணிகமணி

தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் முன்னணி தொழில் வணிக மாத இதழ் வணிகமணி ஆகும். இது வேளாண்மை, கட்டுமானம், வாகனம், ஜவுளி, உணவு, வங்கி, காப்பீடு, பொழுதுபோக்கு, சுற்றுலா போன்ற பல்துறை சார்ந்த செய்திகளை வழங்கி வருகிறது. இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டில் இவ்விதழ் தொடங்கப்பெற்றுள்ளது. பல லட்சம் வாசகர்களைக் கொண்டுள்ளது. வணிக மாமணி என்ற விருதும் இவ்விதழ் சார்பாக ஆண்டுதோறும் வழங்கப்பெறுகின்றது.

### 5.1.2.மோட்டார் விகடன்

விகடன் குழுமத்தின் இதழாக விளங்குவது மோட்டார் விகடன் ஆகும். இது புதிய இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் போன்றவற்றின் அறிமுகங்களையும் செயல்பாடுகளையும் உலகிற்கு அறிவிப்பதாக உள்ளது.

தமிழ் இந்து நாளிதழில் வணிக வீதி என்ற துணை இதழ் வெளியிடப்பெற்றுவருகிறது. இது வணிகச் செய்திகளைத்

தாங்கிவருகின்றது. தினமணி இதழில் தொழில் வர்த்தகம் என்ற தலைப்பின் கீழ் வணிகச் செய்திகள் தரப்பெறுகின்றன. தினத்தந்தி நாளிதழ் எகனாமிக் டைம்ஸ் என்ற ஆங்கிலப் பத்திரிக்கையுடன் இணைந்து அதன் செய்திகளைத் தமிழில் தந்து கொண்டுள்ளது. தினமலர் நாளிதழில் வர்த்தம் என்ற பிரிவின் கீழ் வணிகச் செய்திகள் தரப்பெறுகின்றன.

## 5.2.மருத்துவ இதழ்கள்

தமிழகத்தின் பாரம்பரிய மருத்துவமான சித்த மருத்துவச் செய்திகளையும், ஆயுர்வேத மருத்துவச் செய்திகளையும், அலோபதி மருத்துவச் செய்திகளையும், யோக தொடர்பான செய்திகளையும் தாங்கி வரும் இதழ்கள் மருத்துவ இதழ்கள் எனப்படுகின்றன.

இந்திய விடுதலைக்கு முன்பே மருத்துவ இதழ்கள் வெளிவந்துள்ளன. 1930 ஆம் ஆண்டில் ஜீவ ரட்சகன் என்ற இதழ் வெளிவந்துள்ளது. இது கொல்லாமை என்ற கொள்கையை முன்வைத்தது. இதே காலத்தில் கள் உண்ணாமையைத் தன் கொள்கையாகக் கொண்டு வெளிவந்த இதழ் சென்னை மதுவிலக்குத் தூதன் என்பதாகும்.

### 5.2.1.சித்த மருத்துவ இதழ்கள்

ஞானி வைத்திய செய்தி (1959), நந்தி (1962), மூலிகை மணி (1964), கிராம் வைத்தியம் (1965), தமிழ் முனிவன் (1971), சித்தர் கருவூலம்(1981), கற்பக அவிழ்தம் (1986) உலக சேமம்(1989), வாழ்க நலமுடன் (1989), ஓம் சக்தி மருத்துவ மலர் (1990) தேனமுதம் (1995), ஜீவ மூலிகை (1996), மூலிகை மலர் (1997), சித்தர் அறிவியல் (2000), மூலிகைக் குழந்தைகள் (2000), தமிழ் வைத்தியம் (2001), உங்கள் ஹெல்த் (2001), நவபாஷான மருத்துவம் (1995) போன்ற இதழ்கள் சித்த மருத்துவ

செய்திகளைத் தமிழில் வழங்கின. இவற்றில் பல தற்போதும் வெளிவந்து கொண்டுள்ளன.



### 5.2.2.அலோபதி மருத்துவ இதழ்கள்

அலோபதி மருத்துவ முறை சார்ந்த செய்திகளை வழங்கும் இதழ்களை அலோபதி மருத்துவ இதழ்கள் என்ற பகுப்பாகப் பகுத்துக்கொள்ள முடிகின்றது. ஆரோக்கிய மலர் (1980), இருமலர்(1980), உங்கள் நலம் நாடும் ஹெ ல்த் (1992), பியூட்டி அண்டு ஹெல்த் (1992), மருத்துவ அறிவியல் மலர் (1992), தன்வந்திரி (1993), ஆரோக்கியம், மருத்துவம் (1994), உங்கள் ஆரோக்கியம் (1995), ஹலோ டாக்டர் (1996), தெய்வீக மருத்துவம் (1996), ஹெல்த் டாக்டர் (1996), ஹெல்த் டைப், பேமிலி ஹெல்த் (1997), புதிய மருந்து உலகம்(1997), உங்கள் ஹெல்த் (2001), ஹெல்த் பாயிண்ட்(2002), குமுதம் ஹெல்த் (2002), மெடிகேர் டைஜஸ்ட் (2002) போன்ற இதழ்கள் இவ்வகையில் வெளிவருகின்றன.

### 5.2.3.ஹோமியோபதி மருத்துவ இதழ்கள்

ஹோமியோபதி மருத்துவத்தின் தன்மைகளை வெளிப்படுத்தும் இதழ்கள் ஹோமியோபதி இதழ்கள் எனப்படுகின்றன. 1946 ஆம் ஆண்டு ஹோமியோபதி என்ற இதழ் வெளிவந்துள்ளது. ஹோமியோபதி மித்ரன் (1956), ஹோமியோ பிரகடனம் (1958), அர்கனான் (1961), சகவழி (1977), ஹோமியோ அறிவியல் (1981), ஜுபிடரின் மருத்துவ மஞ்சரி (1982), ஈஸ்டர்ன் ஹோமியோ ஸ்டார் (1985), ஹோமியோ நண்பன்(1992), ஆரோக்கிய மருத்துவம் (1994), மனிதனை நலமாக்குவது ஹோமியோபதி(1997), ஹோமியோபதிச் சுடர் (2001) போன்ற இதழ்கள் இவ்வகையில் வெளிவந்த இதழ்கள் ஆகும்.

ஆரோக்கியம் என்ற ஆயுர் வேத மருத்தவ இதழும் 1955 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளது.

இவ்வாறு மருத்துவத்துறை சார்ந்த செய்திகள் தமிழில் பரவ இவ்விதழ்கள் பணியாற்றியுள்ளன.

குறிப்பு

## 5.4.அரசியல் இதழ்கள்

அரசியல் செய்திகளைத் தாங்கி வரும் இதழ்கள் அரசியல் இதழ்கள் எனப்படுகின்றன. தமிழகத்தில் பதிவு பெற்று அரசியல் கட்சிகள் தங்களின் கொள்கைகளைப் பரப்ப இதழ்களை வெளியிட்டுவருகின்றன.

தந்தைப் பெரியாரின் குடியரசு இதழ் தேர்ந்த அரசியல் இதழாக வெளிவந்துள்ளது. 1925 ஆம் ஆண்டு தந்தைப் பெரியார், அவரின் நண்பர் தங்கவேல் என்பவருடன் இணைந்த குடியரசு இதழை வெளியிடத் தொடங்கினார்.

இவ்விதழின் நோக்கத்தை “ குடிஅரசு இதழின் நோக்கத்தை 2-5-1925 நாளிட்ட அதன் முதல் இதழில், ”நமது நாடு அரசியல், பொருளியல், சமூகவியல், ஒழுக்கவியல் முதலிய எல்லாத் துறைகளிலும் மேன்மையுற்று விளங்கச் செய்ய வேண்டும். நாட்டு மக்களின் உடல்வளர்ச்சிக்காவும் அறிவுவளர்ச்சிக்காகவும் கலைவளர்ச்சிக்காவும் மொழிவளர்ச்சிக்காவும் இதன் மூலம் உழைத்துவருவோம். ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். இதை அறவே விடுத்துத் “தேசம், தேசம்“ என்று கூக்குரலிடுவது எமது பத்திரிக்கையின் நோக்கமன்று. மக்களுள் தன்மதிப்பும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கிவளரல் வேண்டும். மக்கள் அனைவரும் அன்பின் மயமாதல் வேண்டும்” என்று தந்தைப் பெரியார் வரையறுத்தார். இவ்விதழ்த் தொகுப்பு தற்போது இணையத்தில் கிடைக்கின்றது.

குறிப்பு

### 5.4.1.திராவிடநாடு

1942 ஆம் ஆண்டளவில் அறிஞர் அண்ணாவால் தொடங்கப்பெற்ற இதழ் திராவிட நாடு என்பதாகும். இவ்விதழ் திராவிடர் விடுதலை, தமிழ் உணர்வு ஆகியவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டு தொடங்கப்பட்டது. இவ்விதழ் தமிழ் இளைஞர்களுக்கு புதிய எழுச்சியையும் ஊக்கத்தையும், அரசியல் மீதான ஈர்ப்பையும் ஏற்படுத்தியது. அண்ணாதுரையின் தமிழ் நடை எதுகை மோனையுடன் இருந்ததால் முற்றிலும் புதிய தமிழ் உரைநடையில் இவ்விதழ் மலர்ந்தது.

திராவிட நாடு இதழில் அண்ணாதுரை ஆரியமாயை என்னும் பெயரில் ஒரு தொடர் கட்டுரை எழுதினார். பின்னர் அது நூலாக வெளி வந்தது.

1963 ஆம் ஆண்டில் இவ்விதழ் சில காரணங்களால் நின்றுபோனது.

### 5.4.2.காஞ்சி இதழ்

அறிஞர் அண்ணா காஞ்சி இதழின் ஆசிரியராக விளங்கி, 1960 ஆம் ஆண்டு முதல் அதனை வெளியிட்டுவந்தார். இவ்விதழ் அரசியல் போக்குகளை விமர்சித்தது. நாட்டு நடப்புகள், இலக்கியச் செய்திகள் ஆகியவற்றிற்கும் இடமளித்தது. இது அறிஞர் அண்ணாவின் அரசியல் சார் இதழாக விளங்கியது.

### 5.4.3.முரசொலி

கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் தொடங்கப்பெற்ற இதழ் முரசொலி ஆகும். 1942 ஆம் ஆண்டு முதல் இது தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளது. திருவாரூரில் தொடங்கப்பெற்ற இதழ் பின்பு சென்னையில் இருந்து வெளிவரத் தொடங்கியது. முதலில் வார இதழாக இருந்த இந்த இதழ் பின்பு

குறிப்பு

நாளிதழாக மாறியது. இதே காலத்தில் நம்நாடு என்ற இதழும் இவ்வரசியல் பின்னணியில் வெளிவந்து கொண்டிருந்தது.

### 5.4.4.நமது எம்.ஜி.ஆர்

எம்.ஜி. இராமச்சந்திரன் தன் அரசியல் பணிகளுக்காக அண்ணா என்ற இதழைத் தொடங்கினார். அவரின் மறைவிற்குப்பின்பு நமது எம். ஜி. ஆர் என்ற இதழ் வெளிவந்தது.

### 5.4.5.சங்கொலி

வை. கோபால்சாமியின் அரசியல் செயல்பாடுகளை விவரிக்கும் இதழாகச் சங்கொலி வெளிவந்து கொண்டுள்ளது.

### 5.4.6.தீக்கதிர்

இடதுசாரி அரசியல் சிந்தனைகளுக்கு இடம் அளிக்கும் இதழாக தீக்கதிர் வெளிவந்து கொண்டுள்ளது. உழைக்கும் மக்கள் அறக்கட்டளை என்ற அமைப்பின் வழியாக இவ்விதழ். மதுரை, சென்னை, கோவை, திருச்சி போன்ற இடங்களில் இருந்துப் பதிப்பிக்கப்படுகின்றது.

### 5.4.7.ஜனசக்தி

ஜீவானந்தம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பெற்ற இதழ் ஜனசக்தி ஆகும். சென்னை பாலன் இல்லத்தினை முகவரியாகக் கொண்டு இவ்விதழ் வெளிவந்து கொண்டுள்ளது. முற்போக்குச் சிந்தனை மிக்க அரசியல் இதழாக இது வெளிவந்து கொண்டுள்ளது.

இவைதவிர புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் போன்ற இதழ்களும் அரசியல் கண்ணோட்டத்தில் வெளிவந்து கொண்டுள்ளன.

இவ்வாறு பல்வேறு அரசியல் கட்சிகள் தங்களின் செயல்பாடுகளை மக்களுக்கு அறிவிக்க அரசியல் இதழ்களை உருவாக்கி வருகின்றன. இவை தவிர பிரபல நாளேடுகளில் அரசியல் என்ற பிரிவில் செய்திகள் வழங்கப்பெற்று வருகின்றன.

## 5.5.ஆன்மீக இதழ்கள்

ஆன்மீகம் தொடர்பான செய்திகளை, நிகழ்ச்சிகளின் பதிவுகளை வெளியிடும் இதழ்கள் ஆன்மிக இதழ்கள் எனப்படுகின்றன. 1958 ஆம் ஆண்டு திருக்கோயில் என்ற இதழ் தொடங்கப்பெற்றது. இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் வெளிவரும் ஆன்மீக இதழ் இதுவாகும். இந்து சமயக் கோட்பாடுகள், திருக்கோயில் வரலாறுகள், மகான்கள் மற்றும் அடியார்களின் திருத்தொண்டுகள் மற்றும் வரலாறுகள், ஆன்மீகம் சார்ந்த வாழ்வியல் வழிகாட்டுதல்கள், அறக்கருத்துகள் ஆகியவை இதன் உள்ளடக்கங்கள். தமிழ் இலக்கிய, ஆன்மிக அறிஞர்கள் பலர் இதில் பங்கேற்று எழுதியுள்ளனர். கிருபானந்தவாரியார், ம.பொ.சிவஞானம், மு.அருணாச்சலம், கி.வா.ஜகந்நாதன், ந.சுப்புரெட்டியார், டி.என்.சிங்காரவேலு, அருணை வடிவேல் முதலியார், க.வச்சிரவேலர், கி.ஆ.பெ.விசுவநாதம், என்.சேதுராமன், க.த.திருநாவுக்கரசு, சுத்தானந்தபாரதியார், ச.வே.சுப்பிரமணியம், வ.சுப.மாணிக்கம், முனைவர் இரா.கலைக்கோவன், நாராயண வேணுகோபால நாயக்கர், மு.அருணகிரி, மற்றும் இந்திய ஆட்சிப் பணியில் உள்ள பலர் இதில் பங்களித்துள்ளனர்.

### 5.5.1. தெய்வ முரசு

தமிழ் வழிபாட்டின் சிறப்புகளை எடுத்துரைக்கும் மாத இதழாக தெய்வ முரசு வெளிவந்து கொண்டுள்ளது. இதன் ஆசிரியர் மு.பெ. சத்தியவேல் முருகனார்.

குறிப்பு

## 5.5 1.2. குமுதம் பக்தி

குமுதம் குழுமத்தின் சார்பில் பக்தி செய்திகளைத் தாங்கிவரும் இதழ் குமுதம் பக்தி இதழாகும்.

## 5.5 1.3. சக்தி விகடன்

ஆனந்தவிகடன் குழுமத்தின் சார்பில் பக்தி செய்திகளைத் தாங்கி வரும் இதழ் சக்தி விகடன் ஆகும். திருத்தலங்கள், சோதிடம், திருக்கதைகள், அறிவிப்புகள் போன்ற பகுதிகளை உள்ளடக்கி சக்தி விகடன் வெளிவருகின்றது.

இவைதவிர தினமணியில் வெள்ளிமணி என்ற பகுதியிலும் தினகரனில் ஆன்மீக மலர் என்ற பகுதியிலும், தினமலர், தினத்தந்தி ஆகியவற்றில் ஆன்மிகம் என்ற பிரிவிலும் ஆன்மிகச் செய்திகள் இடம்பெற்றுவருகின்றன. தினமலர் இதழ் இணையம் வழியாகப் பல ஆன்மிகச் செய்திகளை வழங்கி வருகிறது.

உழவாரம், மக்கள் சிந்தனை, மெய்கண்டார், பாலசித்தர், சற்குரு விஜயம் போன்ற சைவ சமய மடம் சார்ந்த ஆன்மிக இதழ்களும் வெளிவந்து ஆன்மீகக் கருத்துகளைப் பரப்பி வருகின்றன.

## 5.6..திரைப்பட இதழ்கள்

திரைப்படம் குறித்த செய்திகள், திரைத் துறையினர் பற்றிய செய்திகள் போன்றவற்றைத் தரும் இதழ்கள் திரைப்பட இதழ்கள் எனப்படுகின்றன. திரைப்பட இதழ்கள் இருமாதத்திற்கு ஒருமுறை, மாதம் ஒருமுறை, வாரம் ஒருமுறை, வாரம் இருமுறை இதழ்களாக வெளிவந்துள்ளன. அவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

## 5.6.1.இரு மாத இதழ்கள்

1. ”சலனம்” - 1990 - 1993 - கல்யாணராமன்

2. “நிழல்” - 2001 முதல் இன்றுவரை., ஆசிரியர் ’அரசு’ (ப.திருநாவுக்கரசு)

(52 இதழ்கள் வந்துள்ளன)

3. ”படப்பெட்டி” - சிவ.செந்தில்நாதன்

## 5.6.2.மாத இதழ்கள்

1. “சினிமா உலகம்” – 1935 - பி.எஸ். செட்டியார்

2. ”ஆடல் பாடல் “ - 1936 – வீரராகவன்

3. “கலை”

4. “கலைச்செல்வி”

5. “குண்டுசி” - - கோபால்

6. ”பேசும்படம்” - - வு.ஏ.ராம்நாத்

7. “பொம்மை” - 1966 – 1996 – விஸ்வநாத ரெட்டி

8. “தமிழ்ப்படம்”

9. “பித்தன்”

10. “சினிமா ரசிகன்”

11. “தென்றல் திரை” - 1954 - கே.ஆர். பாலன்

12. “சினிமா செய்தி “ - 1960 - ஏ.வி.பி. ஆசைத்தம்பி

13. “பிக்சர் நியூஸ்” - 1966 - வி.நாராயணன் – எஸ்.மல்லிகார்ஜீனன்.

14. “புரட்சிக்கொடி” - 1970 - மின்னல்காந்தன்

15. "மதி ஒளி" - சண்முகம்

16. "இதயக்கனி" - வினுயன்

17. "திரையுலகம்" - துரைராஜ்

18. "கலைப்பூங்கா" - ராவணன்

19. "சினிமா மெயில்" - ஏ.கே.சதீஷ்

20. "சிலுக்கு சினிமா" - சங்கர் கணேஷ்

21. "திரைநீதி" - செல்வம்

22. "சினிமா ராணி" - 1971 - கலையமுதன் பூமிநாதன்

23. "காந்தம்" - 1971 - செல்வம்

24. "காட்டன்" - 1974 - ஏ.வி.சங்கர்

25. "திரைச்சித்ரா" - 1977 - எம்.பி.மணி

26. "கலைச்சங்கு" - 1977 - ஏ.வி.சங்கர்

27. "நாரதம்" 1940- 1950 - சீனிவாசராவ், ஆனந்தவிகடன் குழுமம்

28. "திரை" லீனா மணிமேகலை

29. "சினிமா"

30. "பொக்கிஷம்" - மேஜர் தாசன்

31. "காட்சிப்பிழை – திரை" - ஆசிரியர் சுபகுணராஜன்

### 5.6.3. இருவார இதழ்கள்

1. மின்னொளி

2. சினிமா எக்ஸ்பிரஸ் - ராமமூர்த்தி (இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமம்)

3. "பிலிமாலயா" - எம்.ஜி.வல்லபன்

#### 5.6.3.1.1. வார இதழ்கள்

1. "அம்யூஸ்மெண்ட் வீக்லி" (ஆங்கிலம் - தமிழ்)

2. "தமிழ்சினிமா" - கரீம்

3. "சித்ராலயா" - ஸ்ரீதர்

4. "ஜெமினி சினிமா"

ஆகியன திரைப்படங்கள் குறித்து வந்த இதழ்கள் ஆகும். இவைதவிர பல இதழ்களும் திரைப்படச் செய்திகளுக்கு முக்கியத்துவம் தந்து வெளியிட்டன. மணிக்கொடி, சரஸ்வதி, எழுத்து, கசடதபற, பிரக்ஞை, இனி, சுபமங்களா, புதியபார்வை, அம்ருதா, தினமணி கதிர், தீராநதி, "ஆனந்தவிகடன்", "கல்கி" , "குமுதம்", " குங்குமம்", "தினமணி", "கதிர்", "சாவி" போன்றவற்றிலும் திரைப்படங்கள் தொடர்பான செய்திகளும், விமர்சனங்களும் முக்கிய இடம் பிடித்தன.

பேசும் படம் என்ற திரையிதழ் ஐம்பது ஆண்டுகளாக வெளிவந்தது. இவ்விதழ் சிறந்த திரைத்துறையினரைத் தேர்ந்தெடுத்து பாராட்டியது. பொம்மை இதழும் நல்ல வடிவமைப்புடன் வந்தது. தினமணி குழுமத்தில் இருந்து வெளிவரும் சினிமா எக்ஸ்பிரஸ் இதழும் திரைத்துறை இதழ்களில் குறிக்கத்தக்கது. ஜெமினி சினிமா, தமிழ் சினிமா, சித்ராலயா போன்றனவற்றின் பங்கும் குறிக்கத்தக்கது. திரை, சலனம், நிழல்,

படப்பெட்டி போன்ற இதழ்களும் திரைத்துறை வளர்ச்சி குறித்து வெளிவந்த இதழ்களாகும்.

இவ்வாறு துறைதோறும், துறைதோறும் பல இதழ்கள் வெளிவந்து தமிழ் இதழியல் சிறக்கத் தொண்டாற்றியுள்ளன.

குறிப்பு

## கூறு 6.

### இதழ்களின் உள்ளடக்கம்
### செய்தி விளக்கம், சேகரிப்பு, செய்தியாக்கம்,

### 6.0 செய்தி –விளக்கம்

புதியது எதுவோ அதுவே செய்தி. தக்க நேரத்தில் பலரும் அறித்தக்க வகையில் கிடைப்பதே செய்தி. பெரும்பாலான மக்களிடம் பேரார்வத்தைத் தூண்டக் கூடியதே செய்தி. அனுபவமுள்ள ஆசிரியர் ஒருவர் தன்னுடைய நாளிதழில் இடம்பெறத் தக்கது எதுவோ அதுவே செய்தியாகும். எதனையாவது வெளிக்காட்டுவது செய்தி. நடைமுறையிலிருந்து, சாதாரணமான வற்றிலிருந்து, மாறுபட்ட எதுவும் செய்தியாகும். ஒரு சமுதாயத்தில் பெரும்பாலான மக்களைப் பாதிக்கின்ற, அவர்களால் புரிந்து கொள்ளக் கூடிய எந்த ஒரு நிகழ்ச்சியும், கருத்தும் செய்தியாக உருவம் பெறுகின்றன. மக்களைப் பற்றி மக்களுக்காக மக்களால் எழுதப்படுபவை செய்திகள் ஆகும். வாசகர்களுக்குச் சுவையூட்டும் நடப்பு, நிகழ்ச்சிகளின் உண்மைத் தொகுப்புகளே செய்திகள்.

செய்தி என்பதன் ஆங்கில் வடிவம் நியூஸ் (News) என்பதாகும். இந்த ஆங்கிலச் சொல்லில் நான்கு திசைகளின் ஆங்கிலப் பெயர்களான நார்த் (North) (வடக்கு), ஈஸ்ட் (East)

குறிப்பு

(கிழக்கு) வெஸ்ட் (West) (மேற்கு), சௌத் (south) (தெற்கு) ஆகியவற்றின் முதல் எழுத்துகள் இணைந்துள்ளன. நான்கு திசைகளில் இருந்தும் பெறப்படுபவை செய்திகள் என்ற விளக்கமும் ஏற்கத்தக்கது ஆகும். மேலும் நியுஸ் என்பதற்கான பொருள் புதுமைகள் என்பதாகும். புதியவை அனைத்தும் செய்திகள் என்ற அடிப்படையிலும் இந்தச் சொல்லிற்குப் பொருள் கொள்ளமுடிகின்றது.

செய்தி என்பது மிக்க மதிப்புடையதாகும். காலக்குறிப்பு, இடக்குறிப்பு ஆகியவற்றுடன் துல்லியம், நடுவுநிலையோடு குறிக்கோள் அடிப்படையில் மனிதநேயத்துடன் சுருக்கமாக அதே நேரத்தில் முழுமையாக வழங்கப்பட வேண்டியது செய்தியாகும்.

## 6.1.செய்தி என்பது குறித்து அகராதிகள் தரும் விளக்கங்கள்

சேம்பர்ஸ் ஆங்கில அகராதி நியூஸ் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு, புதிதாகக் கேட்கப்படுகின்ற ஒன்று: இப்பொழுதுதான் நடைபெற்ற, ஏதாவது ஒன்றைப் பற்றிய முதல் தகவல் என்று விளக்கம் தருகின்றது.

செய்தி என்பது 'அண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் அறிக்கை செய்தித்தாள்களிலோ, பருவ இதழ்களிலோ, வானொலியிலோ, தொலைக்காட்சியிலோ வெளியிடப்படுவது வெளியிடப்பட வேண்டிய இன்றியமையாதவை 'செய்தி ஒலிபரப்பு' என்று வெப்ஸ்டர் ஆங்கில அகராதி சொல்கிறது.

## 6.2.செய்தி என்பது குறித்து அறிஞர்களின் கருத்துகள்

'பெரும்பான்மையான மக்களிடம் பேரார்வத்தைத் தூண்டக் கூடியதே செய்தி' என்கிறார் வில்லியம் கான்ஸ்வெனார் பிளேர்.

குறிப்பு

''உலகின் நடைமுறை நிகழ்ச்சிகள் வழக்கத்திற்கு மாறாக அமையும் போது செய்திகள் பிறக்கின்றன. செய்திகள் என்பவை புதுமையானவை சூடானவை. சமுதாயத்தில் அன்றாடம் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் செய்திகளாகி விடுவதில்லை. சமுதாயத்தைப் பாதிக்கிற அல்லது சமுதாயம் புதுமையாகக் கருதிக் கேட்கவும் படிக்கவும் விரும்புகிற நிகழ்ச்சிகளே செய்திகளாகின்றன''

''பெரும் எண்ணிக்கையிலான வாசகர்கள் விரும்புகிற முற்றிலும் உண்மையான நிகழ்ச்சிகளை அல்லது கருத்துக்களைச் செய்திகள் எனலாம்'' என்பது ரோலண்ட் இ. உல்ஸ்லே என்பவரின் கருத்தாகும்.

'நாட்டு நடப்புச் செய்திகளையும், அவை பற்றிய கருத்துரைகளையும் உள்ளடக்கிக் குறிப்பிட்ட காலங்களில் அச்சடித்து வெளிவருவனவே செய்திகளாகும்' என்கிறார் கோதண்டபாணி.

ஒரு கருத்து, ஒரு நிகழ்ச்சி, சிக்கல் பற்றிய உண்மையான, சரியான, நடுவுநிலையான குறிப்புச் செய்தியாகும். உண்மையானதாக, நிகழ்காலத்தோடு தொடர்புடையதாக, மக்களின் ஆர்வத்தினைத் தூண்டும் வகையில் நடைமுறைக்கு மாறுபட்டதாக இருக்கும் சிலவற்றைப் பற்றிய விளக்கம் செய்தி என்பது ஆர். இராமச்சந்திரன் கருத்து.

இவ்வாறு மக்களுக்கு உரிய நேரத்தில் உரிய கருத்துகளை, உரிய முறையில் வழங்குவது செய்தி எனப்படுகின்றது.

## 6.3.செய்தி – உள்ளடக்கம்

ஒரு செய்தியின் உள்ளடக்கமே செய்தியை முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றுகிறது. செய்திக்கான தகுந்த தலைப்பு

இருக்கவேண்டும். இத்தலைப்புப் படிப்பவரைப் படிக்கச் செய்யும் அளவிற்கு ஈர்ப்புடன் அமைக்கப்பட வேண்டும். தலைப்பினை அடுத்து. நாள், இடம் பற்றிய குறிப்புகள் இடம்பெறவேண்டும். இதனைத் தொடர்ந்து, ஒரு சில வரிகளில் செய்தியின் அடிக்கருத்து இடம்பெற வேண்டும்.

இவற்றைத்தாண்டி செய்தியின் உள்ளடக்கம் அமைக்கப்பட வேண்டும். இவ்வுள்ளடக்கம் ஒரு வாய்பாடு அளவில் வடிவமைக்கப்பெற்றுள்ளது.

(1) என்ன? (What?)
(2) ஏன் (Why?)
(3) எப்பொழுது (When?)
(4) எப்படி (How?)
(5) எவ்வளவு?
(6) யார்? (Who)

என்ற ஆறு கேள்விகளுக்கு பதிலளிக்கும் கட்டமைப்பு நிலையில் செய்தியின் உள்ளடக்கம் இருக்கவேண்டும். இந்த ஆறு கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் நிலையில் ஒரு செய்தி அமையுமானால் அது முழுமையான செய்தியாகும்.

## 6.3.1.என்ன நடந்தது?

என்ன என்பதுவே செய்தியைத் தோற்றுவிக்கும் முதல் கேள்வியாகும். ஒரு செய்தியின் வழியாக அறிந்து கொள்ள விரும்புவது என்ன நடந்தது என்பதைத்தான். நடக்கின்றதை, செய்தியாக ஆக்க இயலாது; ஆக்கக் கூடாது. எனவே நடந்ததைக் காட்டுவதே செய்தியாகும். என்ன நடந்தது, என்ன நடக்கப்போகிறது என்பதை செய்தியின் முன் பகுதியில் தந்திட வேண்டும்.

குறிப்பு

### 6.3.2. ஏன் நடந்தது?

என்ன நடந்தது என்பதை அறிவிக்கும் செய்தி, ஏன் நடந்தது என்ற காரணத்தை அறியத் தூண்டும். சொல்லப்பட்ட செய்தி ஏன் நடந்தது என்பதைச் செய்தியின் அடுத்த பகுதி அறிவிக்க வேண்டும். ஏன் நடந்தது என்பதைத் தெளிவாக அறிவிக்க இயலாவிட்டாலும் இதனால் இது நடந்தது எனறு காரணத்தைக் கண்டறிந்துத் தெரிவிக்கலாம்.

### 6.3.3. எப்பொழுது?

நடந்த செய்தி, நடக்கப்போகிற செய்தி எப்பொழுது நடந்தது, நடக்கப்போகிறது என்பதை செய்தியின் அடுத்த பகுதி தெரிவிக்க வேண்டும். செய்தியை நாள், நேரம் மாறாமல், இடத்துடன் குறிப்பிடுவது அவசியத் தேவையாகும். தனி நிகழ்ச்சிகள் என்றால் நிகழ்ச்சி நடந்த நாளை, நேரத்தை மட்டும் குறிப்பிடலாம். தொடர்ச்சியான நிகழ்வுகளைச் செய்தியாக்கும்போது எது எது என்றைக்கு நடந்தது என்பதையும் குறிப்பிட வேண்டும். தேர்தல் முடிவுகள் பற்றிய செய்தி என்றால் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் தொடங்கி, தேர்தல் நடந்த நாள் வரையான நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகத் தெரிவித்தல் வேண்டும்.

### 6.3.4. எப்படி?

ஒரு நிகழ்ச்சி எப்படி நடந்தது, எவ்வகையில் நடந்தது என்று காட்டுவது செய்தியின் அடுத்தநிலைப்பாடு ஆகும். இது ஆராய்ச்சி மனப்பான்மையுடன் எழுத வேண்டிய பகுதியாகும். ஒருவரின் கூற்று அல்லது ஒருவரின் புரிதல் கொண்டு மட்டும் ஒரு நிகழ்ச்சி எப்படி நடந்தது என்று எழுதிவிட இயலாது. பலரின் கருத்துகள், பலரின் பார்வைகள் இவற்றை ஒப்பு நோக்கி ஒரு நிகழ்ச்சி எப்படி நடந்தது என்ற முடிவிற்கு வந்து பின் அதனைச் செய்தியாக்க வேண்டும்.

### 6.3.5. எவ்வளவு

செய்தியில் ஒரு நிகழ்வால் பயன்பெற்றோர், அல்லது பாதிப்படைந்தோர் இவ்வளவு பேர் என்று சுட்டப்பட வேண்டும். செய்திகளில் அளவு என்பது முக்கியமானதாகும்.

வெள்ளம் மற்றும் புயல் பாதிப்பினைச் செய்தியாக்கும் நிலையில் அழிவுபட்ட உயிர்கள், அழிவுபட்ட சொத்துமதிப்பு, அழிவு பட்ட மின்சாரக்கம்பங்கள் அளவு, சாய்ந்த மரங்களின் அளவு போன்றன சொல்லப்பட வேண்டும். இந்த அளவீடு படிப்பவர்க்கு நிகழ்ந்த நிகழ்வின் தாக்க அளவீட்டைப் புரிந்து கொள்ள உதவும்.

### 6.3.6. எங்கே?

செய்தி ஊடகங்களில் செய்தி நடைபெற்ற இடம் என்பது தெளிவுபட குறிக்கப்பட வேண்டும். உள்நாடு என்றால் மாவட்டம், வட்டம் போன்றன அளவில் நடைபெற்ற ஊர் சுட்டப்பட வேண்டும். ஏனென்றால் ஒரே ஊர்ப் பெயர் ஒரு மாநிலத்தின் பல இடங்களில் இருக்கலாம். எனவே சரியாக மாவட்ட, வட்ட இருப்பிடத்துடன் ஊர் குறிக்கப்பட வேண்டும்.

வெளிமாநிலம், வெளிநாடு ஆகியவற்றில் நடந்த நிகழ்ச்சிகளைச் சுட்டும்போது நாடு நடைபெற்ற ஊர் ஆகியன குறிப்பிடப்பெற்றால் போதுமானது.

### 6.3.7. யார்?

செய்தியில் உள்ள யார் என்பதற்கான பகுதி, செய்தியில் இடம்பெறுபவர் யார் என்பதைக் காட்டும் பகுதியாக உள்ளது. செய்தியில் இடம் பெற்றவர் பெயர்களை கட்டாயம் தெரிவிக்க வேண்டும். செய்தியில் இடம்பெறுபவரின் சரியான பெயர், அவரின் முன்னெழுத்து (Initial) கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும். மேலும் அவர் மதிப்பிற்குரிய பதவி வகித்தால் அதற்கான மதிப்புடன் அவர் பெயரைக் குறிக்க வேண்டும். ஒரே பெயரில் பலர் இருப்பதால்

இன்னாரின் மகன் இன்னார் என்று குறிப்பது மிக நல்லது. பிரபலமானவர்களாக இருந்தால் அவர்களின் அடைமொழி சுட்டி பெயர் செய்தியில் இடம்பெறலாம்.

குறிப்பு

இவ்வாறு செய்தியின் உள்ளடக்கம் என்பது ஆறு முக்கியப் பகுதிகளைக் கொண்டு அமையவேண்டும். இவை அமைந்தால் மட்டுமே ஒரு செய்தியின் உள்ளடக்கம் முழுமையும், வலிமையும் பெறும்.

## 6.4. செய்தி சேகரிப்பு

செய்தி சேகரிப்பு என்பது ஒரு கலையாகும். செய்தியாளருக்குச் செய்திகள் பல வகைகளில் வந்து சேர்கின்றன. வாய்மொழி வழியாக, அஞ்சல் வழியாக, குறுஞ்செய்தி வழியாக, மின்னஞ்சல் வழியாக, கட்செவி (வாட்ஸ்அப்) வழியாக, முகநூல் வழியாக என்று பல நிலைகளில் செய்தியாளருக்குச் செய்திகள் வந்து சேர்கின்றன. இதன் உண்மைத் தன்மை அறிந்த செய்தியாளர் செய்தி ஆக்கம் செய்யவேண்டும். இவ்வாறு செய்திகள் நிருபர்கள் வழியாகப் பெறப்பட்டு செய்திகளாக வெளியிடப்பெறுவது முக்கியமான செய்தி சேகரிப்பு முறையாகும்.

செய்தி சேகரிப்பதில் மற்றொரு முறையும் உள்ளது. செய்தி நிறுவனங்கள் வழியாக செய்திகளைப் பெற்று வெளியிடுதல் என்பதும் ஒரு வழி முறையாக விளங்குகிறது.

### 6.4.1.நிருபர்கள் வழி செய்தி சேகரிப்பு

நிருபர்கள் செய்திகளைச் சேகரிக்கும் ஆர்வம் மிக்கவர்களாக விளங்கவேண்டும். அவர்கள் ஒரு செய்தியை

1. அழைப்பின் வழி பங்கேற்றல்
2. நேரடி பங்கேற்பு
3. கள ஆய்வு
4. பேட்டி

5. செய்தியாளர் கூட்டம்
6. அறிக்கை பெறல்
7. ஆய்வு செய்தல்



போன்ற பல நிலைகளில் பெற இயலும்.

“அழைப்பின் வழி பங்கேற்றல்” என்பது அரசாங்க நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்து கொள்ளச் சொல்லி அழைப்பு அனுப்பப்பெற்று அதன்வழி நிருபர் கலந்து கொள்ளல் என்ற நடைமுறை சார்ந்ததாகும்.

“நேரடி பங்கேற்பு” என்பது அழைப்பு அற்ற நிலையிலும், அழைப்பு அச்சடிக்காத நிலையில் எதிர்பாராமல் ஒரு நிகழ்ச்சி நடக்கும் நிலையில் நிருபர் நேரடியாகக் கலந்து கொண்டு, நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தல் என்ற அடிப்படை வாய்ந்ததாகும்.

“களஆய்வு” என்பது ஒரு நிகழ்ச்சி நடந்த நிலைப்பாட்டை கள ஆய்வு செய்து வெளியிடல் என்ற அடிப்படை வாய்ந்ததாகும். செய்திக்களங்கள் பலவாக உள்ளன. வணிகச் செய்திக் களம், அறிவியல் செய்திக்களம், அரசாங்கச் செய்திக்களம், விளையாட்டுச் செய்திக்களம், தேர்தல் செய்திக்களம், சட்டசபைச் செய்திக்களம், விழாக்கள்களம், இயற்கையால் பாதிப்படைந்த களம், திரைப்படக் களம், கல்விக்களம் போன்ற பல களங்கள் செய்தியாளரின் செய்தி சேகரிப்புக் களங்களாக விளங்குகின்றன.

செய்தி நடந்த இடத்தில் இருப்பவர்களைப் “பேட்டி” எடுக்கும் நிலையில் செய்தி பெறும் முறை பேட்டி வழி செய்தி சேகரிக்கும் முறையாகும். தற்செயல் பேட்டி, திட்டமிட்ட பேட்டி, திட்டமிடாத பேட்டி போன்ற பல போட்டி எடுக்கும் முறைகள் உள்ளன.

ஒரு நிகழ்ச்சி நடப்பது குறித்தோ, நடந்த நிகழ்ச்சிக்கு விளக்கம் தரும் முறையிலோ, தன்னிலை விளக்கம் தரும்

நிலையிலோ பத்திரிக்கையாளர் கூட்டம் கூட்டப்படுவதுண்டு. இதற்கு நிருபர்கள் அழைக்கப்பெறுவர். பல நிறுபர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வில் விளக்கம் பெற்று செய்தி சேரிக்க இயலும்.

குறிப்பு

“அறிக்கை பெறல்” என்ற நிலையில் மாநாட்டு அறிக்கைகள், கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், பலரும் கலந்து ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவுகளின் தொகுப்பு அறிக்கை, அரசின் அறிக்கைகள் போன்றவற்றைப் பெற்று செய்திகளை வெளியிடுதல் அறிக்கை பெறல் என்ற நடைமுறையின் வழி செய்தி பெறுதலாகும்.

ஆய்வு செய்தல் என்பது கள ஆய்வின் வளர்நிலையாகும். நீர்நிலைகள் குறித்த புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பெற்று அவற்றைச் சீர்படுத்தல் போன்ற செயல்பாடுகளில் ஆய்வு தேவைப்படுகின்றது. மேலும் மண்வளம், மழை அளவு, மர வளம், கல்வி வளம், பெண்கள் நிலை, குழந்தைகள் நிலை, ஊனமுற்றோர் நிலை, தொழிற்சாலை கழிவுகள் ,சுற்றுச் சூழல் மாசு போன்றன குறித்த செய்திகளை வெளியிட ஆய்வுமுறை தேவைப்படுகின்றது. இதழ்களில் வெளியாகும் இலக்கியம் சார்ந்த கட்டுரைகள், நடுப்பக்கக் கட்டுரைகள், விவாதக் கட்டுரைகள், சிறப்புக் கட்டுரைகள்,தொல்லியல் சார் கட்டுரைகள் போன்றவற்றில் இவ்வாய்வுத் தன்மை மிகுந்து காணப்படும்.

இவ்வாறு நிருபர்கள் சார்ந்து செய்திகள் பெறப்படுதல் என்பது குறிக்கத்தக்க செய்தி சேகரிக்கும் முறையாக உள்ளது.

### 6.4.2.செய்தி நிறுவனங்கள் வழி செய்தி சேகரித்தல்

செய்தித்தாள்கள் உலகம் சார்ந்த செய்திகளை வெளியிடவேண்டும் என்ற நிலைப்பாட்டில், உலகில் உள்ள எல்லா இடங்களுக்கும் நிருபர்களை ஒரு செய்திதாள் நிறுவனம் அனுப்ப இயலாது. அது பெருத்த பணச்செலவையும், பெருத்த நிர்வாகச் சிக்கலையும் ஏற்படுத்தும். அதே நேரத்தில் செய்தித்தாள்கள்

குறிப்பு

தன்னாட்டுச் செய்திகளை மட்டும் வழங்கும் நிலையோடு நின்றுவிட முடியாது. உலகச்செய்திகளையும் வழங்கி ஆக வேண்டும். இந்நிலையில் உலகு தழுவிய நாடு தழுவிய செய்திகளை வழங்கிட செய்தி நிறுவனங்கள் உதவுகின்றன.

இவை செய்தி வழங்கலுக்கான கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு செய்திகளை இதழ்களுக்கு அளிக்கின்றன. கட்டணம் என்பது செய்தியின் அளவு, செய்தியின் முக்கியத்துவம் கருதி நிர்ணயிக்கப்படுவதாக உள்ளது. இவை பற்றிய விளக்கங்கள், வகைகள் கூறு 10இல் தரப்பெற்றுள்ளன)

## 6.5.செய்தியாக்கம்

செய்திகளை பெற்றபின்பு அதனைத் தங்களின் இதழ் நடைமுறைக்கு ஏற்ப செய்தியாக ஆக்கிக்கொள்வது என்பது இதழின் செய்தி ஆசிரியர் பொறுப்பாக உள்ளது. இப்பணி மிகப் பொறுப்பு வாய்ந்த பணியாகும். இதில் தவறு ஏற்பட்டால் அத்தவறு அழிக்க முடியாத, திருத்த இயலாத தவறாகிவிடும். இதழ் மீதான நம்பிக்கை பாழ்படும்.

இதனால் மிகக் கவனமுடன் செய்தியாக்கப் பணி நடைபெற வேண்டியுள்ளளது.

என்ன, ஏன், எதற்கு, எப்படி, எவ்வளவு, யார் என்ற அடிப்படை வினாக்களைக் கருத்தில் கொண்டு அவற்றிற்கு விடைகளை வரிசைப்படுத்தும் போக்கில் செய்திகள் எழுதப்பட வேண்டும். நாள், இடம், நேரம் மிக முக்கியமாகக் குறிக்கப்பட வேண்டும்.

செய்தி எழுதுதலில் நாகரீகமும் உண்மைத் தன்மையும் வேண்டும். செய்தியின் அளவு, எழுத்தளவு, இடைவெளி அளவு, படத்தின் பொருத்தம், தலைப்புப் பொருத்தம், பெயர்களில் பிழை இன்மை, எழுத்துப் பிழை இன்மை, சொற்பிழை இன்மை, மயக்கம்

தராமை போன்ற பல நுணுக்கங்கள் செய்தியாக்கத்தின்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியனவாகும்.

இலை மறைவு காய் மறைவாகச் சொல்லப்பட வேண்டிய செய்திகள் அவ்வாறு சொல்லப்பெற்று இருக்கின்றனவா என்பதையும் செய்தியாக்கத்தின்போது கவனிக்க வேண்டும்.

வன்முறையைத் தூண்டும் சொற்கள், ஆபாசத்தைத் தூண்டும் சொற்கள் இல்லாமல் செய்தி உருவாக்கப்பட வேண்டும்.

பத்தி பிரித்தல் அவசியமாகும். செய்தி முரண், செய்தி திரும்பித் திரும்பி வந்துவிடாமை போன்றனவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். செய்திகள் சுருக்கமாக, தெளிவுபட அமைக்கப்பட வேண்டும். துல்லியம், அறத்தன்மை ஆகியவற்றுடன் செய்திகள் சரியாக வெளியிடப்பட வேண்டும். தொடர்களுக்கு இடையில் தகுந்த நிறுத்தல் குறிகள் பயன்படுத்தப்பட வேண்டும். செய்திகள் வழியாகச் சிக்கலை உருவாக்கவோ தன்முயற்சியால் சிக்கலுக்கு முடிவு சொல்லவோ தேவையில்லை. சாதி, மத, இன வேறுபாடற்று செய்திகள் அமைக்கப்படவேண்டும்.

இத்தகைய முறையில் செய்திகளை வடிவமைப்பது என்பது செய்திச் செம்மையாக்கம் எனவும் அழைக்கப்படுகிறது.

# கூறு. 7

## செய்தி வகைகள்

குறிப்பு

**அரசியல் செய்திகள், திரைப்படச் செய்திகள், இலக்கியச் செய்திகள்,**
**மருத்துவச் செய்திகள், ஆன்மீகச் செய்திகள், வேலைவாய்ப்புச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள்,**
**நிருபருக்கான தகுதிகள்**

### 7.0. செய்தி வகைகள்

செய்திகள் அதன் அடிக்கருத்தினைக் கொண்டும், சென்று சேர வேண்டியவர்கள் கருதியும், பல வகைப்படுகின்றன. நாளிதழ்கள் வந்தவுடன் மனிதர்கள் தங்களுக்கு விருப்பமாக பகுதிகளை முதலில் படிக்க ஆரம்பிப்பர். அந்த அளவிற்கு செய்தியின் வகை என்பது மக்களை வகைமை செய்து விடுகின்றது.

1. மக்கள் செய்திகள்
2. அரசுச் செய்திகள்
3. நீதிமன்றச் செய்திகள்
4. கல்விச் செய்திகள்
5. சட்டமன்ற நாடாளுமன்ற செய்திகள்
6. பொதுக் கூட்ட செய்திகள்
7. மருத்துவச் செய்திகள்
8. அரசியல் செய்திகள்
9. அறிவியல் செய்திகள்
10. ஆன்மீகச் செய்திகள்
11. வேலை வாய்ப்புச் செய்திகள்
12. வணிக செய்திகள்

குறிப்பு

13. விளம்பரச் செய்திகள்
14. திரைப்படச் செய்திகள்
15. இலக்கியச் செய்திகள்

போன்ற பல வகைச் செய்திகள் இதழ்களில் இடம்பெறுகின்றன. இச்செய்தி வகைகள் செய்திகளை அறிவிப்பதுடன், செய்தி உருவாக்குபவருக்கும், செய்தி சென்று சேர்வோருக்கும் இடையில் பாலமாக அமைகின்றன. இதன்வழி இவ்விருவருக்குமான தொடர்பு பல வகைகளில் இருவருக்கும் உதவுகின்றன. இச்செய்தி வகைகளில் குறிக்கத்தக்கன பற்றிய அறிமுகங்கள் பின்வருமாறு.

## 7.1.அரசியல் செய்திகள்,

இதழ்களில் கட்டாயம் இடம்பெறும் செய்திகள் அரசியல் செய்திகளாகும். ஒவ்வொரு நாளும் நாட்டில் நடக்கும் அரசியல் சார்ந்த செய்திகளை, நிகழ்வுகளை இதழ்கள் தந்து கொண்டிருக்கின்றன. இவ்வகைச் செய்திகள் அரசியல் செய்திகள் எனப்படுகின்றன.

தேர்தல் காலத்தில் அரசியல் செய்திகளுக்கான வாசகர்கள் கூடுகிறார்கள். இக்காலத்தில் அரசியல்வாதிகளையும் வாக்காளர்களையும் இணைக்கும் பாலமாக அரசியல் செய்திகள் விளங்குகின்றன. இதுபோன்று ஆட்சி மாற்றங்கள், அதிகார மாற்றங்கள் நிகழும் நிலையிலும் அரசியல் செய்தி வெளிப்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

தேர்தல் காலத்தில் நடத்தப்படும் கருத்துக்கணிப்பு சார்ந்த அரசியல் செய்திகள் வாக்காளர்களின் மனப்போக்கினை மாற்றத்தக்கனவாக விளங்குகின்றன. கருத்துக்கணிப்புகள், புள்ளி விபரங்கள், முந்தைய அரசியல் நிலவரம், தற்கால அரசியல் நிலவரம் போன்றனவும் அரசியல் செய்திகளில் அடங்குகின்றன.

அரசியல் செய்திகளை வழங்கும்போது ஒரு காட்சியின் சார்பாக செய்திகளை வழங்கிவிடக் கூடாது. இதில் மிகக்கவனம்

தேவை. ஆட்சியில் இருக்கும் கட்சி, எதிர்க்கட்சி என எக்கட்சியின் சாயலும் இல்லாத நிலையில் செய்திகள் வெளிவரவேண்டும்.



தினத்தந்தியில் தேசிய செய்திகள், உலகச் செய்திகள், மாநிலச் செய்திகள், சிறப்புக் கட்டுரைகள் என்ற பகுப்புகளில் அரசியல் செய்திகள் வழங்கப்பெறுகின்றன. தினமலரில் அரசியல் செய்திகள் இந்திய அளவில், தமிழ்நாடு அளவில் என்று இருபிரிவுகளாகப் பிரிக்கப்பெற்று வழங்கப்பெறுகின்றன. தினமணியில் இந்தியா, தமிழகம், மாநிலங்கள், உலகம் என்ற அளவில் அரசியல் செய்திகள் இடம் பெறுகின்றன. தமிழ் இந்துவிலும் தமிழகம், இந்தியா ஆகிய பிரிவுகளின்கீழ் செய்திகள் வழங்கப்பெறுகின்றன. பெரும்பாலும் முதல் இரண்டு பக்கங்கள் இந்திய அளவிலான அரசியல் செய்திகள் படத்துடன் இடம்பெறுகின்றன. முதல் பக்கத்தின் தலைப்புச் செய்தியாகப் பெரும்பாலும் அரசியல் செய்திகளே அமைகின்றன. இப்பக்கம் வண்ணம் மிக்கதாகவும் விளங்குகின்றது. எனவே அரசியல் செய்திகளே தமிழ் நாளிதழ்களின் முதன்மைச்செய்திகளாக விளங்குகின்றன என்பது தெளிவாகின்றது.

மகாத்மா காந்தியடிகள் பிறந்து தற்போது நூற்று ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி காந்தியடிகளின் நூற்று ஐம்பதாவது பிறந்தநாள் இந்தியா முழுவதும் கொண்டாடப்பட ஏற்பாடு செய்யப்பட்டது.

இதழ்களும் இந்நிகழ்வைக் கொண்டாடின. 2018 ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் வெளியிடப்பெற்ற செய்திகள் சில இங்கு அரசியல் செய்திகளுக்கான மாதிரிகளாக காட்டப்பெறுகின்றன.

குறிப்பு

## 7.1.1.தினமணியில் காந்தி 150

**1947 ஆகஸ்டு 18 ல் காந்தி மகான் பெருமையைப் போற்றும் விதத்தில் தினமணியில் வெளிவந்த சுதந்திர தினவிழாச் செய்தி!**

இந்தியா ஆகஸ்டு 15 1947 ஆம் ஆண்டில் விடுதலை அடைந்தது. இந்திய விடுதலையை முன்னிட்டு தினமணியில் 18.8.1947 அன்று வெளிவந்த சுதந்திர தினக் கொண்டாட்ட செய்திகளைப் பாருங்கள். அன்று காந்தியை ஆசிய நாடுகள் அனைத்தும் தங்களது தலைவராகக் கொண்டாடி மகிழ்ந்தன.

இந்தியா விடுதலை அடைந்ததை ஒட்டி இந்தியர்களான நம் முன் நாம் விரைந்து செய்து முடிப்பதற்கான மாபெரும் கடமைகள் பல காத்திருக்கின்றன. நாட்டு மக்கள் அனைவரும் சுதந்திரப் போராட்டத்துக்கு அளித்த அதே ஒத்துழைப்பை நாட்டு முன்னேற்றப்பணிகளுக்கும் அளித்து நம்பிக்கையுடன் உழைக்க உறுதியேற்போம். என அன்றைய முதல் இந்திய சுகாதார மந்திரியான அமிர்த கௌர் பிரசங்கம் செய்தார். அதற்கான ஆவணப் பதிவும் அன்றைய தினம் தினமணியில் வெளியாகியுள்ளது. இந்திய விடுதலை உலகம் முழுதும் இந்தியர்களால் கொண்டாடப்பட்டது.

அமெரிக்காவில் உள்ள இந்திய ஸ்தானிகராலயத்தில் இந்திய சுதந்திர தினவிழாக் கொண்டாட்டம் ஆஸில்அலி அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. அந்த விழாவில் அமெரிக்கத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இந்தியா காந்திஜியின் வழிகாட்டுதலின் படி சத்யாகிரஹப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து ஈட்டிய இந்த விடுதலையானது உலகின் தன்மையையே மாற்றி விடக்கூடியதோர் சம்பவம் என அன்றைய அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஹென்றி வாலஸ் தெரிவித்த கருத்து மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. இந்தியா சாத்வீகமான முறையில் ஈட்டிய இந்த சுதந்திரம் எவ்வளவு அர்த்த

புஷ்டியானது என்று உணர இன்னும் பல தலைமுறைகளாகும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

தினமணியில் ஆகஸ்டு 15 1947 ஆம் நாளில் காந்தி பற்றி வந்த தினமணிச் செய்தி மீளபிரசுரம் செய்யப்பெற்று அவரின் 150வது பிறந்தாள் கொண்டாடப்பெற்றுள்ளது.

### 7.1.2.தினத்தந்தியில் காந்தி 150

**காந்தியின் கொள்கைகளைக் கடைபிடிப்போம்**

மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த நாளான இன்று, இந்த தேசத்துக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் அவர் ஆற்றிய அளவிட முடியாத பங்களிப்பு குறித்து நினைவு கூரும் நமக்கு, உலக மக்களுக்கும் அவர் விட்டுச் சென்றுள்ள அழியாத மற்றும் தவிர்க்க முடியாத பொக்கிஷமான குணநலன்கள் வியப்பூட்டுவதாக உள்ளன. இந்தியாவின் மிகமுக்கியமான காலகட்டங்களில் அவர் நமக்கு தலைவராக இருந்துள்ளார் என்பது நமக்கு பெருமை அளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது.

பரம்பரை பரம்பரையாக நாம் அவரால் தொடர்ந்து ஊக்கம் பெற்று வருகிறோம். உலகம் தற்போது எதிர் கொண்டு வரும் சவால்களான பருவகால மாற்றம், தீவிரவாதம், ஊழல் ஆகியவற்றுக்குத் தீர்வாகக், காந்தியக் கொள்கைகள்தான் ஒழுக்க மார்க்கத்துக்கான திசைகாட்டியாக உள்ளன என்று பிரதமர் நரேந்திர மோடி ஒருமுறை மிகச் சரியாக சுட்டிக்காட்டினார்.

காந்தியின் சத்தியாகிரகம் பற்றிய கோட்பாடுகள்தான் சமூக மாற்றத்திலும், அரசியலிலும் வலிமையான கருவியாக உருவெடுத்தன என்பதை வரலாறு நிரூபித்துக் காட்டியுள்ளது. மகாத்மா காந்தி ஒருமுறை உரையாற்றும்போது, "'மனிதவர்க்கத்துக்கு தேவையான ஒரு மகத்தான சக்தி அகிம்சையாகும். மனிதன் தன் புத்திகூர்மையால் உருவாக்கி

வைத்துள்ள அழிவுக்கான பலத்த ஆயுதங்களைவிட மிகுந்த பலமிக்கது அகிம்சை" என்று குறிப்பிட்டார்.

என்று துணை குடியரசுத் தலைவர்தம் கருத்துகள் அடங்கிய சிறப்புக் கட்டுரையை வெளியிட்டு தினத்தந்தி காந்தியடிகளின் 150 வது பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளது.

### 7.1.3.தமிழ் இந்துவில் காந்தி 150

தமிழ் இந்துவில் காந்தியடிகளின் வாழ்க்கைவரலாறு புகைப்படங்களுடன் தரப்பெற்று காந்தி 150 என்ற தலைப்பின் கீழ் அவரின் பங்களிப்பு பற்றிய செய்தி தரப்பெற்றுள்ளது.

### காந்தி 150

உண்மை, நேர்மை, எளிமையின் அடையாளம் காந்தி. நீதிமன்றத்தில் வழக்காட பயந்தவர், பின்னர் ஆங்கிலேயர்களையே அச்சமடைய வைத்தார். சாதாரண மனிதராக இருந்தவர், தம் போராட்டங்களாலும் கொள்கைகளாலும் மகாத்மாவாக மாறினார்.

தேசத்தின் தந்தை என்று அழைக்கப்பட்டாலும் ரூபாய்த் தாள்களில் இடம்பெற்றிருந்தாலும் இறுதிவரை எந்த அரசுப் பதவியையும் வகிக்காதவர். இருந்தும் உலகம் முழுக்கப் பிரபலமானவர்.

நெல்சன் மண்டேலா, மார்டின் லூதர் கிங், பராக் ஒபாமா என்று பலரும் அவருடைய அகிம்சைக் கொள்கையால் உந்தப்பட்டவர்கள்.

இவ்வாறு இதழ்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் அரசியல் செய்திகளை அளிக்கின்றன.

### 7.2.திரைப்படச் செய்திகள்,

திரைப்படத்துறை சார்ந்த செய்திகளுக்கும் தமிழ் இதழ்கள் தனித்துவம் அளிக்கின்றன. திரைப்பட விமர்சனங்கள், திரைப்பட நிகழ்வுகள், திரை உலக நட்சத்திரங்கள் பற்றிய செய்திகள்

போன்றவற்றை அளிப்பதன் வாயிலாக திரைப்படச்செய்திகள் மக்களைக் கவர்ந்து கொள்கின்றன. திரைப்படத்தைப் பொழுதுபோக்கு ஊடகவியல் பிரிவில் அடக்குவர்.



சென்னையில் அமைந்துள்ள கோடம்பாக்கம் என்ற பகுதி தமிழ்த்திரையுலகத்தினர் வாழும் பகுதியாக உள்ளது. இங்கு திரைப்படத்துறை சார்ந்த பலர் நாள்தோறும் பல்வேறு பணிகளைச் செய்துவருகின்றனர். இங்குத் திரைத்துறை செய்திகள் பெறுவதற்கு மிகு வாய்ப்புகள் உள்ளன.

தென்னிந்திய சினிமா, ஹாலிவுட், பாலிவுட், தமிழ்சினிமா, உலக சினிமா என்ற பகுப்புகளின் அடிப்படையில் தமிழ் இந்து நாளிதழ் செய்திகளை வெளியிட்டுவருகிறது. தினமணி செய்திகள், நியுஸ்ரீல், விமர்சனம் போன்ற பகுதிகளாக திரைச்செய்திகளை வழங்குகின்றது. தினகரன் ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட். கேலரி, விமர்சனம், கவர்ச்சி, கிசுகிசு, டிரய்லர் போன்ற பல தலைப்புகளில் தினகரன் திரைப்படச் செய்திகளை வழங்கி வருகிறது. கோடம்பாக்கம் கோடங்கி என்ற பாத்திரமே இவ்விதழில் உருவாக்கப்பெற்றுத் திரைச்செய்திகள் வழங்கப்பெறுகின்றன. சினிமா செய்திகள், முன்னோட்டம், விமர்சனம், சினி கேலரி, சிறப்புப் பேட்டி போன்ற தலைப்புகளின் கீழ் தினத்தந்தி திரைப்படச் செய்திகளை வழங்கி வருகிறது.

### 7.2.1.திரைப்பட விமர்சனம்

நாளிதழ்களில் பரவலாக திரைப்பட விமர்சனங்கள் வெளியிடப்பெறுகின்றன. திரைப்படத்தின் கதையைச் சொல்லிவிடாமல் விமர்சனம் வெளியிடப்பட வேண்டும். இவ்வகையில் அமைந்த சில மாதிரிகள் இங்கு எடுத்துக்காட்டிற்குத் தரப்பெறுகின்றன.

## 7.2.1.1.தினமலர் நாளிதழில் வெளிவந்துள்ள ஒரு திரைப்படம் குறித்தான விமர்சனம்



பரியேறும் பெருமாள் பி.ஏ., பி.எல்.," என்ற திரைப்படம் குறித்த விமர்சனத்தைப் பின்வருமாறு தினமலர் நாளிதழ் வெளியிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் புளியங்குளத்தைச் சேர்ந்த இளைஞர் பரியேறும் பெருமாள் (கதிர்), தன் நண்பர்களுடன் வேட்டைக்குச் செல்கிறார். அவர் கூடவே இருக்கும்'கருப்பி' நாய் திடீரென காணாமல்போகிறது. அதை தேடி அலையும்போது, அவரது கண் எதிரிலேயே ரயிலில் அடிபட்டு உயிரிழக்கிறது. தன் சமூகத்தின் மீதான வன்மமும், அடக்குமுறையும்தான் கருப்பி இறக்க காரணம் என்பதை உணர்கிறார்.

சட்டம் படித்தால்தான் தனது சமூகத்தினரின் குரல் ஓங்கி ஒலிக்கும் என்ற எண்ணத்துடன் நெல்லை சட்டக் கல்லூரியில் சேர்கிறார். அங்கும் பல சாதி வெறுப்புகள், அவமானங்களை சந்திக்கிறார். சக மாணவியான 'கயல்' ஆனந்திக்கு அவர் மீது காதல் உருவாகிறது. தாங்கள் வெவ்வேறு சமூகத்தினர் என்பதால் பிரச்சினை வரும் என்று கருதி, ஆனந்தியிடம் இருந்து விலக முயற்சிக்கிறார். இதற்கிடையில், ஆனந்தியின் காதல், அவரது வீட்டுக்கு தெரியவருகிறது. அடுத்தடுத்து வெடிக்கும் பிரச்சினைகள் என்ன? கல்லூரியில் தலைவிரித்தாடும் சாதி, சமூக வன்மத்துக்குள் சிக்கும் கதிர் எப்படி அதை எதிர்கொள்கிறார் என விரிகிறது மீதிப் படம். இயக்குநர் ராம் சினிமா பட்டறையில் பயின்ற மாரி செல்வராஜ் இயக்கியுள்ள முதல் படம். இயக்குநர் பா.இரஞ்சித் தயாரித்துள்ளார்.

### 7.2.1.2.ஆனந்தவிகடன் இதழில் வெளிவந்த மேற்குறித்த படத்திற்கான விமர்சனம்

கண்ணுக்குப் புலப்படாத அதிகாரத்தின் அடுக்குகள் ஏறி மிதிக்க நினைக்கும். உனக்கெல்லாம் இது ஒரு கேடா?“ என ஆயிரமாயிரம் கண்கள் கேள்விகளோடு துளைக்கும். தலைமுறைகளாகத் தொடரும் வறட்டு ஆணவம் தாமிரபரணியின் தண்ணீரில் துரத்தி மூழ்கடிக்கத் துடிக்கும். இவை அனைத்தையும் எதிர்த்துக் கேள்வி கேட்டு நிமிர்ந்து நின்றால்… அவன்தான் பரியேறும் பெருமாள்.“

வழக்கமாக இங்கே கதை சொல்வதுதான் வழக்கம். ஆனால், இங்கே பரியின் வழியே மாரி செல்வராஜ் சொல்லியிருப்பது பல தலைமுறைகளின் வலிநிறைந்த வாழ்க்கையை… அதை எப்படி அவரால் யதார்த்தமாக இரண்டரை மணிநேர சினிமாவில் சொல்ல முடிந்தது என்பதே ஆச்சர்யமாக இருக்கிறது. ரத்தமும் புழுதியும் கூத்தும் வேட்டையுமான அவ்வளவு அடர்த்தியான வாழ்க்கையை ஒரு சின்னப் பத்திக்குள் அடைக்கவே முடியாது. “இதுதான் கதை” என்ற முன்முடிவுகள் எதுவுமில்லாமல் போய் உட்காருங்கள். நாக்கில் எச்சில் ஊற முதல் காட்சியில் மோப்பம் பிடித்து அலையும் கறுப்பி முதல், இறுதிக் குறியீடாக ஓங்கி நிற்கும் இரண்டு டீ க்ளாஸ்கள் வரை எல்லாமும்… எல்லாரும் உங்களிடம் வலி பகிர்வார்கள், கதை சொல்வார்கள், கதறி அழுவார்கள், சுற்றி நின்று நடனமாடுவார்கள்… கடைசியாகக் குத்திக் கிழிக்கும்படி கேள்வியும் கேட்பார்கள்.

பரியாகக் கதிர். அவரை ஒவ்வொரு முறை திரையில் பார்க்கும்போதும் தோன்றும் கேள்வி ஒன்றுதான். இவ்வளவு திறமை இருந்தும் இவர் ஏன் நிறைய படங்கள் பண்றதில்ல?“ பரியேறும் பெருமாளில் கறுப்பியுடனான முதல் காட்சியிலேயே இந்தக் கேள்வியை மீண்டும் உரக்கக் கேட்க வைக்கிறார். டைட்டில் ரோலை ஏற்று நடிப்பது சாதாரணமல்ல. அதுவும் அடர்த்தியான

கதை கொண்ட படத்தில் அப்படி நடிப்பது மிகப்பெரிய சவால். மொத்தமாகத் தூக்கி சுமக்கின்றன அவரின் தோள்கள். பரியன்தான் இந்தப் படத்தின் ஆன்மா.

“யப்பா... எவ்ளோ கதை இருக்கு உன்கிட்ட? எனக்கெல்லாம் சொல்ல ஒண்ணுமே இல்ல” - இதுதான் ஆனந்தி. கிராமத்துத் தெருக்களில் இறங்கி நடக்கும்போது எதிர்ப்படும் முதல் முகம். இந்த உலகத்துல இருக்குற நல்லவங்க எல்லாம் என்னைச் சுத்திதான் இருக்காங்க“ என நம்பும் வெகுளிப் பாத்திரத்துக்கு இயல்பாகவே பொருந்திப்போகிறார். நடுவே சில காலம் கமர்ஷியல் சினிமா பக்கம் ஒதுங்கியவரை இழுத்துவந்து இதுதான் உங்களுக்கான இடம் என நிறுத்தியிருக்கிறார் மாரி.

பரியேறும் பெருமாளைப் பல்லக்கில் வைத்துத் தாங்குகின்றன நான்கு கேரக்டர்கள். முதலாவது ஆர்.கே ராஜா. நீ படிச்சு மேல வந்துடுய்யா! அதுவரைக்கும் அத்தனை அடியையும் இந்த உடம்பு தாங்கும்“ என அவர் சொல்லுமிடத்தில் நமக்குக் கண்களில் முட்டி நிற்கிறது நீர். இரண்டாவது கராத்தே வெங்கடேசன். குலசாமிக்குப் பண்றமாதிரி நினைச்சுக்கிட்டு இதைப் பண்ணிட்டு இருக்கேன்“ எனத் தன் செய்கைகளை அவர் நியாயப்படுத்தும்போது, பாகுபாடில்லாமல் எல்லாருக்குமே ஆத்திரம் பொங்குகிறது.

மூன்றாவது மாரிமுத்து. இடைநிலை சாதியில் கிடந்து அல்லல்படும் சராசரி தகப்பன். என் மகளையும் சேர்த்துக் கொன்னுடுவாங்கப்பா“ என அவர் உடையுமிடத்தில் சாதிப் பெருமையில் ஆர்வமில்லாத, அதேசமயம் சுற்றியிருப்பவர்களின் பேச்சை நிராகரிக்க முடியாத ஒரு ஊஞ்சாலட்டத்தைக் கண்முன் நிறுத்துகிறார் இயக்குநர். நான்காவதும் மிக முக்கியமானதுமான கேரக்டர், கதிரின் அப்பாவாக வரும் தங்கராஜ். பரியனின் பாஷையில் - அம்மா சத்தியமாகச் சொல்லலாம், இப்படி ஒரு பாத்திரப் படைப்பு இதற்கு முன் தமிழ் சினிமாவில் நிகழ்ந்ததே

இல்லை. ஒவ்வொரு முறை அவரைப் பார்க்கும்போது நெஞ்சு ஏகத்துக்கும் கனத்துப்போகிறது. இதற்காகவே ஸ்பெஷல் முத்தங்கள் மாரி!



இறுக்கமான கதை நம்மை அழுத்தும்போதெல்லாம் இடையே நுழைந்து நெகிழச் செய்து சிரிப்பு மூட்டுகிறார், யோகிபாபு. வழக்கமான உருவகேலிகள் இதிலில்லை. தனக்கு சீரியஸாக நடிக்கவும் தெரியும் என இரண்டாம் பாதி முழுக்க நிரூபித்திருக்கிறார். நம் எல்லாருக்குமே இப்படி ஒரு நண்பன் இருந்திருப்பான். லிஜீஷ், ஒரே ஒரு காட்சியில் வரும் சண்முகராஜன், “மெட்ராஸ்“ ஜானி என எல்லோருமே பக்கா பொருத்தம்.

இவ்வாறு இதழ்களில் திரைப்பட விமர்சனங்கள் திரைச் செய்திகளாக வெளிவருகின்றன. தினமலர் பொதுவான நிலையில் விமர்சனத்தை அமைக்க, ஆனந்த விகடன் நுணுக்கமாக விமர்சனத்தை வைக்கின்றது. ஆனந்தவிகடனில் திரைப்படங்களுக்கு மதிப்பெண்கள் வழங்கும் வழக்கமும் உள்ளது.

## 7.3.இலக்கியச் செய்திகள்,

செய்தித்தாள்கள், இதழ்கள் இலக்கியம் குறித்தான செய்திகளையும் வழங்கி வருகின்றன. பண்டை இலக்கியம், இன்றைய இலக்கியம், இலக்கியம் காட்டும் வாழ்க்கைமுறை போன்றன இலக்கிய செய்திகளாக வெளியிடப்பெறுகின்றன. தமிழ் இதழ்களில் சில இலக்கிய பங்களிப்பிற்குக் கூடுதல் பக்கங்களை அளிக்கின்றன.

தினமணியில் ஞாயிறுதோறும் தமிழ்மணி என்ற இலக்கியப் பகுதி இடம்பெறுகிறது. திங்கள் கிழமை தோறும் இலக்கியச் சங்கமம் என்ற தலைப்பின்கீழ் இலக்கிய நிகழ்வுகள் நடைபெறும் அறிவிப்புகள் வெளியிடப்பெறுகின்றன.

## 7.3.1.தினமணி தமிழ்மணியில் வந்த ஒரு கட்டுரை





### பிஞ்சும் இருக்கு அரசே

புலவர் ப.சோமசுந்தர வேலாயுதம்

ஒரு முறை பழனி மாம்பழச் சிங்கக் கவிநாவலார் இராமநாதபுரம் அரசரைக் காண வந்திருந்தார். அவர் பிறிவியிலேயே பார்வை இழந்தவர்.. தமிழ் பற்றியும், அதன் இனிமை பற்றியும் மகிழ்ச்சியுடன் அரசர் உரையாடிக் கொண்டிருந்தார்.

அரசர். கடிகாரத்தைப் பார்க்க, இரண்டு மணி நேரம் போனதே தெரியாமல் புலவருடன் உரையாடிக் கொண்டிருந்தது அரசருக்குத் தெரிந்தது. பக்கத்தில் நின்றிருந்த பணியாளரிடம் புலவருக்கு வழங்குவதற்காகப் பொருளும், பொன்னாடையும் கொண்டுவரப் பணித்தார் . அவ்வாறே வழக்கில் இருந்த வெள்ளி, தங்கக் காசுகளையும், பொன்னாடையையும் கொணர்ந்து அரசர் முன்னே வைத்தனர்.

தட்டில் இருந்த காசுகளை நீட்டப் புலவர் தட்டைப் பெற்றுக் கொண்டார். பின்னார் பணியாளார் கொண்டு வந்து தந்திருந்த பொன்னாடையைப் புலவருக்கு அணிவித்தார்.

அணிவித்த அந்தப் பொன்னாடையைக் கையில் எடுத்து அதனைத் தடவித் தடவிப் பார்த்த புலவர், ஆடையின் ஓரத்தில் கிழிந்திருந்ததையும் உணர்ந்து கொண்டார். புலவர் தடவித் தடவிப் பார்ப்பதைக் கண்ட அரசர், 'துண்டில் மாங்காய் வரைந்திருந்ததைக் குறித்து ''அதில் மாங்காய் வரைந்திருக்கிறது புலவரே'' என்றார்.

''அரசே பிஞ்சும் (பிஞ்சும் என்றால் கிழிந்தும்) இருக்குது'' எனச் சொன்னார் புலவர். மாங்காய் என்றதும் பிஞ்சும் (சிறிய மாங்காயைப் பிஞ்சு என்பதும் வழக்கு) இருக்கிறது என்று கூறிய

புலவரின் சமயோஜிதத்தையும், மதி நுட்பத்தையும், நகைச்சுவை உணர்வையும் வியந்தர் அரசர்."

பணியாளரின் தவறை அறிந்த அரசர் ஆடையைத் திரும்பப் பெற்றுக் கொண்டு புதிய ஆடையை வழங்கினார் என்பது வரலாறு.

இவ்வாறு இலக்கியச் செய்திகள் இதனுள் வழங்கப்படுகின்றன. மேலும் புதிய சொல்லாக்கங்கள், சான்றோர் வாழ்க்கை வரலாறு ஆகியவற்றுக்கும் இடமளித்து முழுப்பக்கத்தை இலக்கியத்திற்காகத் தினமணி நாளிதழ் ஒதுக்கி வருகிறது.

### 7.3.2. தினத்தந்தி- இலக்கியவாதியின் பக்கங்கள்

தினத்தந்தி நாளிதழில் இலக்கியவாதியின் பக்கங்கள் என்ற பகுப்பில் இலக்கியவாதிகள் குறித்த செய்திகள் இடம்பெறுகின்றன. எடுத்துக்காட்டிற்குப் பின்வரும் பகுதியைக் குறிப்பிடலாம்.

**படைப்பாளிகளுக்கு அறிவுரை தேவையில்லை வண்ணதாசனின் எண்ணங்கள்**

ஒரே கிராமத்தில் சாகித்ய அகாடமி விருது பெற்ற இருவர் என்ற பெருமைக்குரியவர்கள், இடைச்செவலை சேர்ந்த கு.அழகிரிசாமி, கி.ராஜநாராயணன். ஒரே வீட்டில் சாகித்ய அகாடமி பெற்றவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் தி.க.சிவசங்கரன், அவரது மகன் வண்ணதாசன். இவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் மையப்புள்ளியாகிறது திருநெல்வேலி. 1960களில் இருந்து எழுதிவரும் வண்ணதாசனுக்கு தற்போது வயது 70 ஆகிறது. "ஒரு சிறு இசை" என்ற சிறுகதை தொகுப்பிற்காக விருது பெற்றிருக்கும் அவரோடு ஒரு நேர்காணல். எப்படி எழுத்துக்குள் வந்தீர்கள்..? நான் பத்தாம் வகுப்பு படிக்கும் போது எழுதிய கதை ஏழையின் கண்ணீர்..அது ஒரு அச்சுக்கோர்ப்பவரைப்பற்றிய கதை. கே.டி.கோசல்ராம் நடத்திய புதுமை இதழில் வந்தது. அதற்கு முன்னரும் பத்திரிகைகளுக்குக் கதைகள் அனுப்பியிருக்கிறேன்.

ஆனால் வெளியாகவில்லை. என் படைப்புலகப் பாத்திரங்கள் அனைவரும், எனக்குத் தெரிந்த, நான் பழகுகிற, என்னை கடந்துபோகிறவர்கள்தான். அவர்கள் இன்னமும் நான் நேரில் பார்ப்பவர்களாக இருக்கிறார்கள். நான் என் தாய்வழிப்பாட்டியால் வளர்க்கப்பட்டேன். அந்த வகையில் நிறைய பெண்கள் சூழ்ந்த வாழ்க்கை. இதையெல்லாம் நான் படைப்பாக்கிக்கொண்டேன்" என்று அவரின் பேட்டியை வெளியிட்டுத் தன் இலக்கியப் பங்களிப்பினைத் தந்துள்ளது தினமலர் (6.1.2017)

## 7.4. மருத்துவச் செய்திகள்,

பாராம்பரிய மருத்துவமுறை, நவீன சிகிச்சைமுறை, கைவைத்தியங்கள் போன்றன குறித்தும், மருத்துவமனைகள், மருத்தவர்கள் குறித்தும் செய்திகள் வெளியிடப்பெறும் நிலையில் அவை மருத்துவ செய்திகள் என வகைமை செய்யப்படுகின்றன.

நாளிதழ்களும் வார இதழ்களும் மருத்துவ செய்திகளுக்குத் தனியிடம் தந்து வெளியிட்டு வருகின்றன. நலம் என்ற பகுப்பில் தினமலர் உடல்நலம் குறித்த செய்திகளை வெளியிடுகிறது.

## 7.4.1." நுரையீரலை பாதுகாப்பது எப்படி?

வீட்டில் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய மூலிகை, தூதுவளை. இன்று, இதன் தேவையை அதிகம் உணர்கிறோம். நம் முன்னோர், இந்த மூலிகையை அதிகம் பயன்படுத்தி, ஆரோக்கியமான நுரையீரலுடன் வாழ்ந்து இருக்கின்றனர்."மாதுளை வளர்த்த வீட்டில், வயிற்றில் கலங்கமில்லை... தூதுவளை வளர்த்த வீட்டில், நெஞ்சில் கலங்கமில்லை" என்ற, ஒரு பழமொழி உண்டு. தூதுவளையை வளர்க்க முடியாவிட்டாலும், கடைகளில் கிடைக்கிறது.வாரத்திற்கு இருமுறை, சட்னி, துவையல் என, பிடித்த மாதிரி சமைத்து சாப்பிடலாம். நுரையீரலை சுத்தம் செய்யும் திறன், இதற்கு அதிகம்." என்ற பகுதியில் பராம்பரிய மருத்துவக்குறிப்பு

இடம்பெற்றுள்ளது. இது தினமலர் இதழில் 24.10.2019 அன்று வெளிவந்துள்ளது.

குறிப்பு

தினமணி நாளிதழில் மகளிர் நலம், குழந்தைகள் நலம், பெரியோர் நலம் என்று பல பகுதிகள் மருத்துவம் என்ற பகுப்பின் கீழ் மருத்துவச் செய்திகளை வெளிப்படுத்தும் வண்ணம் வெளியிடப்பெற்றுவருகின்றது. இதனுள் வெளிவந்த ஒரு செய்தி பின்வருமாறு.

“பொதுவாக சிலருக்கு உடல் தோற்றம் அழகாக இருக்கும். ஆனால், அவர்களுடைய பற்களில் கறையாக இருக்கும். இதனால் அவர்கள் மற்றவர்களுடன் பேசுவதற்கும், பழகுவதற்கும் தயங்குவார்கள். இப்படி பற்களில் படிந்து இருக்கும் கறையைப் போக்க சில எளிய வழிகள் இதோ:

தினமும் பல் தேய்க்கும் முன்பு சிறிது உப்பு தூளை வைத்துப் பல்லை தேய்த்துவிட்டு பின்னர், பேஸ்ட் கொண்டு பல் தேய்த்தால் பற்களில் படிந்த கறைகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கும்.

இரவு சாப்பாடு முடித்து படுக்கச் செல்வதற்கு முன்பு ஆரஞ்சு பழத்தோலைக் கொண்டு பற்களை நன்றாக தேய்க்க வேண்டும். இதனை தேய்த்தபிறகு வேறு எதையும் சாப்பிடவோ, குடிக்கவோ கூடாது. மறுநாள் காலை எழுந்து வாயை கொப்பளிக்கலாம். இரவு முழுவதும் பற்களில் படர்ந்திருப்பதால் ஆரஞ்சு பழத்தோல் கறையை போக்குவதுடன் கிருமிகளையும் அழித்துவிடும்.

ஸ்ட்ராபெர்ரி பழத்தில் இரண்டு எடுத்து நன்றாக அரைத்து, தினமும் காலையில் பல் தேய்த்தவுடன், சிறிதளவு எடுத்து லேசாக பற்களில் தேய்த்து வாய் கொப்பளிக்க வேண்டும். இவ்வாறு 10 நாட்களுக்கு செய்து வர, பற்களில் உள்ள கறைகள் நீங்கும்.

பற்களைச் சுத்தமாக்குவதிலும், ஈறுகளுக்கு ஆரோக்கியம் அளிப்பதிலும் ஆப்பிளின் பங்குச் சிறந்தது. எனவே உணவைச் சாப்பிட்டு முடித்த ஒரு மணி நேரம் கழித்து ஆப்பிளைச் சில துண்டுகள் சாப்பிட்டு வர, பற்களில் கறை படிவதைத் தடுக்கலாம்.

கொய்யாப் பழம் மற்றும் கொய்யா இலைகள் பற்களில் உள்ள கறையைப் போக்க மிகச்சிறந்தது. கொய்யா இலையை தண்ணீரில் கொதிக்க வைத்து, அந்த நீரைக் கொண்டு வாயைப் கொப்பளித்து வந்தாலும் அல்லது தினந்தோறும் ஒரு கொய்யாப்பழத்தைச் சாப்பிடுவதன் மூலமும் பற்களில் உள்ள கறையைப் போக்க முடியும்.

1 தேக்கரண்டி கிராம்புத் தூளுடன், 1 தேக்கரண்டி ஆலிவ் ஆயில் கலந்து, கறைபடிந்த பற்களில் தேய்த்து, சிறிது நேரத்திற்குப் பின் வெதுவெதுப்பான நீரில் வாயைக் கொப்பளிப்பதன் மூலம் சுத்தமான பற்களைப் பெறலாம்” என்ற செய்தி கோவிந்தராசன் என்பவரால் எழுதப்பெற்று 24.6.19 அன்று வெளியிடப்பெற்றுள்ளது.

தினகரன் நாளிதழில் இயற்கை மருத்துவம், மூலிகை மருத்துவம், டயட், அந்தரங்கம் ஆலோசனை போன்ற பல தலைப்புகளில் மருத்துவ செய்திகள் வெளிவருகின்றன.

“அந்தந்த வயதில்” என்ற தலைப்பின் கீழ் சில ஆலோசனைகளை இவ்விதழ் வழங்கியுள்ளது.

### 7.4.2. 40 வயதுகளில்...

குறிப்பாக ஆன்டிஜென் ரத்த பரிசோதனை மூலம் ஆண் பால் உறுப்புகளுக்கு உடனிணைவான சுரக்கும் சுரப்பி கவனமாக இருக்க வேண்டும். இரவு நேரங்களில் அதிக சிறுநீர் கழிப்பவராக இருந்தால் மலம் மற்றும் ரத்தம் பரிசோதனை செய்துகொள்ள

குறிப்பு

வேண்டும். மூலம், குடல் புற்றுநோய் ஏதேனும் இருப்பதாக தெரிய வந்தால் கால தாமதமின்றிச் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

குடல் மற்றும் வயிற்றுப் பிரச்னை இருப்பதாக உணர்ந்தால் இரைப்பை குடல் மருத்துவரை அணுகி பெருங்குடல் மற்றும் இரைப்பையின் உட்தோற்றத்தைப் பரிசோதித்தல் அவசியமாகும். உங்கள் பரம்பரையில் யாருக்கேனும் அதிக உடல்பருமன் அல்லது லேசான நெஞ்சு வலி இருந்தால் நீங்கள் உஷாராகிவிட வேண்டும். இதயநோய் மருத்துவரை அணுகி எலக்ட்ரோகார்டியோ கிராம் சிகிச்சை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

வருடத்திற்கு ஒரு முறை கண் மருத்துவரை பார்த்து கண்ணில் உயர் அழுத்தம, விழிப்புள்ளி சிதைவு), கண்புரை வந்துள்ளதா எனவும் பரிசோதித்துக் கொள்ள வேண்டும். மரபணு மூலமாகவும் சர்க்கரை நோயாளிகளுக்கு கண் நோய் வர வாய்ப்புள்ளது. எனவே, மரபுரீதியிலான காரணங்களையும் திரும்பிப் பார்க்க வேண்டியது அவசியமாக உள்ளது’ என்ற குறிப்பு தினகரன் (13.11.19) நாளிதழில் வெளிவந்துள்ளது.

இவ்வாறு குறிக்கத்தக்க இடம் உடல்நலம் சார்ந்த மருத்துவ செய்திகளுக்கு இதழ்கள் வழங்கி வருகின்றன.

## 7.5.ஆன்மீகச் செய்திகள்

பக்தி சார்ந்த நிகழ்ச்சிகள் நடக்கும் விபரம், ஆலயங்கள் பற்றியக் குறிப்புகள், விழாக்கள் பற்றிய குறிப்புகள், குறிக்கத்தக்க முக்கியமான ஆன்மீக நாட்கள், அனைத்து மதச் செய்திகள் போன்றவற்றை இதழ்கள் வழங்கி வருகின்றன. குறிப்பாக நாள்தோறும் சோதிடம் குறிக்கத்தக்க இடத்தைப் பெறுகின்றது. மேலும் வார சோதிடம்,மாத சோதிடம், ஆண்டு சோதிடம், பெயர்ச்சி சோதிடங்கள் போன்றனவும் இதழ்களில் வெளியிடப்பெறுகின்றன. தினத்தந்தி சோதிடத்திற்கு என தனித்த இணைப்பு இதழையே வெளிக்கொணருகிறது. தினமணி வெள்ளி மணி என்ற பகுப்பில்

வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீகச் செய்திகளை வெளியிட்டு வருகின்றது.

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயிலில் நடைபெற்ற அத்திவரதர் வைபவம் பற்றிய செய்திகள் இதழ்களில் வெளியிடப்பெற்றன.

### 7.5.1.தினத்தந்தியில் அத்திவரதர் பற்றிய செய்தி

"வரதராஜப்பெருமாள் கோவிலில், அனந்தசரஸ் திருக்குளம், பொற்றாமறை திருக்குளம் ஆகிய 2 திருக்குளங்கள் அமைந்துள்ளன. மேற்கு ராஜகோபுரத்தில் வடகிழக்கிலும், 100 கால் மண்டபத்திற்கு வடக்கேயும் இருக்கிறது அனந்தசரஸ் திருக்குளம். இந்த குளத்தில் நீராவி மண்டபத்திற்கு தெற்கேயும், விமானத்துடன் கூடிய நான்கு கால் மண்டபத்தில் தான் அத்தி வரதர் அருள்கிறார். இவர் சுமார் 10 அடி உயரமும், 4 அடி அகலமும் கொண்டவர். முழுவதும் அத்தி மரத்தால் செய்யப்பட்டவர்.

இவர் திருக்குளத்தில் உள்ளே இருந்து 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் வெளியே வருவார். அப்போது கோவில் வளாகத்தில் அவரை பக்தர்கள் தரிசிக்கலாம். ஒரு மண்டல காலம் (48 நாட்கள்), அவர் பக்தர்களுக்கு காட்சியளிப்பார். 30 நாட்கள் சயன கோலத்திலும், 18 நாட்கள் நின்ற நிலையில் அருள்வார்.

40 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும் இந்த நிகழ்வு கடந்த 2.7.1979-ம் ஆண்டு நடைபெற்றது. அதன்படி இந்த வருடத்தில் தான் மீண்டும் அந்த நிகழ்வு நடைபெற உள்ளது." என்ற செய்தி பிப்ரவரி 12, 2019 அன்று வெளியிடப்பெற்றுள்ளது.

### 7.5.2.தினமலரில் அத்திரவரதர் செய்தி

**காஞ்சி அத்தி வரதர் வைபவம் நிறைவு**

காஞ்சிபுரம் : காஞ்சி அத்தி வரதர் வைபவம் நேற்றுடன் நிறைவு பெற்றது. வரதராஜ பெருமாள் கோவிலில் அனந்தசரஸ் குளத்தில் உள்ள நீராழி மண்டபத்தில் வைப்பதற்கான சடங்குகள் முடிந்து அத்தி வரதரை வைத்தனர். இன்று முதல் வரதராஜப் பெருமாள் கோவிலில் வழக்கமான வழிபாடு நடைபெறும் என கலெக்டர் பொன்னையா தெரிவித்தார்.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலில் ஜூலை 1ஆம் தேதி முதல் அத்தி வரதர் வைபவம் நடைபெற்று வந்தது. இதில் அத்தி வரதர் சயன கோலத்தில் 31 நாட்களும் நின்ற கோலத்தில் 16 நாட்களும் பொது மக்களுக்கு அருள்பாலித்தார். நேற்று முன்தினம் முதல் பொதுமக்கள் தரிசனம் நிறுத்தப்பட்டது.

வரதராஜ பெருமாள் கோவிலில் மேற்கு ராஜகோபுரம் நுழைவு வழியில் தரிசனத்திற்குச் செல்வதற்கு வசதியாக தற்காலிகப் பாலம் அமைக்கப்பட்டதை நேற்று மதியம் முதல் அகற்றும் பணி நடந்தது. அத்தி வரதர் வைபவத்தில் பக்தர்கள் கூட்டத்தைச் சமாளிக்க செட்டித் தெரு முதல் ரங்கசாமி குளம் வரை சாலையில் தடுப்பு அமைக்கப்பட்டிருந்தன. அவற்றையும் நேற்று அகற்றினர்.

கோவிலை சுற்றியுள்ள தெருக்களில் அமைக்கப்பட்ட தடுப்புகள் இன்னும் அகற்றப்படவில்லை. இருந்தாலும் அந்த தெருக்கள் நேற்று தான் அமைதியாக காணப்பட்டன. நேற்று காலை முதல் பொதுமக்களை யாரும் கோவிலுக்குள் அனுமதிக்கவில்லை. அத்தி வரதரை அனந்தசரஸ் குளம் நீராழி மண்டபத்தில் வைப்பதற்கான சடங்குகள் நடைபெற்றன. அத்தி வரதருக்கு காலை மாலையில் பூஜைகள் செய்யப்பட்டன.

அடுத்த 40 ஆண்டுகளுக்கு சிலைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் அத்தி வரதருக்கு மூலிகைகள் கலந்த தைலகாப்பு சாத்தப்பட்டது. காஞ்சி மாவட்ட கலெக்டர்

பொன்னையா பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது: காஞ்சி அத்தி வரதர் வைபவத்தில் பணிபுரிந்த அனைத்து துறை அதிகாரிகளுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். துப்புரவு பணியாளர்களுக்கு இன்னும் இரண்டு தினங்கள் பணி நீடிக்கும். போக்குவரத்து மாற்றத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து பணிகளும் முழுமையாக சீரமைக்க 15 நாட்கள் ஆகும்" என்று தினமலர் செய்தி வெளியிட்டுள்ளது. (18.8.2019)

## 7.5.3.தினமணியில் அத்திவரதர் பற்றிய செய்தி

அனந்தசரஸில் அத்தி வரதர்: இக்கோயிலின் மிகச்சிறப்பாக போற்றப்படுவது ஆதி அத்தி வரதர். இத்திருக்குளத்தின் அடியில் வீற்றிருக்கும்

அத்திவரதர் பெருமாளை 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பக்தர்கள் தரிசனம் செய்ய முடியும். ஏனெனில் அவர் பக்தர்களின் கண்ணுக்குப் புலப்படாது வீற்றிருப்பது அனந்தசரஸ் திருக்குளத்தின் அடியில். இக்கோயிலின் நூறுகால் மண்டபத்தின் அருகில் நீருக்கு அடியில் உள்ள நான்கு கால் மண்டபத்தில் தன்னை மறைத்துக்கொண்டு பக்தர்களின் எண்ணத்தோடு அருள்பாலித்து வருகிறார். இக்குளத்தில் நீர் எப்போதும் வற்றுவதில்லை. அதனால் பெருமாள் யார் கண்ணுக்கும் புலப்படமாட்டார்.

பெருமாளின் திருமேனி மிகப்பெரிய அத்தி மரத்தால் வடிவமைக்கப்பட்டு, பிரம்மதேவனால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. பிரம்மனின் யாகத் தீயில் இருந்து தோன்றியதால் சிறிது பின்னப்பட்டுவிட்டது. எனவே, அசரீரி மூலம் தன்னை ஆனந்த தீர்த்தத்தில் விடவிட்டு பழைய சீவரத்திலிருந்து சிலையை காஞ்சியில் பிரதிஷ்டை செய்யுமாறு பணித்துள்ளார் பேரருளாளன். அதனால்தான், பெரும் உஷ்ணத்தைத் தணிக்கவே தெப்பக்குளத்தில் வாசம் செய்வதாக ஐதீகம். அத்தி வரதப் பெருமாளை வெள்ளித்தகடு பதித்த பெட்டியில் சயனக் கோலத்தில்

வைத்து அனந்த புஷ்கரணி மண்டபத்தின் நடுவே நீரில் வைத்துள்ளனர்.

குளத்தில் எழுந்தருளியது ஏன்?

அனந்தசரஸ் புஷ்கரணிக்குள் ஒரு மண்டபம் அமைத்து அதில் ஸ்ரீ அத்தி வரதரை எழுந்தருளியிருக்கும்படி செய்துள்ளார்கள். இவரை இங்கு எழுந்தருளியிருக்கச் செய்தது பற்றி பலவாறு கூறப்பட்டு வருகிறது.

வெள்ளைக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் கோயில் சிலைகள் அனைத்தையும் அவர்கள் நாட்டிற்குக் கடத்திச் சென்ற வேளையில், இந்த ஸ்ரீ அத்திவரதரையும் நாடு கடத்திவிடுவார்களோ என்று அச்சத்தில் அப்போது இதனை ஆராதித்து வந்தவர்கள் இவரை பூமிக்கடியில் பள்ளம் தோண்டிப் புதைத்திருந்தனர்.

பிற்பாடு சில காலம் கழித்து அந்த இடத்தில் பெருமாள் இருப்பது சிலரால் கண்டுபிடிக்கப்பட்டு அவரை அங்கேயே ஆராதித்து வந்தார்கள் என்றும் அவருக்கு அதே இடத்தில் ஒரு மண்டபம் கட்டி, அதில் வைத்து பூஜித்ததாகவும் சொல்லப்படுகிறது.

அந்த மண்டபத்தைச் சுற்றிலும் பள்ளம் ஏற்பட்டு தண்ணீர் தேங்கியதால் அதையே ஒரு குளமாக மாற்றி நிரந்தரமாக தண்ணீருக்குள்ளேயே அவரை வைத்துவிட்டதாகவும், 40 வருடத்திற்கு ஒருமுறை அவரை வெளியே எடுத்து ஒரு மண்டல காலத்திற்கு அவரை பூஜித்ததாகவும், பின்னர் அதற்குள் அவரை வைத்துவிட்டதாகவும் ஒரு சிலரால் கூறப்பட்டு வருகிறது.

இதைப்பற்றி மற்றொரு சாரார் கூறுவதாவது:

இப்போது கோயில் இருக்குமிடம் ஒரு காலத்தில் (பல நூற்றாண்டுகளுக்கு முன்) அத்திமரங்கள் சூழ்ந்த மலையாக இருந்ததாகவும், அப்போது பிரம்மா யாகம் செய்து அந்த யாகத்திலிருந்து இவர் (ஸ்ரீ அத்தி வரதர்) வந்ததாகவும்,

அதிலிருந்து அவரை பிரம்மா பூஜித்து வந்ததாகவும் ஒருசில காலத்திற்குப் பின்னர் ஸ்ரீ அத்திகிரி வரதர் அர்ச்சகர் கனவில் வந்து தான் பிரம்மாவின் யாக குண்டத்திலிருந்து வந்ததால், தனது உடல் எப்போதும் தகிப்பதாகவும், எனவே தன்னை தினந்தோறும் மூன்று வேளையும் நூற்றுக்கணக்கான குடம் நீர் கொண்டு அபிஷேகம் செய்யும்படியும், அவ்வாறு முடியாமல் போனால் நிரந்தரமாக புஷ்கரணியில் (குளத்து நீரில்) எழுந்தருளச் செய்யும்படியும் ஆணையிட்டதாகவும், அவருக்கு தினந்தோறும் மூன்று வேளையும் நூற்றுக்கணக்கான குடம் நீர் கொண்டு அபிஷேகம் செய்வது கஷ்டமாக இருந்ததால் அவரை குளத்தில் எழுந்தருளச் செய்வது என்று முடிவு செய்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

ஆனால், அவரை குளத்தில் எழுந்தருளச் செய்துவிட்டால் மூலவருக்கு எங்கு போவது என்று அந்த அர்ச்சகர் கவலைப்படவே, மீண்டும் வரதர் கனவில் வந்து பக்கத்தில் சில மைல் தொலைவில் ”பழைய சீவரம்“ என்னும் ஊரில் மலைமேல் தன்னைப்போலவே ஒரு பிரதிபிம்பமாக ஒரு வரதர் இருப்பதாகவும் அவரைக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்து பூஜித்துக் கொள்ளும்படியும், தன்னை 40 வருடங்களுக்கு ஒருமுறை வெளிக்கொண்டுவந்து ஒரு மண்டல காலம் வெளியில் பூஜை செய்து விடும்படியும் ஆணையிட்டதாகவும் அதன்படியே பழைய சீவரத்திற்குச் சென்று பார்த்தபோது அவர்கள் பெருமாள் கூறிய அதே இடத்தில் இவரைப் போலவே ஒரு பிரதிபிம்பமாக இருந்தவரைக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்து (தற்போது உள்ள மூலவர்) இவரைத் தண்ணீருக்குள் எழுந்தருளச் செய்ததாகவும் சொல்லப்படுகிறது.

தற்போதும் வருடத்திற்கு ஒரு குறிப்பிட்ட தினத்தன்று காஞ்சியில் உள்ள வரதராஜப் பெருமாள் காஞ்சியிலிருந்து பழைய சீவரத்திற்கு பாரிவேட்டை உற்சவமாக சென்று வருவது இதன் அடிப்படையில்தான் என்று கூறப்படுகிறது. காஞ்சிபுரம் கருட

சேவையும், தேர் உற்சவமும் மிகவும் புகழ்பெற்றவையாகும். இன்றும் லட்சக்கணக்கான மக்கள் வந்து இந்த சேவையை தரிசித்துச் செல்வதன் மூலம் இதனுடைய சிறப்பு நமக்குப் புலனாகிறது" என்று தினமணி செய்தி வெளியிட்டுள்ளது. (10.4.2019)

இவ்வாறு ஆன்மீகச் செய்திகள் இதழ்களில் வெளியிடப்பெற்று வருகின்றன.

## 7.6. வேலைவாய்ப்புச் செய்திகள்,

இதழ்களில் மிக முக்கியமான செய்திகளாக விளங்குவன வேலை வாய்ப்புச்செய்திகளாகும். விளம்பரங்கள் வாயிலாக வேலை வாய்ப்புச்செய்திகள் அதிகம் வழங்கப்பெற்றாலும் வேலை வாய்ப்புச் செய்திகளைத் தனியாகவும் இதழ்கள் வழங்கி வருகின்றன. இச்செய்திகள் முழுக்க முழுக்கச் சேவை அடிப்படையில் சமுதாயத்திற்கு உதவி வருகின்றன.

வேலை வாய்ப்பிற்கான தேர்வுகள் அறிவிக்கப்பட்டவுடன் அத்தேர்வுகள் குறித்த செய்திகளையும் மாதிரி வினாத்தாள்களையும் இதழ்கள் வெளியிட்டுவருகின்றன. இதுவும் குறிக்கத்தக்க சேவையாகும்.

வாரந்தோறும் தினமலர் இதழில் வேலைவாய்ப்புச் செய்திகள் வழங்கப்படுகின்றன. பின்வரும் செய்தி ஒரு எடுத்துக்காட்டு செய்தியாகும்.

**"தபால் துறையில் வாய்ப்பு**

தமிழக தபால் துறையில் காலியாக உள்ள எம்.டி.எஸ்., பணியிடங்களை நிரப்புவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

காலியிடம்: எத்தனை இடங்கள் என்பது பின்னர் அறிவிக்கப்படும்.

வயது: 18 -25. இட ஒதுக்கீட்டு வயது சலுகை உள்ளது.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு. தமிழ்மொழியை ஒரு பாடமாக படித்திருக்க வேண்டும்.

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு 22.12.2019 அன்று நடைபெறும். காலை 10:00-11:00 மணி வரை முதல் தாளும், 11:10 - 12:10 வரை 2வது தாளும் நடைபெறும்.

தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி.

விண்ணப்பிக்கும் முறை : இணையதளத்தில் படிவத்தை டவுண்லோடு செய்து, விபரங்களை பூர்த்தி செய்தி விண்ணப்பிக்க வேண்டும்.

கடைசி தேதி : 29.11.2019" என்று ஒரு வேலை வாய்ப்புச்செய்தி வழங்கப்பெற்றுள்ளது. (19.11.19)

தினமணி நாளிதழ் வங்கிப்பணிகள்,அரசாங்கப் பணிகள், அரசுத் தேர்வுகள் என்ற தலைப்புகளின் கீழ் வேலை வாய்ப்பு தொடர்பான செய்திகளை வழங்கிவருகிறது.

**ரூ.67 ஆயிரம் சம்பளத்தில் மத்திய சிறு, குறு, நடுத்தர தொழில்கள் மையத்தில் வேலை வேண்டுமா? (26.11.2019)**

மத்திய அரசின் சிறு, குறு, நடுத்தர தொழில்கள் மையத்தில் காலியாக உள்ள மேலாளர், பொறியாளர் மற்றும் கணக்கு அதிகாரி பே◌ான்ற பணியிடங்களுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி மற்றும் காலியிடங்கள் விவரம்:

பணி: Senior Manager (Training)- 01

வயதுவரம்பு: 45க்குள் இருக்க வேண்டும்.

சம்பளம்: மாதம் ரூ.78,800-2,09,200



பணி: Manager(Maintenance)- 01

வயதுவரம்பு: 40க்குள் இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை, வயதுவரம்பு சலுகை போன்ற முழுமையான விவரங்கள் அறிய www.idtr.gov.in அல்லது https://www.idtr.gov.in/idtr/bulletin-board.php?#lnk93 என்ற லிங்கில் சென்று தெரிந்துகொள்ளவும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சென்று சேர கடைசி தேதி: 08.12.2019."

இவ்வகையில் மிகத் துல்லியமாக வேலை வாய்ப்புச்செய்திகள் வழங்கப்பெறுகின்றன.

## 7.7.விளையாட்டுச் செய்திகள்,

தனிநபர் விளையாட்டுச் சாதனைகள், குழு விளையாட்டுச் சாதனைகள், விளையாட்டுப்போட்டி நடைபெறும் நாள், நேரம், இடம் போன்ற செய்திகள், விளையாட்டு வீரர்கள் பற்றிய தகவல்கள் போன்றன விளையாட்டுச்செய்திகளாக இதழ்களில் வெளியிடப்பெறுகின்றன.

விளையாட்டுச் செய்திகளை எழுதுகின்ற செய்தியாளர்கள் பல்வேறு விளையாட்டுகளைப் பற்றியும், அவற்றின் விதிமுறைகளைப் பற்றியும், பயன்படுத்தப்படும் கலைச்சொற்களைப் பற்றியும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். விளையாட்டுச்

குறிப்பு

செய்திகளைச் சராசரி வாசகரும் புரிந்து கொள்ளும் வகையில் விளக்க வேண்டும்.

செய்தியாளர் விளையாட்டுகளின் பழைய புள்ளி விவரங்களைத் திரட்டி வைத்திருக்க வேண்டும். நிகழ்காலச் சாதனைகளோடு முன் நாளைய சாதனைகளை ஒப்பிட்டு எழுதுதல் வேண்டும். செய்திகளை நடுநிலையோடு விரைந்து தரவேண்டும். ஏதாவது ஒரு பக்க ஆட்டக்காரர்களை ஆதரித்து எழுதக் கூடாது. செய்தியாளரின் விருப்பு வெறுப்புகள் வெளிப்படாமல் விளையாட்டுச் செய்திகளைத் தருவது நல்ல பணியாகும்.

பெரும்பாலும் தமிழ் நாளிதழ்களின் கடைசிப் பக்கம் அல்லது கடைசிப் பக்கத்தின் முன்பக்கம் விளையாட்டுச்செய்திகளுடன் வருகின்றன. உலக, தேசிய விளையாட்டுச் செய்திகள் வண்ணத்துடன் இடம்பெறுகின்றன. பின்வருவன விளையாட்டுச்செய்திகளுக்கான சில மாதிரிகள் ஆகும்.

**ரியோ பாரா ஒலிம்பிக். தமிழக வீரர் மாரியப்பன் தங்கம் வென்றார் (தினமணி,11.9.2016)**

"பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் நடைபெற்று வரும் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் (பாரா ஒலிம்பிக்), தமிழக வீரர் மாரியப்பன் (21) உயரம் தாண்டுதல் பிரிவில் உலக சாம்பியனை பின்னுக்குத்தள்ளி தங்கம் வென்று சாதனை படைத்தார்.

இதே பிரிவில் மற்றொரு இந்திய வீரரான வருண் சிங் வெண்கலப் பதக்கம் வென்றார்.

பாரா ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் உயரம் தாண்டுதல் பிரிவில் இந்தியர் ஒருவர் தங்கம் வெல்வது இதுவே முதல்முறையாகும்.

மாற்றுத்திறனாளி ஆடவருக்கான (டி-42 பிரிவு) உயரம் தாண்டுதல் போட்டியில் பங்கேற்ற மாரியப்பன், 1.89 மீ. உயரம் தாண்டி தங்கம் வென்றார். அமெரிக்காவைச் சேர்ந்த உலக சாம்பியனான சாம் க்ரு 1.86 மீ. உயரத்தை தாண்டி வெள்ளிப் பதக்கமும், இந்தியரான வருண் சிங்கும் அதே உயரம் தாண்டி வெண்கலமும் வென்றனர்.

இதே போட்டியில் பங்கேற்ற மற்றொரு இந்திய வீரர் சரத் குமார், 1.77 மீ. உயரம் தாண்டி 6-ஆவது இடத்தைப் பிடித்தார்.

முன்னதாக, இந்தப் போட்டியில் பங்கேற்ற 12 வீரர்களில் 6 பேர் தங்களது முதல் 8 முயற்சிகளிலேயே 1.74 மீ. உயரம் தாண்டியதால் கடும் போட்டி நிலவியது. எனினும், தனது 10-ஆவது முயற்சியில் வெற்றிகரமாக 1.77 மீ. உயரம் தாண்டிய மாரியப்பன், இறுதியில் 1.89 மீ. உயரம் தாண்டி வெற்றி பெற்றார்.

ரொக்கப் பரிசு: மத்திய விளையாட்டு அமைச்சகத்தின் ரொக்கப் பரிசு திட்டத்தின் கீழ், ரியோ பாரா ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற மாரியப்பனுக்கு ரூ.75 லட்சமும், வருண் சிங்குக்கு ரூ.30 லட்சமும் வழங்கப்பட உள்ளது.

பதக்கம் வென்ற மாரியப்பன், வருண் சிங் ஆகியோருக்கு நாடு முழுவதிலுமிருந்து பாராட்டுகளும்,பரிசுகளும் குவிந்தவண்ணமுள்ளன"

என்பது தினமணியின் செய்தியாகும். இதில் பல்வேறு புள்ளிவிபரங்கள் அளிக்கப்பெற்றிருப்பதைக் கவனிக்கவேண்டும்.

**தினகரன்**

**சென்னை பாரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்றார் மாரியப்பன் : சேலத்தில் உற்சாக கொண்டாட்டம் ரூ.2.75 கோடி பரிசு அறிவிப்பு**

குறிப்பு

2016-09-11; சென்னை: ரியோடிஜெனிரோவில் நடைபெறும் பாராலிம்பிக் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழக வீரர் மாரியப்பனுக்கு மத்திய அரசு ரூ.75 லட்சமும், தமிழக அரசு ரூ.2 கோடியும் பரிசு அறிவித்துள்ளன. அவர் சொந்த ஊரான சேலம் மாவட்டத்தில் எங்கும் உற்சாக கொண்டாட்டம் காணப்படுகிறது. தலைவர்களின் பாராட்டுகளும் குவிகிறது. பிரேசில் நாட்டின் ரியோடிஜெனிரோவில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று அதிகாலை நடைபெற்ற உயரம் தாண்டும் போட்டியில் சேலத்தை சேர்ந்த மாரியப்பன் தங்கவேலு என்ற கல்லூரி மாணவர் முதல் இடத்தை பிடித்து தங்கப்பதக்கம் வென்றார். அவர் 1.89 மீட்டர் உயரம் தாண்டி இந்த சாதனை சிகரத்தை எட்டினார். 2ஆம் இடத்தை அமெரிக்காவைச் சேர்ந்த சாம் குரோவ் என்பவர் பிடித்தார். 3ஆம் இடம் பிடித்ததன் மூலம் உத்தரபிரதேசத்தை சேர்ந்த வருண் பதிக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.

சாம் குரோ முதல் முயற்சியிலும், வருண் 3வது முயற்சியிலும் ஒரே அளவாக 1.86 மீட்டர் உயரம் தாண்டினர். ரியோ பாராலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்பவர்களுக்கு மத்திய விளையாட்டு அமைச்சகம் பரிசு வழங்குவதாக அறிவித்திருந்தது. இதன்படி தங்கம் வென்ற மாரியப்பனுக்கு ரூ.75 லட்சமும், வெண்கலம் வென்ற உத்தரபிரதேச வீரர் வருண் பதிக்கு ரூ.30 லட்சமும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பது தினகரன் செய்தியாகும்.

இவ்வாறு பல்வேறு வகை செய்திகளை இதழ்கள் வழங்கிவருகின்றன. இவை ஒவ்வொன்றும் துறை சார்ந்த நுணுக்கமான அறிவுடையோரால் எழுதப்பட்டவை என்பது இச்செய்திகளின் உள்ளடக்கத்தைப் படித்தால் புரிகிறது. ஒரு நிருபருக்கு இத்தனை துறை சார் அறிவினையும் பெருக்கிக்

கொள்ள வாய்ப்பில்லா நிலையில் அத்துறை சார்ந்த வல்லுநர்களின் கருத்துகளைச் செய்தியாக்கித் தர வேண்டியுள்ளது.

## 7.8.நிருபரின் தகுதிகள்

ஒரு நிருபர் என்பவர் மனிதப் பண்புகள் மிக்கவராக இருக்க வேண்டும். அதே நேரத்தில் செய்திக்கண் கொண்டு நடக்கும் நிகழ்வுகளைக் காண வேண்டும். அவர் அறத்தின்பால் நிற்பவராகக் கொடுமைகளைக் கண்டு அவற்றைக் களைய நடவடிக்கை மேற்கொள்வபராக இருக்கவேண்டும். அவர் மொழியறிவு, கணினிப் பயன்பாட்டு அறிவு, புகைப்படக் கருவி இயக்கும் அறிவு, மக்களுடன் கலந்து பழகும் சமுதாய சேர்க்கை போன்ற உடையராக இருக்கவேண்டும்.

## 7.8.1.செய்தியாளர் (நிருபர்)

நிருபம் என்ற வடமொழி சொல்லிற்கு கடிதம் என்பது பொருள். கடித வழித் தொடர்பினால் செய்திகளை அனுப்புவதால் நிருபர் என்று செய்தியாளர் அழைக்கப்பெறுகிறார்.

ஒரு இதழுக்கு வேண்டிய செய்திகளை இனங்கண்டு நாடித் தேடிச் சென்று சேகரித்து, தொகுத்துத் தருபவர்கள் செய்தியாளர்கள் ஆவர். செய்தியாளர்கள் இல்லை என்றால் செய்திகள் இல்லை. செய்திகள் இல்லாத நிலையில் செய்தித்தாளும் இல்லாமல் போய்விடும். எனவே செய்தியாளர்கள் இதழ்த்துறைக்கு முக்கியமானவர்கள் ஆகின்றனர்.

“பத்திரிகைகள், நாட்டின் கண்களும் காதுகளும் ஆகும் என்றால் நிருபர்கள், பத்திரிகைகளின் கால்களும் கைகளும் ஆவார்கள்” என்று எம். செல்லையா என்பவர் செய்தியாளர்களின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடுகிறார். செய்தியாளர் இதழியலின் இதயமாவார்” என்று சூசானே எஸ்.பிரவுன் என்று கருத்துரைக்கிறார்.

குறிப்பு

செய்தி நடப்பது ஓரிடத்தில். அச்செய்தி படிக்கப்படுவது ஓரிடத்தில். அச்செய்தி செய்தியாக ஆக்கப்படுவது ஓரிடத்தில். இத்தகைய செய்திப் பயணத்தில் செய்தியாரின் பங்கு முக்கியமானதாகும். நடந்ததை நடந்தபடி, கண்ணால் கண்டபடி, உள்ளதை உள்ளபடி செய்தியைப் படிப்பவருக்குச் செய்தியைச் செய்தியாளர் தந்தாக வேண்டும் என்ற நிலையில் செய்தியாளருக்குப் பல தகுதிகள் தேவைப்படுகின்றன.

செய்தி அறிதிறன், கல்வியறிவு, சரியாக செய்தியைத் தரல், விரைந்து செயல்படல், நடுநிலைமை, செய்தி திரட்டும் திறன், பொறுமை, முயற்சி, பல்வகைத் தொடர்புகள், கையூட்டு பெறாமை, செயல்திறன், ஏற்கும் ஆற்றல், தன்னம்பிக்கை, இனிய ஆளுமை, தெளிவு, மரபுகளை அறிந்திருத்தல், சட்டத்தெளிவு போன்ற பண்புகள் செய்தியாளருக்குத் தேவைப்படும் பண்புகள் ஆகும். இவற்றில் சில குறிக்கத்தக்க பண்புகள் கீழே விளக்கம் பெறுகின்றன.

### 7.8.2.செய்தி அறிதிறன்

செய்தியாளர் என்பவர் செய்திகளை நோக்கச் செல்ல வேண்டும். அவரை நோக்கி அனைத்துச் செய்திகளும் வந்து சேராது. எனவே எந்நேரமும் செய்திகளின் ஊற்றுக்கண்களை அறிந்துச் செய்திகளைப் பெற்று மீளவும் செய்திகளை அவ்வூற்றுக்கண்வழி பெறுவதற்கான தொடர்போடு செய்திகளைப் பெற வேண்டும். ஒரு செய்தியாளர் செய்திக்காகக் காவல் நிலையம், அரசு அலுவலகங்கள் போன்றவற்றை நாடிச் செல்ல வேண்டியிருக்காது. இருந்த இடத்தில் இருந்தால் எதுவும் நடக்காது. எனவே செய்தி அறிதிறன் என்பது செய்தியாளர்களுக்குத் தேவையான பண்பாகின்றது.

### 7.8.3.கல்வி அறிவு

செய்தியாளர் நல்ல கல்வியறிவு பெற்றவராக விளங்கவேண்டும். அவருக்கு மொழி அறிவு அவசியத் தேவையாகும். மொழி மரபுகளை அவர் கற்றிருக்க வேண்டும். மேலும் பிற மொழிகள் குறிப்பாக இந்தி, ஆங்கிலம் ஆகியனவும் தெரிந்திருக்க வேண்டும். தட்டச்சு, கணினி அச்சு, நவீன சாதனங்கள் இயக்குதல், ஒலிப்பதிவு செய்தல், ஒலிப்பதிவினை மீட்டெழுதல் போன்றவற்றிலும் அவருக்கு நல்ல அறிவு தேவை.

உளவியல், அறிவியல், அறவியல், இலக்கிய ரசனை போன்ற துறைகளிலும் அவரின் அறிவு வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும். நாளும் வளர்ச்சி பெறும் அளவில் தன்னை அவர் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

### 7.8.4.செய்திகளைச் சரியாகத் தருதல்

இன்றைய செய்தி நாளைய வரலாறாகிறது. எனவே செய்திகளைத் தவறின்றிச் செய்தியாளர் தரவேண்டும். எதனையும் நேரில் அறியாமல் எழுதவும் கூடாது. கருத்துப்பிழை, மொழிப்பிழை போன்ற இல்லாமல் செய்திகளை அவர் சரிவர தரவேண்டும்.

### 7.8.5.விரைந்து செயல்படல்

செய்திகள் காத்திருப்பதில்லை. செய்தியாளர்களும் காத்திருக்கக் கூடாது. மற்றவர்கள் செய்தியாக்கி வெளியிடுவதற்கு முன்பே அவர் தன் இதழுக்கு செய்தியை அறிவித்திருக்கவேண்டும். செய்திகளை முந்தித்தருவதில் இதழ்களுக்குள் போட்டி நிலவிக்கொண்டே இருக்கும். அன்றைய அன்றைய செய்திகள் அன்றைக்கே அனுப்பப்பட வேண்டும். இல்லையென்றால் அது பழஞ்செய்தியாகிவிடும்.

### 7.8.6.நடுநிலை

செய்திகளை நடுநிலையுடன் வெளியிடவேண்டும். இந்த நடுநிலைப்பண்பு முக்கியமானதாகும். துலாக்கோல்போல் நடுநிலையுடன் நின்று செய்திகளை அவர் வழங்கவேண்டும். எவரின் விருப்பதிற்கோ, வெறுப்புக்கோ, தூண்டலுக்கோ ஆளாகிவிடாமல் நடுநிலையுடன் செய்திகளை வழங்குவது சிறந்த இதழியல் அறமாகும்.

### 7.8.7.பொறுமை

பொறுமை கடலினும் பெரிது என்பது பழமொழி. ஒரு நிகழ்ச்சி நடந்து முடியும்வரை காத்திருந்து செய்தி சேகரிப்பது செய்தியாளரின் கடமையாகும். அவசரப்பட்டு ஒரு நிகழ்வின் பாதியில் பங்கேற்றுவிட்டு முழுச்செய்தியாக வெளியிடுவது பொய்மையைக் கலந்து விடும். நீதிமன்றச்செய்திகளை வெளியிடும்போது இப்பொறுமை அளவு கடந்து தேவைப்படும். செய்தி திரட்டலின்போதும் பொறுமை தேவைப்படும்.

### 7.8.8.தனித்தன்மை

செய்திகளில் தனித்தன்மை இருக்கவேண்டும். செய்திகளைத் திரட்டுவதிலும், செய்திகளை அளிப்பதிலும், செய்தி நடையிலும் தனித்தன்மை விளங்கவேண்டும். அதே நேரத்தில் அது தன் ஆர்வத்தை மிகுத்து காட்டிவிடும் நிலையில் இருந்துவிடக் கூடாது. இதழின் தனித்தன்மையையும் குலைத்துவிடக் கூடாது.

### 7.8.9.பல்வகைத் தொடர்புகள்

பல்வகைத் தொடர்புகளைப் பெற்றவராகச் செய்தியாளர் விளங்கவேண்டும். அரசியல் தொடர்புகள், அரசு அலுவலகத் தொடர்புகள், பிற பத்திரிக்கையாளர்களுடனான இனிய தொடர்புகள், வணிகத் தொடர்புகள், இலக்கியவாதிகளின்

தொடர்புகள், காவல் நிலையத் தொடர்புகள், பொதுமக்கள் தொடர்புகள், நீதி மன்றத் தொடர்புகள் போன்ற பல தொடர்புகளைப் பெற்றவராக விளங்கிட வேண்டும்.

குறிப்பு

### 7.8.10.நம்பிக்கையைப் பாதுகாத்தல்

செய்தியாளர் நம்பிக்கை உடையவராகச் சமுதாயத்தில் விளங்கவேண்டும். ஊரின் நன்மைக்காக, வட்டத்தின் நன்மைக்காக, மாவட்டத்தின் நன்மைக்காக, மக்களின் நன்மைக்காகப் பாடுபடுபவர் செய்தியாளர் என்ற நம்பிக்கை செய்தியாளர்மீது மக்களுக்கு ஏற்பட வேண்டும். அந்நம்பிக்கையை அவர் பாதுகாத்து நன்மைகளைத் தன் செய்திகளின் வழியாக நாளும் செய்யவேண்டும்.

மேலும் குற்றச் செய்திகளைத் தருபவர்கள், மறைமுகப் புகார் அளிப்பவர்கள் போன்றோர் பெயர்களை எவ்விடத்திலும் எத்தருணத்திலும் வெளியிடாது அவர் பாதுக்காக்க வேண்டும்.

### 7.8.11.நேர்மை

செய்தி சேகரித்தல் தொழில் அல்ல. கடமை. அக்கடமையை நேர்மையாகச் செய்தியாளர்கள் செய்யவேண்டும். செய்திகளை வழங்குவதற்காகக் கையூட்டாக எதனையும் எப்பொருளையும் அவர் பெறுதல் கூடாது. அதே நேரத்தில் செய்தியாளர்களைத் தங்களின் எண்ணங்களை வெளியிடும் வாயில்களாகச் சிலர் பயன்படுத்திக்கொள்ளக் கூடும். அதனையும் தவிர்த்துவிடுதல் வேண்டும்.

### 7.8.12.கலந்து பழகும் ஆற்றல்

செய்தியாளர்கள் ஒவ்வொரு நாளும் புதிய இடத்திற்குப், புதிய மனிதர்களைச் சந்திக்க வேண்டிய நிலை இருக்கும். எனவே அவர்கள் கலந்து பழகும் ஆற்றல் மிக்கவராக விளங்கவேண்டும்.

பழையவர்களை விட்டுவிடாமல் புதியவர்களை அணுகி நிற்கும் பாங்கு செய்தியாளருக்குத் தேவை.



குறிப்பு

### 7.8.13.தன்னம்பிக்கை

செய்தியாளர் தளராத தன்னம்பிக்கையோடு பணிசெய்ய வேண்டும். என்னால் முடியும், செயற்கரியன செய்வேன் என்ற தன்னம்பிக்கை இருந்தால் பலவற்றை எளிதாகச் செய்யமுடியும். மொத்தத்தில் அவர் இனிய ஆளுமை மிக்கவராக இருக்கவேண்டும்.

### 7.8..14. சட்டத் தெளிவு

சட்டங்கள் அறிந்தவராகவும், சட்டப்படி நடப்பவராகவும், சட்டத்தை மீறாதவராகவும் செய்தியாளர் விளங்கவேண்டும். அடிப்படைச் சட்டங்கள், சமுதாய நடத்தை விதிகள், மரபு கட்டுப்பாடுகள் போன்றவற்றை செய்தியாளர் அறிந்து வைத்திருக்கவேண்டும். இவற்றைப் பாதுகாப்பவராகவும் செய்தியாளர் விளங்கவேண்டும். செய்தியாளர் சட்டத்தைப் பின்பற்றும் முதல் நபராக விளங்கவேண்டும்.

இவ்வாறு பற்பல தகுதிகள் செய்தியாளருக்கு அமையின் செய்தி சிறக்கும். சமுதாயம் சிறப்புடன் நடைபோடும்.

# கூறு.8.

# ஆசிரியர்கள், தலைப்பு, முகப்பு, உடல்பகுதி, பக்க ஒருங்கிணைப்பு, தலையங்கம், சிறப்பு நிகழ்வுகள்

### 8.செய்தி ஆசிரியப்பணி

ஓர் இதழ் உருவாக நிருபர்கள், செய்திகள், விளம்பரங்கள் போன்ற பலவும் அவசியம் என்றாலும் இதழை ஒருங்கிணைத்து

வெளியிடுவதற்கு இதழ் ஆசிரியர் என்பவரின் பணி மிக அவசியமாகத் தேவைப்படுகின்றது. ஆசிரியரின் சிந்தனை, எண்ணம், செய்தி வழங்கும் உத்திகள் இவற்றின் வழியாக ஓர் இதழ் மக்களிடத்தில் பெருத்த வரவேற்பைப் பெற இயலும். இவ்வரவேற்பு அவ்விதழின் பரவலாக்கத்திற்குப் பெரிதும் உதவும். இவ்வகையில் இதழின் ஆசிரியர் பணி என்பது மிக முக்கியமான பணியாக விளங்குகின்றது.

இதழின் முதன்மை ஆசிரியர் தவிர துணை ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்கள் ஆகியோரின் பணிகளும் இதழின் தரத்திற்கும், பரவலாக்கத்திற்கும், உள்ளடக்கக் கட்டமைப்பிற்கும் உதவுகின்றன.

## 8.1.ஆசிரியர்

இதழின் ஆசிரியர் பணி என்பது தலைமைத் தகுதியும், மிகுந்த பொறுப்புகளும் வாய்ந்ததாகும். இதழ்களில் வெளிவரும் அத்தனை செய்திகளுக்கும் செய்தி ஆசிரியர் பொறுப்புடையவர் ஆகின்றார். இதழின் வளர்ச்சிக்கும், பரவலுக்கும் ஆசிரியரின் தனித்திறன் காரணமாகும். இதழின் நம்பகத்தன்மை, இதழின் பரவலாக்கம், இதழின் விற்பனை போன்ற பலவற்றுக்கும் ஆணிவேராக அமைபவர் இதழ் ஆசிரியரே ஆவார். ஒவ்வொரு இதழும் அதன் நிறைவில் அச்சடிப்பவர் பெயர் , வெளியிடுபவர் பெயர், ஆசிரியர் பெயர் ஆகியனவற்றைக் கொண்டு வெளிவர வேண்டும் என்பது பத்திரிக்கைகளுக்கான அடிப்படைச் சட்டங்களுள் ஒன்றாகும். இதன் காரணமாக ஒவ்வொரு இதழின் பொறுப்பும் ஆசிரியரைச் சார்ந்தது என்பதை உணர்ந்து கொள்ள இயலும்.

‘‘ஆசிரியர் ஒரு செய்தித்தாளின் அச்சாணியாவார். சட்டப்படியும் நடைமுறைப்படியும், செய்தித்தாளில் வெளியிட்டவற்றிற்கும் வெளியிடத் தவறியவற்றிற்கும் பொறுப்பேற்க வேண்டியவர். அவர்தான் செய்தித்தாளில் அவதூறாக ஏதாவது வெளிவந்தால் அதற்கு அவர் மீதுதான் வழக்குத் தொடர்வார்கள்.

அவதிப்புக்காக நீதிமன்றம், நாடாளுமன்றம், சட்டப்பேரவை ஆகியவற்றின் முன்னால் நிற்க வேண்டியவரும் அவரே, செய்திதாளில் எதனையாவது வெளியிட்டதற்காகவோ வெளியிடாததற்காகவோ, ஆத்திரப்பட்ட வாசகரோ, வாசர்களின் குழுவோ அவரது அறையைத்தான் தாக்கி வசைபாடுவார்கள்" என்பது ரெங்கசுவாமி பார்த்தசாரதி என்பவரின் கருத்தாகும். இக்கருத்தின்படி ஆசிரியரின் பணி என்பது ஓர் இதழின் மதிப்பிற்கும், மதிப்பிழப்பிற்கும் காரணமாக அமையத்தக்கது என்பது அறியவருகிறது.

## 8.2.இதழ் ஆசிரியர் பணியின் பண்புகள்

இதழ் ஆசிரியர் இதழின் ஒட்டு மொத்தப் பொறுப்புகளுக்கும் உரியவர் ஆவார். இவரின் முழுப்பார்வையிலேயே ஒரு இதழ் வெற்றி பெற இயலும். இவர் பன்முக ஆற்றலுடையவராக, பல்மொழி அறிந்தவராக, அதிகம் கற்றவராகப், பலரையும் அறிந்தவராக இருக்கவேண்டும். .இவருக்கான பண்புகள் பலவாகும். அவற்றில் சில பின்வருமாறு.

### 8.2.1.மக்கள் மனமறிந்த பணி

இதழின் ஆசிரியர் என்பவர் மக்களின் மனப்பாங்கினை அறிந்தவராக இருக்கவேண்டும். மேலும் செய்திகளை உடனுக்கு உடன் தரும் கலையில் அதாவது இற்றைப் படுத்தும் கலையில் வல்லவராகவும் இருக்கவேண்டும். மக்களுக்குத் தொடர்பில்லாத செய்திகளை வழங்குதன்மூலம் மக்களிடம் இருந்து விலகிவிட நேரிடும். எனவே எப்போதும் மக்கள் தொடர்புடன் இதழை நடத்திச் செல்லவேண்டும்.

### 8.2.2.கூட்டு முயற்சிப் பணி

இதழ் ஆசிரியர் பணி என்பது கூட்டு முயற்சிப் பணியாகும். நாள்தோறும் ஒரே மாதிரியான பணியை அலுப்பில்லாமல், கவனத்துடன் செய்ய வேண்டிய பணியுமாகும். விளையாட்டு, ஆன்மீகம், வேலை வாய்ப்பு, அரசியல் போன்ற பல்துறை சார்ந்த செய்திகளைச் செய்தி ஆசிரியர்கள் தர, அவற்றை இணையாசிரியர்கள் ஒழுங்குபடுத்தித்தர, வெளியீட்டுப்பகுதி சார்ந்த பணியாளர்கள் அதனை வடிவமாக்கித் தர, அச்சடிப்பவர்கள் அச்சடித்துத்தர, இணைப்பிதழ்கள் சேர்க்கப்பெற்று மக்களிடம் கொண்டு சேர்ப்பவர்கள் தகுந்த நேரத்தில் கொண்டு சேர்க்க இப்படி ஒன்றன் பின் ஒன்றாகப் பல வேலைகளின் கூட்டு முயற்சி சார்ந்த பணியாக இதழாக்கப் பணி உள்ளது. இதன் தலைமையாளராக இதழ் ஆசிரியர் விளங்குகிறார். தாள் பற்றாக்குறை, எதிர்பாராமல் ஏற்படும் தொழில்நுட்ப கோளாறுகள், ஆள் பற்றாக்குறை போன்ற பல சவால்களைச் சந்திக்கக் கூடியவராகவும் இதழ் ஆசிரியர் விளங்க வேண்டும்.

### 8.2.3.மனித நேயப் பணி

இதழின் ஆசிரியர் மனிதநேயம் மிக்கவராகவும், தைரியம் மிக்கவராகவும், பொறுமை மிக்கவராகவும், சமுதாயப் பொறுப்புணர்ச்சி மிக்கவராகவும் விளங்கவேண்டும். எல்லாச் செய்திகளையும் எழுதும் ஒட்டு மொத்த பொறுப்பை ஆசிரியர் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அதற்காக எழுதாமல் இருந்துவிடவும் இயலாது. தனித்தன்மை மிக்க ஆக்கங்களை அவர் தன் தனி முத்திரையுடன் இதழ்களில் வழங்கவேண்டும். பாராட்டுச் செய்திகளை வழங்கவில்லை என்றாலும் அவதூறு செய்திகளை அவர் பரப்பிவிடக் கூடாது.

இவ்வகையில் மிக முக்கியமான பணியாக இதழ் ஆசிரியர் பணி விளங்குகின்றது.

## 8.3. துணையாசிரியர்கள்



குறிப்பு

இதழ் ஆசிரியரின் ஆசிரிய பணிகளுக்குத் துணையாக அமைபவர்கள் துணையாசிரியர்கள் ஆவர். ஒரு இதழின் தேவைக்கு ஏற்ப துணையாசிரியர்கள் பணி அதிகரித்துக்கொள்ளப்படும். தேசிய, மாநில, நகரச் செய்திகளின் துணையாசிரியர், கலைப்பிரிவுத் துணையாசிரியர், விளையாட்டுப் பிரிவு துணையாசிரியர், போன்ற பல நிலைகளில் துணையாசிரியர்கள் அமைந்திருப்பர்.

செய்தி ஆசிரியர்கள் தரும் செய்தியைச் செப்பம் செய்து, தேவையானவற்றைச் சேர்த்து, தேவையில்லாதவற்றை நீக்கி செய்தியை உருவாக்குபவர்களாக துணையாசிரியர்கள் விளங்குகின்றனர்.

துணையாசிரியரை, ''அவர் ஒரு படைப்புக் கலைஞர்'' என்று **எம்.வி.காமத்** குறிப்பிடுகிறார். ''பத்திரிகை உலகின் மேல்மட்ட அறிவாளிகள்தான் துணையாசிரியர்கள். மக்களிடம் பெயர் பெற்றிருக்கும் செய்தித்தாளுக்குக் கவர்ச்சியையும் சுவையையும் அந்த அறிவார்ந்த குழுவினர் வழங்குகின்றனர். செய்தித்தாளின் நடையின் மேம்பாட்டையும் தரத்தையும் அவர்களே உருவாக்குகின்றனர்' என்பது ரெங்கசுவாமி பார்த்தசாரதி தரும் கருத்தாகும்.

துணையாசிரியருக்குப் பல தகுதிகள் தேவைப்படுகின்றன. அறிவு நுட்பத் திறன், செய்தியின் முழுவடிவம் பற்றிய கண்ணோட்டம், பல மொழிகளை எழுதப் படிக்க பேச தெரிந்திருத்தல், நாட்டின் நிலவரம் அறிந்திருத்தல், சட்ட நுணுக்கங்களை அறிந்திருத்தல், செய்திகளைக் கூட்டவும் குறைக்கவும் விரிக்கவும் சுருக்கவும் ஆன மொழித்திறன் பெற்றிருத்தல், இதழின் கொள்கைகளை நன்கு அறிந்திருத்தல், மக்கள் மனநிலைகளை அறிந்து செய்திகளை வெளியிடும் மனப்போக்கினைப் பெற்றிருத்தல், வெளியிடப்பெறும் செய்திகள்

ஏற்படுத்தும் தாக்கத்தினைப் பற்றியும் அறிந்திருத்தல், நீண்ட நேரம் உழைப்பதற்கான மன இசைவு, உடல்நலம் பெற்றிருத்தல் போன்ற பண்புகள் துணை ஆசிரியருக்கு இருக்க வேண்டிய திறன்கள் ஆகும்.



## 8.4.செய்தி ஆசிரியர்

செய்தித்தாளின் அடித்தளமாகச் செய்தி ஆசிரியர் என்பவர் அமைகிறார். இதழின் ஆசிரியர் ஒருவராகத்தான் இருக்க இயலும். துணையாசிரியர்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் இருக்க முடியும். செய்தி ஆசிரியர்களும் துணையாசிரியர்களுக்கு ஈடான நிலையில் அமைவது நலம். ஊர்தோறும், மாநிலம் தோறும் செய்தியாளர்களால் அளிக்கப்படும் செய்தியைத் தரம் பிரித்து அதற்கான முக்கியத்துவத்திற்கு ஏற்ப இடமளிப்பது இவரின் பணியாகின்றது.

உடலின் மூளை போன்று இதழின் ஆசிரியர் அமைகிறார். மனித உறுப்புகளில் இன்றியமையாததாக விளங்கும் கண்கள் போன்று துணையாசிரியர்கள் விளங்குகின்றனர். வாய், மற்றும் காதுகள் போன்று செய்தி ஆசிரியர்கள் அமைகின்றனர். வாய்வழி காதுவழி செய்தியாளர்களால் சேர்க்கப்பெற்ற செய்திகள் செய்தி ஆசிரியரால் வடிவமைக்கப்பெற்று, அச்செய்திகள் கண்கள் வழி படிக்கப்படும் செய்திகளாக இதழின் துணையாசிரியர்களால் மாற்றப்படுகிறது. அச்செய்தியின் மதிப்பினை, உள்ளீட்டை அறிவுத்திறன் கொண்டு ஆய்ந்து வெளிப்படுத்துவது ஆசிரியர் பணியாகின்றது.

ஒரு தேசிய செய்தித்தாளுக்குச் சுறுசுறுப்பான அறிவாற்றால்

மிக்க, முயற்சியுடைய செய்தியாசியர் முக்கிய ஒளிச்சுடராக மொத்தச் செய்தியின் பரப்பிற்கும் கண்ணோட்டத்திற்கும் சக்தியளிப்பவராக இருப்பார் என்று **பி.என். அகூஜா** குறிப்பிடுகிறார்.

செய்தியாளர் செய்தி திரட்டுபவராக மட்டும் இல்லாமல் செய்திகளை முதன் முதலாகத் தன் இதழில் வெளிவரச் செய்யும் விரைவும் வல்லமையும் பெற்றவராக இருக்க வேண்டும். சில நேரங்களில் செய்தி வருகைக்காகக் காத்திருந்து அதற்காக முதல் பக்கத்தில் இடம் ஒதுக்கி செய்தி வந்ததும் விரைவாக அதனை எழுதி, அச்சுக்குக் கொண்டு சென்று, வெளியிட வேண்டிய நெருக்கடியும் ஏற்படலாம். இதனை சமாளித்து செய்திகளை வெளியிடவேண்டிய பொறுப்பு மிக்கவராக செய்தி ஆசிரியர் விளங்கிறார். இவருக்கு வரலாற்று அறிவு, நினைவுத்திறன், செய்திகளை கோர்க்கும் திறன், வடிவமைக்கும் திறன் போன்ற பல திறன்கள் தேவைப்படுகின்றன.

## 8.5. செய்தியின் கட்டமைப்பு

செய்திக்கென தனித்த கட்டமைப்பு உண்டு. செய்தியின் உருவ அமைப்பு, செய்தி எழுதக் கிடைக்கும் நேரம், செய்தி வெளியிடக் கிடைக்கும் இடம், எழுத்தாளரின் திறமை ஆகியன கருதியே ஒரு செய்தி முக்கியத்துவம் பெறுகின்றது. செய்தி உயிர் என்றால் அதன் உடலாக அமைவது அதன் வடிவம் ஆகும். உயிரும் உடலும் போல செய்தியும் செய்தி வடிவமைப்பும் அமைகின்றன. இவை இரண்டும் இணைந்து நின்றாலே செய்தி சிறப்பாக வெளிவரும்.

செய்தியின் வடிவமைப்பு என்பது தலைப்பு, முகப்பு, உடல்பகுதி, நிறைவுப்பகுதி என்பதாக அமைந்திருக்கும். எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்ற நிலையில் செய்தி அமைக்கப்பட வேண்டும்.

### 8.5.1.தலைப்பு

செய்தியின் வடிவம் உடல் என்று கொள்ளப்பெற்றால் அதன் தலைப்பகுதியாக அமைவது தலைப்பு ஆகும். இது படிப்பவரைப் படிக்கத்தூண்டும் நிலையில் அமைய வேண்டும். இத்தலைப்புகளில்

குறிப்பு

முக்கியமானவை விளம்பரப்படுத்தப்படும் அளவிற்குப் பெருமை பெறுகின்றன.

செய்தியின் தலைப்பு என்பது செய்தியின் கருப்பொருளைச் சுருக்கிச் சொல்வதாக இருக்கவேண்டும். ‘‘தலைப்புச் செய்தி கரடு முரடாக முழுமையற்றதாக அதிர்ச்சியூட்டுவதாகப் பெரும்பாலும் இருக்கும். அதனுடைய நோக்கம் வாசகரை நிறுத்தி வைத்துப் பார்க்க வைப்பதாகும். தலைப்பு செய்தியாளரின் கவனத்தை ஈர்த்து செய்தியைப் படிக்கக் கட்டாயப்படுத்துகின்றது” என்பது **எம்.வி.காமத்** கூறும் தலைப்பிற்கான பண்பு ஆகும்.

நல்ல தலைப்பு என்பது எளிமையானதாக, படித்தவுடன் புரிந்து கொள்ளத்தக்கதாக, ஆற்றல் மிக்கதாக, சரியானதாக, கவர்ச்சியானதாக கண்ணில் பட்டவுடன் சுண்டி இழுப்பதாக இருக்கும். நல்ல தலைப்பு என்பது இதழ் செல்வாக்கினைப் பெருக்குவதாக, செய்தியின் திறவுகோலாகச், செய்தியை விளம்பரப்படுத்துவதாக அமையவேண்டும்.

தலைப்புகள் அதனதன் தன்மைகளைப் பொறுத்து, பல வகைப்படுகின்றன. நெற்றித் தலைப்பு, இடைநிலைத் தலைப்பு, முழுப்பக்க இடைநிலைத் அவை தலைப்பு, கூம்புத் தலைப்பு, கவிழ் கூம்புத் தலைப்பு, சிறுதொடர் மேல்தலைப்பு, நீண்ட தொடர் மேல்தலைப்பு, கிளர்ச்சியூட்டும் தலைப்பு பரபரப்பூட்டும் தலைப்பு, தீவிரத் தலைப்பு, மிதவாதத் தலைப்பு, உந்து தலைப்பு, மேற்கோள் குறியுடைத் தலைப்பு, வினாத் தலைப்பு, நேர் வரிசை அடுக்குத் தலைப்பு, மாறுவரிசை அடுக்குத் தலைப்பு, உடுக்கைத் தலைப்பு போன்றனவாகும்.

குறிப்பு




என்பது தினமலர் நாளிதழில் வெளிவந்த தலைப்புச் செய்தியாகும். இதில் வென்றது நீதி என்பது தலைப்பாகும்.




என்பது தினமணியில் வெளிவந்த தலைப்புச் செய்தியாகும். இவற்றைக் காணுகையில் இதழின் தலைப்பு எளிமையாக ஈர்க்கும் நிலையில் இருக்கவேண்டும் என்பது தெரியவருகிறது.

## 8.5.2.முகப்பு,(முன்னுரைப் பகுதி)

செய்தியின் முன்னுரைப் பகுதியே முகப்பு எனப்படுகிறது. இது செய்தியின் தலைப்புக்கு அடுத்து அமைய வேண்டும். இதுவே செய்தியின் தொடக்கமும் ஆகும். முன்னுரை என்பதில் என்ன, எங்கே, எப்போது, ஏன், எப்படி, எவர் என்ற கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் நிலையில் அமைந்திருக்கும். அளவு கடந்தும் அளவு சுருங்கியும் முகப்பு அமையக் கூடாது. சரியான அளவில் அமையவேண்டும்.

இம்முகப்பு பகுதி பல வகைகளில் அமைகிறது.

1. நேரடிக் கூற்றுமுறை முன்னுரை
2. விளித்தல் கூற்றுமுறை முன்னுரை

3. இடித்துரை முன்னுரை
4. வரிசை முன்னுரை
5. வருணனை முன்னுரை
6. சார்பு முன்னுரை
7. இலக்கியச் சாயல் முன்னுரை
8. நையாண்டி முன்னுரை
9. அயல் கூற்று முன்னுரை

குறிப்பு

என்பன முன்னுரை வகைகளாக உள்ளன.

### 8.5.2.1.முன்னுரை எழுதும் முறை

## தொடர்ந்து உயரும் வெங்காய விலை: நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

**சென்னை,நவ.29:** வெங்காய விலை உயர்வுக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கர்நாடகம், மகாராஷ்டிரத்தில் பெய்த கன மழை காரணமாக வெங்காய விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. விளைச்சலின் போதே அழுகியதால் வெங்காயத்தின் வரத்து குறைந்தது. கோயம்பேடு மொத்த மார்க்கெட்டில் பல்லாரி வெங்காயம் (பெரியது) கிலோ ரூ.60–க்கும், சாம்பார் வெங்காயம் கிலோ ரூ.150 –க்கு விற்கப்படுகிறது.

இது மொத்த விலை எனக் கூறப்படும் நிலையில், காய்கறி கடைகள், மளிகை கடைகளில் சில்லறை விற்பனையில் அதைவிட கூடுதலாக விற்பது வழக்கம். பல்லாரி வெங்காயம் (பெரியது) கிலோ ரூ.80 –க்கும், சாம்பார் வெங்காயம் கிலோ ரூ.200– க்கும் சில்லறை விலையில் விற்கப்படுகிறது.

பெரும்பாலான காய்கறி கடைகளில் சாம்பார் வெங்காயம் விற்பதே இல்லை. விலையேற்றத்தால் பெரும்பாலானோர் பல்லாரி வெங்காயத்தைதான் அதிகம் பயன்படுத்தும் நிலை உள்ளது. இதுகுறித்து கோயம்பேடு வியாபாரிகள் சங்கத்தினர் கூறியது: பெரிய வெங்காயம் கிலோ ரூ.60 –க்கு விற்கப்படுகிறது. அதில் சிறிய அளவில் உள்ள பல்லாரி வெங்காயம் ரூ.50 –க்கு விற்கப்படுகிறது. பெரும்பாலானோர் சிறிய அளவில் உள்ள பல்லாரி வெங்காயத்தை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

சாம்பார் வெங்காயம் ரூ.150–க்கு ஒரு ரகமும், ரூ.130–க்கு ஒரு ரகமும் விற்கப்படுகிறது. வெங்காயம் 30 லாரிகளில்தான் வந்துள்ளது. வரத்து குறைவாக இருப்பதால்தான் விலை குறையவில்லை. ஜனவரி 15–ஆம் தேதி வரை வெங்காயம் விலை குறைய வாய்ப்பு இல்லை. வெங்காயம் வரத்து குறைவாக இருப்பதால் வியாபாரம் மந்தமாக உள்ளது என்றனர்.

இதுகுறித்து கோயம்பேடு சந்தையில் காய்கறி வாங்க வந்திருந்த சாந்தி கூறியது: வெங்காயத்தின் விலை அதிகமாக இருப்பதால், சமையலுக்கு குறைவாகவே பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சின்ன வெங்காயத்தின் விலை அதிகமாக இருப்பதால், பெரிய வெங்காயத்தை தான் சமையலுக்குப் பயன்படுத்துகிறோம். முன்பு சின்ன வெங்காயத்தை உணவின்போது பச்சையாக பயன்படுத்துவோம்.

இப்போது தவிர்த்து விட்டோம். சமையலுக்கு பெரிய வெங்காயத்தையே உபயோகப்படுத்துகிறோம். விலை குறைந்த பிறகு தான் வெங்காயத்தை வழக்கம் போல அதிகமாகப் பயன்படுத்த முடியும். இதற்கு விரைவில் அரசு தீர்வு காண வேண்டும் என்றனர்.

**அதிகாரிகள் விளக்கம்:** பண்ணைப் பசுமை கடைகள் மூலம் வெங்காயம் குறைந்த விலையில் விற்கப்படுகிறது. மேலும், கூடுதல் விலைக்கு விற்கும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்க சிறப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. வெங்காயத்தை பதுக்கினால் நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றனர் உணவுத் துறை அதிகாரிகள்.

என்பது ஒரு செய்தியாகும். இதன் முன்னுரைப் பகுதி

“சென்னை,நவ. 29: வெங்காய விலை உயர்வுக்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.” என்பதாகும். செய்தி வெளிவந்த இடம் சென்னை, செய்தி வெளிவந்த நாள் நவம்பர் 29 என்பது நவ. 29 எனக்குறிக்கப்பெற்றுள்ளது. இதன்பின் ஓரிரு வரிகளில் செய்தி

*Self-Instructional Material*

முன்னுரை அமையவேண்டும். இப்பகுதியைத் தொடர்ந்து செய்தியின் உடல் பகுதி அமைகிறது.

### 8.5.3.உடல்பகுதி

செய்தியின் உடல்பகுதி என்பது தலைப்பினை விரிப்பதாகவும், தேவையான தகவல்களை அளிப்பதாகவும் இருக்கவேண்டும். மேற்குறித்த செய்தியில் பொதுமக்கள் கருத்து, அதிகாரிகள் கருத்து, வெங்காய விலை நிலவரம் போன்றன உடல்பகுதியாக அமைந்து ஒரு செய்தியை வடிவமைத்துத் தந்துள்ளன.

### 8.5.4.முடிவுப்பகுதி

தொடங்கிய செய்தியை உடல்பகுதி வளர்த்தெடுக்கிறது. வளர்த்தெடுக்கப்பட்ட செய்தியானது முடிவு நிலையில் சரியாக முடித்து வைக்கப்பட வேண்டும். முடிவுகள் பெரும்பாலும் தீர்வுகளாக இல்லாமல் தீர்வுகளை நோக்கியதாக அமைய வேண்டும். மேற்காட்டிய செய்தியில் வெங்காயம் விலை அதிகரிப்புச் சிக்கலாக இருக்க அதனைத் தீர்க்க அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் போன்றன தீர்வினை நோக்கியதாக அமைக்கப்பெற்றுள்ளது.

### 8.6.பக்க ஒருங்கிணைப்பு,

ஒரு இதழின் தனித்துவத்தை நிர்ணயிப்பது பக்க ஒருங்கிணைப்பு ஆகும். இதழியலை ஒரு கலையாக ஆக்குவது பக்க ஒருங்கிணைப்பு ஆகும். இதழுக்கான அழகு, ஈர்ப்பு, பரவலாக்கம் ஆகியன பக்க வடிவமைப்பிலேயே உள்ளது. செய்தித்தாளை பார்க்கவைப்பதும் பின்பு படிக்கவைப்பதும் பக்க வடிவமைப்புதான்.

செய்தித்தாளின் நிர்வாக ஆசிரியர் செய்தித்தாளின் வடிவமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை முடிவு

செய்கிறார். அவரின் கருத்துப்படியே பக்க வடிவமைப்பு அமைக்கப்படுகிறது. இவர் முதலில் மாதிரிப் பக்கங்களை உருவாக்கித்தர அது வடிவமைப்புப் பிரிவிற்கு சென்று செயலாக்கம் பெறுகிறது.

ஒரு பக்கத்தை வடிவமைத்தல், பிறகு பல பக்கங்களை வடிவமைத்து இணைத்தல் என்ற நிலையில் இதழ் உருவாக்கம் பெறுகிறது.

வடிவமைப்பு என்பது, எந்த வகை, அளவு எழுத்தில் அச்சிட வேண்டும் என்பதில் தொடங்கி, தலைப்பின் வகைகள், படங்கள் இடம் பெறும் இடம் செய்திகளின் இடம், அளவு, துணுக்குகள், கருத்துக்கள், விளம்பரங்கள் போன்றவை எப்படி எங்கு இடம் பெற வேண்டும் என்பதில் வளர்கிறது. பத்தி பிரித்தல், பக்கம் உருவாக்குதல், பக்கங்கள் இணைக்கப்படுதல் என்பதில் நிறைவடைகிறது.

பக்க வடிவமைப்பிலும் பல வகைகள் உண்டு.

1. சமநிலை பக்க வடிவமைப்பு
2. மாறுபட்ட நிலை பக்க வடிவமைப்பு
3. வட்ட நிலை பக்கவடிவமைப்பு
4. இயல்பு பக்க வடிவமைப்பு
5. சிறப்பு பக்க வடிவமைப்பு

போன்ற பல வகைகள் பக்க வடிவமைப்பில் உள்ளன.

பக்க வடிவமைப்பில் புகைப்படங்கள், கேலிச் சித்திரங்கள், துணுக்குகள், இட நிரப்பிகள் போன்றனவும் அமைக்கப்பெறுவதுண்டு. இவை வண்ணங்கள், வடிவ அழகுகள் கொண்டு அழகு படுத்தப்படும்.

## 8.7.தலையங்கம்

இதழின் குறிப்பிட்ட ஒரு இடத்தில் நிர்வாக ஆசிரியர் நாட்டு நடப்புகளை முன்வைத்து விமர்சன நோக்குடன் இதழியலாளர்

பார்வையில் எழுதப்படுவது தலையங்கம் ஆகும். இத்தலையங்கத்துடன் இதழின் பெயர், அதன் கொள்கை வாசகம், அதன் வெளியீட்டு நாள் போன்றனவும் தரப்படும். தினமணி நாளிதழில் தலையங்கம் தொடர்ந்து வெளியிடப்பெறுகிறது. அத்தலையங்கத்தின் கீழே ஒரு திருக்குறளும் தரப்பெறுகிறது. பெரும்பாலும் அத்திருக்குறள் அன்றைய தலையங்கத்துடன் பொருந்துவதாக இருக்கும். பின்வரும் பகுதி தினமலர் நாளிதழில் வெளிவந்த ஒரு தலையங்கமாகும்.



தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

புதன்கிழமை 13–11–2019
விகாரி ஐப்பசி 27 ஹிஜ்ரி 1441 ரபீவுல் அவ்வல் 15

வரவேற்பும் எச்சரிக்கையும்!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான உறவில் புதி
தொரு அத்தியாயத்தை கர்தார்பூர் வழித்தடம் ஏற்படுத்திய
சீக்கிய மதத்தை நிறுவிய குருநானக் தேவ், தனது வாழ்நாளி
கடைசி 18 ஆண்டுகளை கர்தார்பூரிலுள்ள குருத்வாராவில்தா
கழித்தார். அதனால் கர்தார்பூரிலுள்ள 'குருத்வாரா தர்பார் சாஹிப
அந்த மதத்தினரின் மிக முக்கியமான புனிதத் தலம்.

இந்திய – பாகிஸ்தான் பிரிவினையின்போது, இந்தியப் பகு
யிலுள்ள தேரா பாபாநானக் குருத்வாராவிலிருந்து நான்
கி.மீ. தொலைவிலுள்ள கர்தார்பூர் குருத்வாரா தர்பார் சாஹிப் பாகி
தானுக்குச் சென்றுவிட்டது. அன்று முதல் பாகிஸ்தானிலுள்
சீக்கியர்கள் தேரா பாபா நானக் குருத்வாராவுக்கும், இந்தியாவிலுள்
சீக்கியர்கள் குருத்வாரா தர்பார் சாஹிப்புக்கும் புனிதப் பயண
மேற்கொள்வது கானல்நீர் கனவாகத் தொடர்ந்து வந்தது.

இத்தலையங்கம் இந்திய பாகிஸ்தான் உறவில் நல்லிணக்கத்தை மதத்தின் பெயரால் ஏற்படுத்தப் பெற்றிருப்பதைக் காட்டுகிறது. இத்தலையங்கத்தின் கீழே உட்பகை அதிகாரத்தில் இருந்து ஒரு

**குறிப்பு**

குறள் தரப்பெற்றுள்ளது. இது மேல்தலையங்கத்திற்குப் பொருந்துவதாக உள்ளது.

> **எள்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்**
> **உட்பகை உள்ளதாம் கேடு.**
> *எள்ளின் பிளவைப் போன்ற சிறிய அளவு உடையதே ஆனாலும், ஒரு குடியை அழிக்கவல்ல கேடு உட்பகையில் உள்ளதாகும்.*
> **திருக்குறள் (எண்: 889) *அதிகாரம்: உட்பகை***

பல தமிழ் நாளிதழ்கள் தலையங்கத்தைத் தவிர்க்கின்றன. பதினைந்து விழுக்காடு மக்களே தலையங்கத்தை வாசிக்கிறார்கள் என்ற நிலையில் தலையங்கம் பல இதழ்களால் தவிர்க்கப்படுகிறது. தலையங்கம் இன்றி இதழ் இலக்கினைத் தொட இயலாது.

## 8.8.சிறப்பு நிகழ்வுகள்

ஊர்ப்புறங்கள், வட்டங்கள், மாவட்டங்கள் ஆகியவற்றில் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகள் வெளியிடுவதற்கென இதழ்களில் அந்தந்த பதிப்புகளில் இடமளிக்கப்பெறுகின்றன. பிரபலங்களின் வருகை, பிரபல விளையாட்டு விழாக்கள், திருவிழாக்கள், இடைத்தேர்தல், திறப்பு விழாக்கள் போன்றனவற்றிற்காக தனித்த இடம் ஒதுக்கப்பெற்று அவை சிறப்பு நிகழ்வுகளாகக் கருதப்பெற்று செய்திகள் வெளியிடப்பெறுகிறது. இதற்காக தனித்த நிருபர்கள் இதழ்களால் அனுப்பப்பெற்று செய்தி சேகரிக்கப்பெற்று இணைப்பு இதழ்களாகச், சிறப்பிதழ்களாக அவை வெளிவருவதுண்டு. இவை செய்தித்தாள்களின் அண்மைத்தன்மையை உறுதி செய்கின்றன.

## சுய மதிப்பீட்டு வினாக்கள்

### குறு வினாக்கள்

1. செய்தியாக்கம் என்றால் என்ன?
2. தலையங்கம் என்றால் என்ன?
3. இதழ்களின் உள்ளடக்கம் பற்றியும் எழுதுக.

குறிப்பு

**நெடுவினாக்கள்**

1. இதழ்களின் வகைகள் பற்றி விரித்து எழுதுக.
2. செய்தி சேகரிப்பு பற்றி எழுதுக.
3. நிருபர்களுக்கான தகுதிகள் யாவை?
4. தலையங்கம் என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் பற்றி எழுது

**கூடுதலாக வாசிக்க**

தகவல் தொடர்புகளும் நெறிமுறைகளும், ச. ஈஸ்வரன், சாரதா பதிப்பகம், சென்னை, 2012

தகவல் தொடர்பியல், வெ. கிருட்டிண சாமி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-1

# பிரிவு. 3

## பத்திரக்கை சட்டம்

குறிப்பு

## கூறு 9

## விளம்பரம், சொற்பொருள் வரையறை -இலக்கணம்- வகைகள்-

## பத்திரிக்கை சட்டங்கள், பதிப்புரிமை

**நோக்கம்**

இப்பாடத்தின் வழியாக இதழியல் சட்டங்களை அறிந்து அதற்கேற்ப இதழியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். உலக மற்றும் இந்திய செய்தி நிறுவனங்கள் பற்றி அறிந்து கொள்ளலாம். ஊடக வகைகள், ஊடகத்தின் சாதன வகைகள் ஆகியனவற்றை அறிந்து கொள்ளலாம்.

**9.விளம்பரங்கள்**

விளம்புதல் என்றால் எழுதப்பெற்ற ஒன்றின் மீது மீள, மீள எழுதுதல் என்று பொருள். வணிக நிலையில் ஒரு பொருளைப் பற்றி மீள மீள மக்களுக்கு நினைவுபடுத்தி அவர்களை அந்தப் பொருளை வாங்கச் செய்தல் என்பதே விளம்பரம் ஆகின்றது.

“ஒரு குறிப்பிட்ட கருத்தை அல்லது செய்தியை சம்பந்தப்பட்ட நபர்களின் நினைவில் நிறுத்துவதற்குச் செய்யப்படும் ஓர் உத்தியே விளம்பரம் ஆகும்” என்கிறார் கி.இராசா.

**9.1.விளம்பரம் - சொற்பொருள் விளக்கம்**

விளம்பரம் என்பது விள், அம்பரம் என்று பகுக்கப்பெறலாம். விள் என்றால் விண்டுரைத்தல் என்று பொருள். அம்பரம் என்பதற்கு

குறிப்பு

வான்வெளி என்றுபொருள். இவ்விரு சொற்களின் பொருள்களை இணைத்துக் காண்கையில், ஒரு பொருளைப் பற்றிய செய்திகளை வானளவுவரை எடுத்துரைத்தல் விளம்பரம் ஆகும்.

வணிகத்தினைப் பெருக்குவதற்கு உதவும் கலை விளம்பரம் ஆகும். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் விளம்பரங்கள் உதவுகின்றன. ‟ஒரு குறிப்பிட்ட அரசோ, உற்பத்தியாளரோ, விற்பனையாளரோ தமது கொள்கைகளைப் பரப்புவதற்கோ, தம் பொருட்களை விற்பதற்கோ, தம் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கோ தாமே பணம் செலவிட்டு எழுத்து மூலமாகவோ, வாய்மொழி வழியாகவோ, வரைபடங்கள் மூலமாகவோ, பயன்படுத்தும் சாதனம் தான் விளம்பரம்‟ என்று விளக்கம் தருகிறார் **எஸ். கலைவாணி**

## 9.1.2.விளம்பரத்தின் பணிகள்

தற்காலத்தில் விளம்பரம் என்பது பல் ஊடக வழியாக மக்களைச் சென்றடைவதாக உள்ளது. சுவர் விளம்பரங்கள், பெரிய பெரிய பலகை விளம்பரங்கள், தொலைக்காட்சி – வானொலி விளம்பரங்கள், செய்தித்தாள் விளம்பரங்கள் போன்ற பல நிலைகளில் விளம்பரங்கள் மக்களைச் சென்று சேர்கின்றன. இவ்விளம்பரங்கள் வணிகத்தைப் பெருக்குவது மட்டும் இல்லாமல் இன்னும் பல பணிகளைச் செய்கின்றன. அவை பின்வருமாறு.

1. சந்தைக்கு வந்துள்ள புதிய பொருள்களை மக்களிடம் அறிமுகம் செய்தல்
2. புதிய வசதிகளை மக்கள் பயன்பாட்டிற்கு அறிவித்தல்
3. ஒருவரைப் பற்றி அல்லது ஒரு பொருளைப் பற்றிய பிரபலத்தைத் தொடர்ந்து தந்து கொண்டிருத்தல்

4. ஊடகங்களின் வளர்ச்சிக்கு, பொருளாதார நிலையில் உதவுதல்

5. வேலை வாய்ப்புகளுக்கு உரிய நபர்களைத் தேர்ந்தெடுத்தல்

6. ஒரு நூலை உரிய வாசகரிடம் கொண்டு சேர்த்தல்

7. விழாக்காலங்களில் பொருள்களின் விலைக் குறைவை மக்களிடம் தெரிவித்தல்

8. மக்களின் வாங்கும் சக்தியை அறிவித்தல்

9. எளிய சொற்களால் மொழியை வளர்த்தல்

10. ஒரு பொருளின் வடிவத்தை, அல்லது விளம்பரச் சின்னத்தை மக்களின் மனதில் பதியவைத்தல், இதன் வழி வியாபாரப் பெருக்கத்தை அதிகரித்தல்

போன்ற பல பணிகளை விளம்பரங்கள் செய்கின்றன.

### 9.1.3.விளம்பரத்தின் வகைகள்

விளம்பரம் செய்யப்படுகிற தளம், கருப்பொருள், விளம்பரம் இடம்பெறும் இடம் போன்றன அடிப்படையில் பல வகைப்படுகின்றது.

### 9.1.3.1.தள அடிப்படையில் விளம்பரத்தின் வகைகள்

விளம்பரம் செய்யப்படும் தளத்தின் வழி பல வகைப்படுகின்றது.

1. சுவர் விளம்பரம்.
2. தட்டி வழி விளம்பரங்கள்
3. துணி விளம்பரங்கள் (துணிப்பைகள் போன்றவற்றில் வெளியிடப்பெறுவன.
4. தாள் விளம்பரங்கள் (சிறு அட்டை, இதழ்கள் போன்றவற்றில் வெளியிடப்பெறுவன)
5. ஊடக விளம்பரங்கள் (இதழ்கள் போன்றவற்றில் வெளியிடப்பெறுவன)

குறிப்பு

6. ஒலி, ஒளி வழி விளம்பரங்கள் (பேச்சு, விளக்குகள் வழி வெளியிடப்பெறுவன)
7. மின்னணு ஊடக விளம்பரங்கள் (தொலைக்காட்சி, வானொலி, மின்னணுத் தொடர்புகள் வழியாக நகரும், நகரா நிலையில் வெளியிடப்பெறுவன)
8. வாகன விளம்பரங்கள் (பேருந்து, தொடர்வண்டி, விமானம் போன்ற வாகனங்களின் முன், பின், பக்கவாட்டுப் புறங்களில் செய்யப்படுவன)
9. கலை நிகழ்ச்சி விளம்பரங்கள் (கலைநிகழ்ச்சிகள் வழி வெளியிடப் பெறுவன)

இவ்வாறு விளம்பரம் செய்யப்படும் தளம் கருதி விளம்பரங்கள் வகைமை செய்யப்பெறுகின்றன.

### 9.1.3.2.கருப்பொருள் வழி விளம்பர வகைகள்

விளம்பரம் என்பது பல்வகை கருப்பொருள்களை விளம்பரப்படுத்தும் நோக்கில் செய்யப்படுகிறது. மருத்துவம், வேலைவாய்ப்பு, தங்குமிடம், நிலம் வீடு வாங்கல், உற்பத்திப் பொருளை விற்பனை செய்தல் போன்ற பல நிலைகளில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. இவ்வாறு கருப்பொருள் அடிப்படையில் செய்யப்படும் விளம்பரங்களின் வகைகள் பின்வருமாறு.

1. உற்பத்திப் பொருள் விளம்பரம்
2. நிறுவனப் பொருள் விளம்பரம்
3. நிறுவன விளம்பரம்
4. தொழில் விளம்பரம்
5. வணிக விளம்பரம்
6. பகுக்கப்பட்ட விளம்பரம்
7. அறிவிப்பு விளம்பரம்
8. சட்ட விளம்பரம்
9. அரசு விளம்பரம்
10. விழாக்கால விளம்பரம்

11. பொது சேவை விளம்பரம்

இவை பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு.

குறிப்பு

### 9.1.3.2.1.உற்பத்திப் பொருள் விளம்பரம்

உற்பத்தி செய்யப்பட்ட ஒரு பொருளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் விளம்பரவகை இதுவாகும். மக்கள் தொடர்பு சாதனங்கள் இவ்விளம்பரங்கள் அதிக அளவில் இடம்பெறுகின்றன. பெரும்பாலும் அன்றாடம் மக்களுக்குத் தேவைப்படும் பொருள்கள் இவ்விளம்பரங்கள் அதிக அளவில் அறிமுகம் செய்யப்படுகின்றன. துணி, சோப்பு, நறுமணப் பொருள்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் போன்றவற்றை விளம்பரப் படுத்துவது இவ்வகையில்அடங்கும்.

### 9.1.3.2.2.நிறுவனப் பொருள் விளம்பரம்

ஒரு நிறுவனத்தின் முத்திரை, தயாரிப்பு, நிறுவன வாசகம் போன்றவற்றை வெளியிடும் விளம்பரவகை நிறுவனப் பொருள் விளம்பரம் எனப்படுகின்றது.

### 9.1.3.2.3.நிறுவன விளம்பரம்

நிதி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், பள்ளிகள், மருத்துவ மனைகள், கல்லூரிகள், கிளை நிறுவனங்கள், அறக்கட்டளைகள் போன்றன தொடங்கப்படுதல், இடம் மாற்றம் செய்யப்படுதல் போன்ற நிலைகளில் விளம்பரப்படுத்தப்படுவது இவ்வகை விளம்பரங்களில் அமையும்.

### 9.1.3.2.4.தொழில் விளம்பரம்

தொழில் தொடங்குவதற்கான மூலப்பொருள், எந்திரங்கள் பற்றிய விளம்பரங்கள் தொழில் விளம்பரங்கள் எனப்படுகின்றன. விவாசயத் தொழில் விளம்பரங்கள், அச்சுத்தொழில் விளம்பரங்கள்,

குறிப்பு

கைத்தொழில் வழி தயாரிக்கும் பொருள்களை உருவாக்கும் எந்திரங்கள் பற்றிய விளம்பரங்கள் இவ்வகையில் அடங்கும்.

**9.1.3.2.5.வணிக விளம்பரம்**

வணிகத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, வணிகத்தைப் பெருக்கும் நோக்கில் செய்யப்படும் விளம்பரங்கள் வணிக விளம்பரங்கள் எனப்படுகின்றன.

**9.1.3.2.6.பகுக்கப்பட்ட விளம்பரம்**

இவ்விளம்பரங்கள் செய்தி அளவிலும் விளம்பரச் செலவு அளவிலும் குறுகியவை என்றாலும் மக்களால் அதிகம் பார்க்கப்படுகிற விளம்பரங்கள் பகுக்கப்பட்ட விளம்பரங்கள் ஆகும். இது ஒரு குறித்த நாளில், ஒரே இடத்தில் விளம்பரம் செய்யப்படும். பெரும்பாலும் இதழ்களில் இவ்விளம்பரங்கள் இடம்பெறும். வேலைவாய்ப்பு, திருமணம், வாடகை வீடு, வீடு விற்பனை, மனை விற்பனை இவைபோல் வருவன எல்லாம் இவற்றில் அடங்கும்.

**9.1.3.2.7.அறிவிப்பு விளம்பரம்**

ஒரு செய்தியை அறிவிப்பாக வெளியிடும் விளம்பரம் அறிவிப்பு விளம்பரம் எனப்படுகிறது. மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி போன்றன வெளியிடும் அறிவிப்புகள், மின்சார நிறுத்த அறிவிப்பு, இடம் குறித்தான அறிவிப்புகள், பெயர் மாற்றம், முகவரி மாற்றம், நேர மாற்றம் போன்ற அறிவிப்புகளை வழங்கும் நிலையில் இவ்விளம்பரங்கள் அமைந்திருக்கும்.

**9.1.3.2.8.சட்ட விளம்பரம்**

சட்ட அடிப்படையில் அதனைக் காக்கும் பொருட்டு வெளியிடப்பெறும் விளம்பரங்கள் சட்ட விளம்பரங்கள் எனப்படுகின்றன. நீதி மன்ற ஆணைகள், அறிக்கைகள், அரசு

சட்டவல்லுநர் அளிக்கும் தகவல்கள் போன்றன இவ்வகையில் அடங்கும்.

### 9.1.3.2.9.அரசு விளம்பரம்

அரசாங்கம் தான் எடுத்து நடத்தும் செயல்திட்டங்கள், சாதனைகள், சான்றோர்க்கு அரசு செய்யும் நினைவு கூர்தல்கள் பற்றி விளம்பரம் செய்வது இவ்வகையைச் சாரும். ஏலக் குத்தகை விளம்பரங்கள், நலத்திட்ட விளம்பரங்கள் இவையும் இதில் சேரும்.

### 9.1.3.2.10.விழாக்கால விளம்பரம்

புத்தாண்டு, பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ் போன்ற விழாக் காலங்களில் வணிகம் கருதி அறிவிக்கப்படும் தள்ளுபடிகள், பரிசுப்பொருட்கள் பற்றிய செய்திகளை இவ்விளம்பரங்கள் பெற்றிருக்கும். இவ்விளம்பரத்தாள்களைக் கொண்டுவருவோர் இன்னும் சில சிறப்புச் சலுகைகள் வழங்கப்படும் என்றும் அறிவிப்பு செய்யப்பெற்றிருக்கும். அவ்வகையில் இவ்விளம்பரம் மிக முக்கியமானதாக இருக்கும்.

மேலும் பிரபல வழிபாட்டு இடங்களில் நடைபெறும் விழாக்கள் பற்றி, அவ்விழாக் காலங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றி அறிவிப்பதும் இவ்விளம்பர வகையாகும்.

### 9.1.3.2.11 பொது சேவை விளம்பரம்

வணிக நோக்கம் இல்லாது, பொதுமக்களுக்குச் சேவையாகச் செய்யப்படும் விளம்பரங்கள் பொதுசேவை விளம்பரங்கள் எனப்படுகின்றன. சூரிய ஒளி ஆற்றலைப் பயன்படுத்துதல், மழை நீர் சேகரிப்பு, மண்வளம் பாதுகாத்தல், தூய்மையைப் பராமரித்தல், எரிபொருள் சேமிப்பு, வன பாதுகாப்பு போன்றவைகளைப் பற்றிய தகவல்கள் அடங்கியனவாக இவ்விளம்பரங்கள் அமைந்திருக்கும்.

குறிப்பு

இவ்வாறு கருப்பொருள் கருதி விளம்பரங்கள் பல வகைப்படுகின்றன. இன்னமும் இவ்வகைப்பாடு விரிவடையலாம்.

### 9.1.4.விளம்பரம் இடம்பெறும் இடம் அடிப்படையிலான வகைகள்

இதழ்களில் விளம்பரங்கள் பல இடங்களில் வெளியிடப்பெறுகின்றன. பல செய்தித்தாள்களில் செய்திகளுக்கு இடையில் விளம்பரங்கள் வெளிவருகின்றன. சிலவற்றில் விளம்பரங்களுக்கு இடையில் ஓரளவு செய்திகளும் இடம்பெறுகின்றன. இந்நிலையில் விளம்பரங்கள் இடம்பெறும் இடங்கள் கருதியும் வகைமை படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு.

1. முன் அட்டை அல்லது முன் பக்க விளம்பரம்
2. பின் அட்டை அல்லது பின் பக்க விளம்பரம்
3. நெற்றி அல்லது காது விளம்பரம் (முக்கியச் செய்திகளுக்கு இருபுறமும் அமையும் விளம்பரம்)
4. பெட்டி விளம்பரம்(பெட்டிச் செய்தியாக வெளிவரும் விளம்பரம்)
5. வரி விளம்பரம (வரி எண்ணிக்கை அடிப்படையில் செய்யப்படுவது )
6. முழுப்பக்க விளம்பரம் (முழுப் பக்கத்தையே விளம்பரத்துக்குப் பயன்படுத்துவது)
7. அரைப்பக்க, கால் பக்க விளம்பரம்
8. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அதன் அடிப்பகுதி, அதன் மேற்பகுதியில் வரிசைபட ஓடும் விளம்பரங்கள்.
9. விளம்பரதாரர் நிகழ்ச்சிகள்

இவ்வாறு பல வகைகளில் விளம்பரங்கள் வெளிவருகின்றன.

## 9.2.பத்திரிக்கை சட்டங்கள்

பத்திரிக்கைகள் நடத்துவோரும், பத்திரிக்கையில் செய்தி வெளியிடுவோரும் அடிப்படை சட்டங்கள் பற்றி நிச்சயமாக அறிந்திருக்க வேண்டும். பத்திரிக்கை என்பது எழுத்து ஆவணமாகும். என்றேனும் ஒருநாள் இவ்வெழுத்து ஆவணத்தின் முக்கியத்துவம் உணரப்படும். ஆகவே பத்திரக்கை சட்டங்கள் என்பவை அனைவராலும் அறிந்த கொள்ளத்தக்கனவாகும். இப்பகுதியில் சில அடிப்படைச் சட்டங்கள் விளக்கப்பெறுகின்றன.

### 9.2.1.தொழில் முறை இதழாளர் சட்டம்(1955)

இதழியல் என்பது பொது மக்களுக்கு சேவை புரிகிறது என்றாலும், இதனுள் பணியாற்றுபவர்களும் தொழிலாளர்களே ஆவர். அவர்களின் உரிமைகளை, சலுகைகளை, வசதி வாய்ப்புகளை, பாதுகாப்புகளை வரையறை செய்யும் சட்டம் தொழில் முறை இதழாளர் சட்டமாகும். இதன் வழி ஊதிய நிர்ணயம், ஊதிய உயர்வு, கருணைத்தொகை, கொடையுதவி, ஆயுள் காப்பீடு போன்றன இதழாளர்களுக்குக் கிடைக்கும் முறைமையை இச்சட்டம் வரையறை செய்கிறது.

### 9.2.2.செய்தித்தாள் புத்தகப் பதிவுச் சட்டம் (1867)

செய்தித்தாள், அல்லது இதழ் அல்லது நூல் வெளியிடும் நிலையில் அதனைப் பதிவு செய்யவேண்டியது அவசியமாகும். இந்தியாவின் தலைநகரான புதுடில்லியில் உள்ள பத்திரிக்கைப் பதிவு அலுவலகத்தில் ஒரு பதிவாளர் இருப்பார். இவரே பத்திரிக்கைகளைப் பதிவு செய்யும் முறைமை பெற்றவர். இவரே செய்தித்தாளுக்கான தலைப்பினை இதுவரை பதிவு பெறாததாக இருக்கவேண்டும் என்பதை முறைப்படுத்தி வழங்குவார்.

குறிப்பு

இவர் பத்திரிக்கை பற்றிய அடிப்படை தகவல்களை வைத்திருப்பார். பத்திரிக்கையின் தலைப்பு, மொழி, வெளிவரும் இடம், பக்க அளவு, பக்க எண்ணிக்கை, வெளிவரும் கால அளவு, உரிமையாளர் பெயர், முகவரி போன்ற அடிப்படைத் தகவல்களை இவர் பதிவு செய்து வைத்திருப்பார். இவ்வாறு பதிவு பெற்ற இதழ்களே இதழ்கள் எனக் கொள்ளப்பெறும். நூல்களும் பதிவாக்கம் பெறலாம்.

## 9.2..3.பிரஸ் கவுன்சில் சட்டம் (1978)

இந்தியாவிலுள்ள இதழியல் நிறுவனங்களின் உரிமையைப் பாதுகாக்கவும், அந்நிறுவனங்களின் மூலம் வெளியாகும் பத்திரிக்கைகளின் தரத்தை உயர்த்தவும், செய்தி நிறுவனங்களின் பணியை வரையறுக்கவும் 1978 ஆம் ஆண்டு பிரஸ் கவுன்சில் சட்டம் கொண்டுவரப்பட்டது. இக்கவுன்சிலில் தலைவர் ஒருவர், நடுவர் ஒருவர், இருபத்தெட்டு உறுப்பினர்கள் இருக்கலாம். இதழியல் துறை சார்ந்து பணியாற்றுபவர்கள் பதிமூன்று பேர்களும், செய்தித்தாள் நிறுவனங்களின் சார்பாக ஒருவரும், இலக்கியம், சட்டம், அறிவியல் துறைகளில் சிறந்த மூவரும், பாரளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் ஆக இருபத்தைந்து பேர் இக்குழுவில் அடங்குவர். பிரஸ் கவுன்சில் குழுவைப் பாராளுமன்றத் தலைவரும், இந்திய மேல்சபைத் தலைவரும் பத்திரிகை நிறுவனங்களிலிருந்து ஒருவரும் இணைந்து தேர்வு செய்வர். இவர்கள் மூவரையும் சேர்த்து, பிரஸ் கவுன்சில் உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபத்தியெட்டாகக் கணக்கிடப் படுகிறது. இச்சட்டம் இதழியல் வரலாற்றில் குறிக்கத்தக்க சட்டம் ஆகும்.

குறிப்பு

**9.2.4.காவல் துறைச் சட்டம் (1933)**

காவல்துறையின் கட்டுப்பாடுகளை ஒழுங்குகளை மீறும் நிலையில் மீறுபவர்கள் மீதும், மீறும் இதழ்கள் மீதும் நடவடிக்கைகள் எடுக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது.

**9.2.5.அலுவலக இரகசியக் காப்புச் சட்டம் (1923)**

அரசு ஆவணங்கள், அரசு மற்றும் அரசு அலுவலகங்கள் சார்ந்த ரகசிய நடைமுறைகள், பாதுகாக்கப்பட்ட இடங்கள் போன்றவற்றைப் பற்றிய தகவல்களோ, படங்களோ வெளியிடப்படக் கூடாது. இவற்றின் இரகசியம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற நிலையில் இச்சட்டம் உருவாக்கப்பெற்றது.

**9.2.6.மந்திர மருத்துவத் தடுப்புச் சட்டம் (1954)**

மந்திர முறை வழியாக மருத்துவ சிகிச்சை தரப்படும் என்ற முறையில் மந்திர தந்திரங்களை வெளிப்படுத்தும் செய்திகளை விளம்பரங்களை வெளியிடக் கூடாது என்ற நடைமுறை இச்சட்டம் கொணர்கிறது.

**9.2.7.குற்றவியல் தடுப்புச் சட்டம் (1973)**

பொது அமைதிக்குக் கேடு விளைவிக்கும் செயல்கள் பற்றிய செய்தி வெளியீடுகளை தடுக்கும் நிலையில் இச்சட்டம் உருவாக்கப்பெற்றது. இவ்வாறு செய்யும் இதழ்களைப் பறிமுதல் செய்யும் அளவிற்கு இச்சட்டம் வலிமை வாய்ந்தது.

**9.2.8.நாடாளுமன்ற நடவடிக்கைச் சட்டம் (**1956)

நாடாளுமன்ற நடவடிக்கைகளையும் அவை தொடர்பானவற்றையும் வெளியிடுவது குறித்த இச்சட்டம் பெரோஸ் காந்தி சட்டம் என்றும் அழைக்கப்படும். நாடாளு மன்ற

நடவடிக்கைகள் பற்றிய செய்திகளைச் சரியாக வெளியிடுவது குறித்து இச்சட்டம் உருவாக்கப்பட்டது.



குறிப்பு

### 9.2.9.இளையோர் தீங்கிழைப்புத் தடுப்புச் சட்டம் (1956)

இளைஞர்களின் மனத்தினை, உடல் நலத்தினைக் கெடுக்கும் ஆபாச வெளியீடுகளைத் தடை செய்யும் வகையில் இச்சட்டம் கொண்டு வரப்பட்டது.

### 9.2.10.பதிப்புரிமைச் சட்டம் (1957)

நூலாசிரியர்களுக்கு உரிய பதிப்புரிமையை அளிக்கும் விதமாக இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி ஆசிரியருக்குப் பதிப்புரிமை காக்கப்பெற்றது.

### 9.2.11.அவதூறுச் சட்டம்

தனி மனிதர் குறித்து அவதூரான செய்திகளை வெளியிட்டால் வழக்குத் தொடர இச்சட்டம் வகை செய்கிறது. இ.பி.கோ. 499, 502 ஆகிய பிரிவுகளில் வழக்குத் தொடரலாம். இத்தகு சட்டங்கள் நடத்தை விதிகள் உருவாக உதவுகின்றன.

### 9.2.12.ஆட்சி துரோகச் சட்டம்

இந்தியாவில் நடைபெறும் ஆட்சிக்கு எதிரான வன்முறைகளை விளைவித்தல், இடையீடுகளை உருவாக்கல், நாட்டின் பாதுகாப்புக்குத் தீங்கு விளைவித்தல் முதலிய ஆட்சிக்கு எதிரான செயல்களை வெளியிடல் அல்லது பரப்புதல் தடுத்தலை ஆட்சி துரோகச் சட்டம் செய்கிறது.

### 9.2.13.பத்திரிகைக் குழுச்சட்டம்

பத்திரிக்கைக் குழுச் சட்டம் என்பது இதழ்களின் உரிமையைப் பாதுகாக்கக் கொண்டு வரப்பட்ட சட்டமாகும்.

இதழ்கள் தொடர்பான எந்தப் பிரச்சினையையும் இதழியல் குழு விசாரித்துத் தீர்ப்பு வழங்கும்.



### 9.2.14.இதழியல் தொடர்பான இந்திய தண்டனைச் (பீனல்கோடு) சட்டங்கள்

பொதுவான இந்திய தண்டனைச் சட்டங்கள் இதழியல் குறித்து வகுக்கப்பெற்றுள்ளன. அவற்றில் முக்கியமான சில பின்வருமாறு.

(1) இ.பி.கோ 124-யு-இன்படி நாட்டின் நலனிற்குக் கேடு விளைவிக்கும் முறையில் பேசுவதையும் எழுதுவதையும் துரோகமாகக் கருதித் தண்டனை விதிக்கிறது.

(2) இ.பி.கோ. 505ஆம் பிரிவின்படி இராணுவத்தினர் இடையே பிளவு உண்டாகும்படி அறிக்கை வெளியிடுவதைத் தடுக்கிறது.

(3) இ.பி.கோ. 295-யு-யின்படி மத நல்லுணர்வுக்குக் கேடு விளைவதைத் தடுக்கிறது.

(4) இ.பி.கோ. 99 யு, 99பு- யின்படி இனக்கலவரம் உண்டாகக் காரணமான நூலையோ செய்தித்தாளையோ பறிமுதல் செய்கிறது.

(5) இ.பி.கோ. 228ஆம் பிரிவின்படி நீதிமன்ற அவமதிப்பைத் தடுக்கிறது.

### 9.2.15.தணிக்கைச் சட்டம் (1988)

இதழியல் சட்டங்களில் முக்கியமானது.இதழ்களின் வெளிவரும் செய்திகளைத் தணிக்கை செய்யும் தணிக்கைச் சட்டம் ஆகும். இச்சட்டத்தின்படி, செய்திகள் வெளியிடுவதற்கு முன்பு அவற்றை ஆராய்ந்து நீக்க முடியும். இச்சட்டம் இதழியல் சுதந்திரத்தோடு தொடர்புடையதாகும். இதழ்களின் சுதந்திரத்தைப் பாதிப்பதால் இதனைக் கருப்புச் சட்டம் என்பர்.

குறிப்பு

இவ்வாறு பத்திரிகை சட்டங்கள் பல உள்ளன. இவற்றில் தேர்ந்த அறிவும், நோக்கும் உடையவர்களாக செய்தியாளர்கள் விளங்கவேண்டும்.

## 9.3.பதிப்புரிமை

எழுத்தாளர்கள், கலைஞர்கள் உருவாக்கிய படைப்புகளின் உரிமை குறித்தான சட்டம் பதிப்புரிமைச் சட்டம் ஆகும். இச்சட்டத்தின்படி ஒரு படைப்பினை உருவாக்குபவர், வெளியிடுபவர் ஆகியோர்க்கு இடையிலான புரிதலையும், மாறுபாடுகளையும் அறிந்து தீர்வு காண உதவுவது பதிப்புரிமைச் சட்டம் ஆகின்றது.

படைப்புகளை மறு வெளியீடு செய்தல், மறு ஆக்கம் செய்தல், மொழி பெயர்த்தல், தழுவி எழுதுதல் போன்றவற்றின்போது மூலப்படைப்பாளியின் உரிமையைப் பாதுகாக்க இச்சட்டம் உதவுகின்றது. குறிப்பாக திரைப்படங்களின் மூலக்கதை யாருடையது என்பதில் ஏற்படும் சிக்கல்களைக் களைய இச்சட்டம் உதவுகின்றது.

இந்திய பதிப்புரிமைச்சட்டம் என்பது 1957 ஆம் ஆண்டு உருவாக்கப்பெற்றது. இச்சட்டம் 1993, 1984, 1992, 1994, 1999 ஆகிய ஆண்டுகளில் திருத்தம் செய்யப்பெற்றுள்ளது.

உலக அளவிளான பதிப்புரிமைச் சட்டம் என்பதும் அனைத்து நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளது. பெர்ன் மாநாட்டு ஒப்பந்தம் (1886), உலகலாவிய பதிப்புரிமைச் சட்டம்(1951), அறிவுசார் சொத்துரிமையின் வணிகம் தொடர்பான அம்சங்கள் பற்றிய உடன்பாடு (1995) போன்ற உலக அளவிலான பதிப்புரிமையை வரையறை செய்கிறது.

ஒரு படைப்பும் அதன் பதிப்பும் அறுபது ஆண்டுகாலத்திற்கு மூலப் படைப்பாளரின் பதிப்புரிமைக்கு உரிமை பெற்றதாகும். அதன்பின் அது பொதுச் சொத்தாக மாறிவிடுகிறது. இவற்றில்

இருந்து நாட்டுடைமையாக்கப் பெற்ற படைப்புகளுக்கு விலக்கு உண்டு. நாட்டுடைமையாக்கப்பெற்ற படைப்புகள் பதிப்புரிமையை அரசுக்கு வழங்கிவிடுகிற நிலையில் அதனை எவரும் பயன்படுத்த முடிகிறது.



# கூறு. 10

# இந்திய உலகச் செய்தி நிறுவனங்கள், பத்திரிக்கை மன்றம்.

## 10.செய்தி நிறுவனங்கள்

உலக அளவிலான செய்தித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு கிடைத்த செய்திகளை தன்னுடன் இணைந்த செய்தி நிறுவனங்களுக்கு வழங்கும் நிலையங்கள் செய்தி நிறுவனங்கள் ஆகின்றன. தேசிய அளவிலும் இவை செயல்படுகின்றன. உலக அளவிலும் செயல்பட்டு வருகின்றன.

## 10.1.இந்திய அளவிலான செய்தி நிறுவனங்கள்

இந்திய நாட்டில் உள்ள பல பகுதிச் செய்திகளை வழங்குவதற்காக பின்வரும் நிறுவனங்கள் செயல்பட்டுவருகின்றன.

- பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா
- யுனைடெட் நியூஸ் ஆப் இந்தியா
- ஹிந்துஸ்தான் சமாச்சார்
- சமாச்சார் பாரதி
- இந்தோ-ஆசியன் செய்திச் சேவை

என்பன இந்திய அளவிலான செய்தி நிறுவனங்கள் ஆகும். இவை பற்றிய சிறு விளக்கங்கள் பின்வருமாறு.

## 10.1.1.பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா

பி.டி.ஐ. என்று பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா என்ற நிறுவம் சுருக்கமாக அழைக்கப்படுகிறது. இது இந்தியாவின் மிகப் பெரிய செய்தி நிறுவனமாக விளங்குகிறது. இது 1949 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. டெல்லியைத் தலைமையிடமாகக் கொண்டு விளங்கும் இந்நிறுவனம், நாடு முழுவதும் நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட கிளை அலுவலகங்களைக் கொண்டுச் செயல்பட்டுவருகிறது. இது உலக அளவிலும் தன் பரப்பினை விரித்துக்கொண்டுச் செயல்பட்டுவருகிறது.

## 10.1.2.யுனைடெட் நியுஸ் ஆப் இந்தியா

யுனைடெட் நியுஸ் ஆப் இந்தியா என்ற இந்த செய்தி நிறுவனம் 1961 ஆம் ஆண்டுமுதல் இயங்கிவருகிறது. யு.என். ஐ என்று இது சுருக்கமாக அழைக்கப்படுகிறது. அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன் தொலைக்காட்சி போன்ற பல செய்தி வழங்கும் நிறுவனங்களுக்கு இது செய்தியை வழங்கி வருகின்றது. பதினான்கு மொழிகளில் இது செய்திகளை வழங்கி வருகிறது.

## 10.1.3.ஹிந்துஸ்தான் சமாச்சார்

1948 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இச்செய்தி நிறுவனம் பத்து மொழிகளில் செய்திகளை வழங்குகிறது. இது பி.டி. ஐ நிறுவனத்துடன் 1975 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்படுகிறது. இருநூறு செய்தி மையங்களுக்கு இது தன் செய்திகளை வழங்கியது.

## 10.1.4.சமச்சார் பாரதி

இது போபால் என்ற நகரிலிருந்துச் செயல்பட்டு வரும் செய்தி நிறுவனம் ஆகும். இது ஐநூறுக்கும் மேற்பட்ட செய்தித்

தாள்களுக்குச் செய்திகளை வழங்கி வருகிறது. இது 1967 ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகிறது.

### 10.1.5.இந்தோ ஆசியன் செய்திச் சேவை

ஐ.ஏ.என்.எசு. என்று சுருக்கமாக அழைக்கப்படும் இச்செய்தி நிறுவனம் தனியார் துறைச் செய்தி நிறுவனம் ஆகும்.இந்தியாவின் வெளிநாட்டு செய்தி சேவையாக இந்திய அமெரிக்கரான கோபால் ராசு என்கிற வெளியீட்டாளர் இந்நிறுவனத்தை நிறுவினார். பின்னர் இது இந்தோ-ஆசியன் செய்திச் சேவை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இச்செய்தி நிறுவனம் தனது முக்கிய அலுவலகத்தை இந்தியாவின் நொய்டாவில் அமைத்துள்ளது.

### 10.2.வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள்

வெளிநாட்டுச் செய்திகளை இந்திய செய்தி நிறுவனங்களுக்கும், செய்தித்தாள்களுக்கும் உலக அளவிலான செய்தி நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. அவற்றில் குறிக்கத்தக்கன பின்வருமாறு.

- ஆசியன் நியுஸ் இண்டர்நேஷனல்
- இந்தோ ஆசியன் நியுஸ் சர்வீஸ்
- ராய்ட்டர்ஸ்
- அசோசியேட்டட் பிரஸ்
- டாஸ்

### 10.2.1.ஆசியன் நியுஸ் இண்டர்நேஷனல்

இந்தியாவிலும், தெற்கு ஆசியாவிலும், உலக அளவிலும் செய்தி வழங்கும் நிறுவனமாக ஆசியன் நியுஸ் இண்டர் நேஷனல் விளங்குகிறது. ஏ.என்.ஐ என்பது இந்நிறுவனத்தின் சுருக்கப்பெயராக உள்ளது. இது நூறு கிளைகளுடன் செய்திகளைச் சேகரித்து வழங்குகிறது.

### 10.2.2.இந்தோ ஆசியன் நியுஸ் சர்வீஸ்

ஐ.ஏ.என். எஸ் என்று சுருக்கமாக அழைக்கப்படும் நிறுவனம் விடுதலையான செய்தி நிறுவனம் என்று தன்னை அறிமுகம் செய்துகொள்கிறது. இது செய்தி ஊடகம், கணினி வழிப் பல்லூடகம் போன்ற பலவற்றின் வழியாகச் செய்திகளை வழங்கிவருகிறது. 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற இந்நிறுவனம், மட்டைப்பந்து (கிரிக்கெட்), மற்ற விளையாட்டுச் செய்திகளையும் திரைப்படச் செய்திகளையும் வழங்குவதில் சிறந்ததாக விளங்கிவருகிறது.

### 10.2.3.ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம்

லண்டனைத் தன் தலைமையிடமாகக் கொண்டுச் செயல்பட்டு வருகிறது ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம். பொருளாதார சந்தைத் தரவுகளை அளிப்பதில் இந்நிறுவனம் முன்னிலையில் நிற்கிறது.

### 10.2.4.அசோசியெட்டட் பிரஸ்

அசோசியெட்டட் பிரஸ் என்ற செய்தி நிறுவனம், அமெரிக்காவில் இருந்துச் செயல்பட்டுவருகிறது. இது ஏ.பி என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது. 1700 செய்தித்தாள்கள், 5000 அலைவரிசை ஊடகங்கள் ஆகியனவற்றுடன் ஒப்பந்த அடிப்படையில் இந்நிறுவனம் செய்திகளை வழங்கி வருகிறது.

### 10.2.5.டாஸ்

டி.எ.எஸ்.எஸ் என்று நான்கு எழுத்துக்களைத் தன் தலைப்பாகக் கொண்டு இயங்கும் இந்நிறுவனம் 115 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. ஒரு நாளைக்கு 1500செய்திகளையும், 500 புகைப்படங்களையும் வெளியிட்டு வருகிறது. இது ரஷ்யாவிலிருந்து இயங்கும் செய்தி நிறுவனம் ஆகும்.

இவ்வாறு செய்தி நிறுவனங்கள் இந்திய அளவிலும், உலக அளவிலும் செய்திகளைச் சேகரித்து வெளியிட உதவி வருகின்றன.

குறிப்பு

## கூறு. 11

## ஊடகங்கள்

## மரபுவழி, அச்சுவழி, மின்வழி, அஞ்சல் தந்தி, வானொலி, சினிமா, தொலைநகலி

### 11.ஊடகங்கள்

செய்தி ஒரு புறம் மக்கள் ஒரு புறம் என்று இருக்க இவை இருபுறங்களையும் தொடர்பு படுத்த தொடர்பு சாதனம் ஒன்று தேவைப்படுகிறது. அவையே ஊடகங்கள் ஆகும். ஊடகங்கள் என்பன உண்மையை உண்மையாக மக்களிடம் கொண்டு சேர்ப்பனவாக இருக்கவேண்டும். அவ்வகையில் அவை செய்தி வெளியிட பல வெளியீட்டு ஊடக அமைப்புகள் பண்டைக் காலத்தில் இருந்து இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகினறன. இவற்றை அவற்றின் வெளியீட்டுத் ˙தன்மை கருதியும், சாதனங்கள் என்ற அடிப்படையிலும் இரு வகைகளாகப் பகுக்க இயலும். அவற்றின் விரிவு பின்வருமாறு.

### 11.1. ஊடகத்தின் வெளியீட்டுத் தன்மையின் அடிப்படையில் அமைந்த வகைகள்

ஊடகங்கள் அதன் வெளிப்பாட்டுத் தன்மை கருதி பல வகைப்படுகின்றன. ஓவிய ஊடகம், ஒலி ஊடகம், எழுத்து ஊடகம், தோல் கருவி ஊடகம், அச்சு ஊடகம், அஞ்சல் ஊடகம்,

வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி , இணையம் போன்ற பல்வேறு வகை ஊடகங்கள் மக்கள் பயன்பாட்டில் இருந்துவருகின்றன. அவ்வகைகள் பற்றிய விளக்கங்கள் பின்வருமாறு.

### 11.1.1.ஓவிய ஊடகம்

பண்டை காலத்தில் மனிதர்கள் குகைகளில் வாழ்ந்து வந்தனர். அப்போது பேச்சு மொழி உருவாக வாய்ப்பில்லை. ஓவிய மொழி உருவாகியிருந்தது. ஓவியங்கள் வழியாகத் தான் பார்த்த ஒன்றை, நடந்த ஒன்றை மனிதன் குகைகளில் வரைந்தான். இதன்வழி மற்றொரு மனிதனுக்குத் தகவல் பரிமாறப்பட்டது. சான்றிற்குத் தமிழகத்தின் நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டத்தில் அமைந்துள்ள கரிக்கையூர் என்ற இடத்தில் உள்ள பாறை ஓவியங்கள் பண்டைய கால மனிதனின் தகவல் தொடர்பு ஆர்வத்தின் வெளிப்பாடாக உள்ளது.

கீழுள்ள பாறை ஓவியத்தில் ஏறு தழுவுதல் என்ற நிகழ்ச்சி கி. மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பான கால அளவில் ஓவியமாக வரையப்பெற்று இன்றுவரை அவ்வோவியம் தகவல்களைத் தந்து கொண்டுள்ளது.



**குறிப்பு**

**11.1.2.ஒலி ஊடகம்**

அடுத்த நிலையில் மனிதன் வாய்வழியே ஒலி எழுப்பக் கற்றுக்கொண்டான். குறிப்பிடத்தக்க ஒலிகளை அடிக்கடி எழுப்பி தன் தேவைகளை அவன் மற்றவர்க்கு அறிவித்தான். பறவைகளின் ஒலிகள், விலங்குகளின் ஒலிகள், பாம்பின் சீறல் போன்றனவும் தொடர்பு முறைக்குப் பயன்படுத்தப்பெற்றுள்ளன. இன்றளவிலும் இந்த ஒலி ஊடகப் பயன்பாடு பயன்படுத்தப்பெற்று வருகிறது.

ஒலி மொழிக்குப் பின்பு எழுத்து மொழி பிறந்திருக்க வேண்டும். எழுத்து மொழி வழியாக தகவல் தொடர்பு நடைபெற்றுள்ளது. கடிதம் எழுதுதல், தூதுச் செய்தி அனுப்புதல் போன்ற நடைமுறைகளில் எழுத்து வடிவ தொடர்பால் நடக்க ஆரம்பித்தது.

**11.1.3.எழுத்து ஊடகம்**

கல்வெட்டுக்கள், செப்பேடுகள் வழியாகவும் அரசாங்கச் செய்திகள் பரப்பப்பெற்றன. இதன்வழியாக ஊடகம் என்பது அதிகார தொனி உடையதானது.

அசோகரின் கல்வெட்டுகள் பல செய்திகளை இந்தியாவின் பல பகுதிகளிலும் பரப்பின. எடுத்துக்காட்டிற்கு அசோகரின் இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு பற்றிய செய்திகள் இங்கு எடுத்துக்காட்டப்பெறுகின்றன. இக்கல்வெட்டு குஜராத் மாவட்டம் கத்தியவாரில் உள்ள கிர்னார் என்ற மலையில் வடிக்கப்பெற்றுள்ளது. இதன் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு ஆகும். இக்கல்வெட்டு பிராகிருதம் மற்றும் பிராமி எழுத்துக்களால் எழுதப்பெற்றுள்ளது. ‘ஸர்வத்’ என்று இக்கல்வெட்டு தொடங்குகிறது. இக்கல்வெட்டின் வழியாக அறியப்பெறும் செய்தி பின்வருமாறு.

“தேவனுக்குப் பிரியமானவனான அசோகர் தமது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் மட்டுமின்றி அண்டை நாடுகளான சோழ, பாண்டிய,

ஸத்தியபுத்திரர், கேரளபுத்திரர் மற்றும் அவருடைய அண்டைநாடுகளுக்கும் இரு வகை மருத்துவங்கள்அளிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளதை இக்கல்வெட்டு



தெரிவிக்கிறது. அதாவது மனிதருக்கும் விலங்கினங்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பெறுதல் வேண்டும். எங்கெல்லாம் மூலிகைச் செடிகளும் பழம் தரும் மரங்களும் இல்லையோ, அவைகள் கிடைக்கும் இடங்களிலிருந்து தருவித்து இல்லாத இடங்களில் நடப்படவேண்டும் என்றும், பசுக்கள் நீர் அருந்த கிணறு போன்ற நீர் நிலைகள் ஏற்படுத்தவேண்டும் என்றும் அறிவுறுத்துகின்றது. இவ்விதமாகப் பசுக்களும், மனிதர்களும் , மகிழ்வுடன் வாழவேண்டும் என்று அந்தக் கல்வெட்டு கூறுகிறது.



இக்கல்வெட்டில் மனிதர்கள், விலங்குகள் அனைவருக்கும் மருத்துவ வசதி, மரங்கள் நடல், நீர் நிலைகள் ஏற்படுத்தல் போன்ற அறங்கள் செய்யப்பட வேண்டும் என்று பொறிக்கப்பெற்றுள்ளது. மேலும் தமிழக அரசர்களைப் பற்றிய குறிப்புகளும் இக்கல்வெட்டில்

உள்ளது. இவ்வாறு தகவல் தொடர்பு கல்வெட்டின்வழி பரவியுள்ளது.

### 11.1.4.தோல் கருவி ஊடகம்

பேச்சு, எழுத்து வழி ஓரளவிற்கே மக்களிடம் செய்திகள் சென்று சேர்ந்த நிலையில் தோல்கருவிகளான பறை, முரசு போன்றன முழங்கி செய்திகளை அறிவிக்கும் முறைமையில் தகவல் தொடர்பு வளர்ச்சி பெற்றது. புறநானூற்றின் பதினேழாம் பாடலில் "இடியென முழங்கு முரசின்" என்ற தொடர் இடம்பெறுகிறது. இதன் வழி இடிபோன்று முழங்கக் கூடிய முரசினை முழங்கி அரசனின் இருப்பைத் தெரிவித்துள்ளனர். இவ்வாறு தோல்கருவிகள் வழியாக செய்தி தொடர்பாடல் நிகழ்ந்துள்ளது.

### 11.1.5.அஞ்சல் ஊடகம்

கடிதங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கும் அஞ்சல் ஊடகம் செய்திகளைப் பரிமாறிக்கொள்வதின் அடுத்த கட்ட வளர்ச்சியாக அமைந்தது. கிளிகள், புறாக்கள், அன்னங்கள் போன்றன செய்திகளை அளிக்கும் ஊடகங்களாகவும் விளங்கின. ஓரிடத்தில் சேகரிக்கப்படும் கடிதங்களை மற்றொரு இடத்திற்கு, நாட்டிற்குக் கொண்டு செல்ல, குதிரைகள், உந்து வண்டிகள், கப்பல்கள், புகை வண்டிகள் என்று எல்லாவிதமான போக்குவரத்து முறைகளும் பயன்படுத்தப்பட்டன. கி.மு. 1500 ஆம் ஆண்டு முதலே அஞ்சல் தொடர்பு இருந்து வந்ததாகக் கருதப்படுகிறது. அஞ்சல் தலை என்பதும் ஒரு நாட்டின் அடையாளமாக விளங்கின. ஒரு கடிதத்தில் ஒட்டப்பெற்றிருக்கும் அஞ்சல் தலை கொண்டு அது எந்த நாட்டின் அஞ்சல் என்று அறிந்து கொள்கிற நிலை ஏற்பட்டது. இவ்வாறு அஞ்சல் துறை வளர்ச்சி குறிக்கத்தக்க பங்கினை மக்கள் தொடர்பியல் வரலாற்றில் பெறுகின்றது.

## 11.1.6.அச்சு ஊடகம்





கி.பி நூற்றைந்தாம் ஆண்டு சீனநாட்டைச் சார்ந்த சாய்லன் என்பவர் மரப்பட்டையில் இருந்து காகிதம் செய்யும் நடைமுறையை உலகிற்கு அறிமுகம் செய்தார். இதுவே அச்சுக்கலையின் முதல் வளர்ச்சியாக அமைந்தது.

இதன்பின் சீனநாட்டினர் மரக்கட்டைகள், களிமண் உருவங்கள் ஆகியவற்றைச் செய்து அதனை மையில் தடவி தாளில் அச்சடித்து அழுத்தும் முறையைக் கையாண்டனர். இதன் காரணமாக ‘பிரஸ்’(Press) என்பது உருவானது.

கி.பி. 1450 ஆம் ஆண்டு ஜான் கூட்டன்பர்க் என்ற ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர் அச்சுப்பொறியைக் கண்டுபிடித்தார். இதன் மூலமாக அச்சு ஊடகம் பெரிதும் வளர ஆரம்பித்தது.

இங்கிலாந்து, ஜெர்மன் போன்ற நாடுகளில் இதழியல் துறை வளர்ச்சி பெற ஆரம்பித்தது. 1556 ஆம் ஆண்டில் கோவாவில் போர்த்துகீசியர்கள் முதல் அச்சகத்தை அமைத்தனர். 1578 ஆம் ஆண்டில் ஆண்டிரிக் பாதிரியார் என்பவர் புன்னைக்காயல் என்னுமிடத்தில் அச்சகம் ஒன்றை நிறுவினார். 1712 ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் அச்சகம் உருவாக்கப்பெற்றது. முதன் முதலாக வேதநூல் இதன்வழி வெளியிடப்பெற்றது. 1715 ஆம் ஆண்டு பொறையாரில் காகித உற்பத்தி ஆலை துவங்கப்பட்டது.

கி.பி. 1784 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் இதழ் ‘பெங்கால் கெஜட்’ என்பது வெளியிடப்பெற்றது. கி.பி. 1785 ஆம் ஆண்டு ‘மெட்ராஸ் கூரியர்’ என்ற இதழ் சென்னையில் இருந்து வெளிவந்தது. 1831 ஆம் ஆண்டு ‘தமிழ் மேகசின்’ என்ற தமிழ் இதழ் வெளிவந்தது. 1812 ஆம் ஆண்டு ‘மாசத் தினச் சரிதை’ என்ற இதழ் தமிழில் வெளிவந்துள்ளது.

தமிழ்மோகினி (1831), பால தீபிகை (1840), தத்துவ போதினி (1884), ஆதித்தமிழன் (1869), சுதேச மித்திரன் (1882) ஆகிய இதழ்கள் தமிழில் வெளிவரத் துவங்கின. இன்றுவரையிலும் அச்சு ஊடகம் தனக்கென தனியிடத்தை, தனித்த வலிமையைப் பெற்று வளர்ந்து வருகிறது.

### 11.1.7.வானொலி ஊடகம்

மின்சார பயன்பாடு கருதி பல முன்னேற்றங்கள் உலகில் நிகழ்ந்தன. வானொலியும் அவ்வகையில் புகழ் பெற்ற ஊடகமாக மின்சாரத்தின் பயன்பாட்டால் கிடைத்தது. இத்தாலியைச் சேர்ந்த மார்கோனி என்பவர் 1896 ஆம் ஆண்டு வானொலியைக் கண்டுபிடித்தார். 1901 ஆம் ஆண்டு மார்கோனி வானொலி நிறுவனம் தொடங்கப்பெற்றது. 1920 ஆம் ஆண்டு அமெரிக்காவின் பீட்டர்ஸ்பர்க் நகரில் வானொலி ஒலிபரப்பு மையம் உருவாக்கப்பெற்றது. 1922 ஆம் ஆண்டு பிபிசி (BBC) - "பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கார்ப்பரேஷன்" என்ற நிறுவனம் உருவாக்கப்பெற்றது.

இந்தியாவில் பம்பாய் மாகாணத்தின் ஆளுநராக இருந்த சர் ஜார்ஜ் லாயிட்டிங் என்பவரின் முயற்சியால் அஞ்சல் துறையின் ஒத்துழைப்புடன் டைம்ஸ் ஆப் இந்தியா நிறுவனம் ஒரு இசை நிகழ்ச்சியை புனே நகருக்கு ஒலிபரப்பியது. இதுவே வானொலியின் முதல் நிகழ்ச்சி. இதன்பின் வங்காள வானொலிக் குழாம், பம்பாய் வானொலிக் குழாம், சென்னை வானொலிக் குழாம் ஆகியன தொடங்கப்பெற்றன. இதன்பின் இந்திய ஒலிபரப்பு நிறுவனம், இந்திய அரசு ஒலிபரப்பு சேவை, ஆகாச வாணி (1935) ஆகியன உருவாக்கப்பெற்றன. டெல்லி வானொலிநிலையம் (1936), சென்னை வானொலி நிலையம் (1938), திருச்சி வானொலி நிலையம் (1939) போன்றன உருவாக்கப்பெற்றன.

தற்போது பண்பலை என்ற அடிப்படையில் வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. தனியார் பண்பலை வானொலிகளுக்கும் அனுமதி வழங்கப்பெற்றுள்ளது. இவைதவிர தற்போது இணைய வானொலிகளும் ஒலிபரப்புகளைச் செய்துவருகின்றன.

இவ்வாறு வானொலித் துறை பெரிதும் வளர்ந்துள்ளது.

## 11.1.8.தொலைக்காட்சி ஊடகம்

ஒரு காட்சியைத் தொலைவில் உள்ளவர்களுக்கு வெளிப்படுத்தும் ஊடகமாகத் தொலைக்காட்சி ஊடகம் விளங்குகின்றது. இதன் வரலாறு பதினெட்டாம் நூற்றாண்டு முதல் தொடங்குகின்றது. அயர்லாந்த நாட்டைச் சார்ந்த ‘மே’, ஜெர்மன் நாட்டைச் சார்ந்த ‘பால் நிக்காவ்’, ஹென்ரிச், வில்லியம் குரூக்கஸ், மாக்ஸ் டீக்மான், தாம்சன்,காம்பெல் கிவிண்டன் போன்ற பலரின் முயற்சியால் தொலைக்காட்சிக் கண்டுபிடிப்பிற்கான வழி முறைகள் கண்டறியப்பெற்றன. ரஷ்யாவைச் சார்ந்த விளாடிமிர் சொர்க்கின் என்பவர் கண்டுபிடித்த ‘பிக்சர் டியுப்’ (Picture tube) தொலைக்காட்சி வரலாற்றில் முக்கியமான கண்டுபிடிப்பாகக் கருதப்படுகிறது.

1924 ஆம் ஆண்டு லண்டனில் ஜான் லோகி பெயர்டு என்பவர் தொலைக்காட்சியில் பிம்பத்தைத் தெரியவகை செய்தார். இதன் வளர்ச்சியாக தொலைக்காட்சி ஒலிபரப்பு 1926 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது கருப்பு வெள்ளை தொலைக்காட்சியாக அமைந்தது. 1960 ஆம் ஆண்டு வண்ணத் தொலைகாட்சி உருவானது.

இந்தியாவில் 1965 ஆம் ஆண்டு டெல்லி தொலைக்காட்சி நிலையம் உருவானது. 1972 ஆம் ஆண்டு பம்பாய் தொலைக்காட்சி நிலையம் உருவானது. 1975 ஆம் ஆண்டு சென்னையில்

தொலைக்காட்சி நிலையம் துவங்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் தொலைக்காட்சி அமைப்பு தூர்தர்ஷன் என்ற பெயரில் தனி நிறுவனமாகச் செயல்படத் துவங்கியது. 1982 ஆம் ஆண்டு இந்தியாவில் வண்ணத் தொலைக்காட்சி ஒலிபரப்பு தொடங்கப்பட்டது.

இவ்வாறு வளர்ந்த தொலைக்காட்சி ஊடகம் தற்போது உலக அளவிலான ஒலிபரப்புகளை வீட்டில் இருந்துப் பார்க்கும் வண்ணம் பல தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களைக் கொண்டு விளங்குகிறது. செயற்கைக்கோள் வழியாகத் தற்போது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. தனியார் தொலைக்காட்சிகள் பலவும் தற்போது நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றன.

## 11.1.9.திரைப்பட ஊடகம்

திரைப்படம் மக்கள் ஊடகமாக உள்ளது. மிகப்பெரும் வலிமை வாய்ந்த ஊடகமாக திரைப்படம் விளங்குகிறது. இதன் முந்தையக் காட்சிப் படுத்தல் வடிவங்களான நாடகம், கூத்து போன்றவற்றில் உள்ள பல இடைஞ்சல்கள் இதில் இல்லை. ஒருமுறை படமாக்கப்பட்ட காட்சி அக்கால அளவு, முயற்சி ஆகியவற்றோடு மீண்டும் பல முறை காட்சிப்படுத்தக் கூடியநிலை திரைப்படத்திற்கு அமைந்தது. கி.மு. 500 ஆம் ஆண்டு முதலே திரைப்பட ஊடகம் தோன்றியிருக்க வாய்ப்புள்ளது. சீனத்தத்துவஞானி இருட்டறைக்குள் தலைகீழாக பிம்பம் தெரிவதைச் செயல்படுத்திக் காட்டியுள்ளார்.

தாமஸ் ஆல்வா எடிசனின் கைனெட்டாஸ்கோப் என்ற கருவி திரைப்பட ஊடகம் தொடங்கப்பட உதவியது. இவரே அசையும் திரைப்படத்தைக் காட்டும் கருவி, படத்துடன் ஒலியை இணைக்கும்முறைமை போன்றவற்றையும் கண்டறிந்தார். இவரின்

தொடர் கண்டுபிடிப்பான கினிடோஸ்கோப் திரைத்துறை வளர்ச்சிக்குக் காரணமாகியது.

இதனைத் தொடர்ந்து, ஜுப்ராக்சோஸ்கோப், முயூடோஸ்கோப் ஆகியனவும் திரைப்படத்துறை வளரக் காரணமாக அமைந்தன. 1865 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச்சார்ந்த லூமியர் சகோதரர்கள் சினிமாட்டோகிராப் என்ற கருவி கொண்டு திரைப்படத்தை வெளியிட்டனர்.

திரைப்பட வளர்ச்சியின் முதல் கட்டம் என்பது ஊமைப்படங்களே ஆகும். ஒலி, ஒளி அற்ற படங்கள்தான் முதலில் திரைக்கு வந்தன. பின்பு பேச்சு மொழி அற்ற பின்னணி இசையுடன்கூடிய படங்கள் திரைக்கு வந்தன. சார்லி சாப்ளினின் படங்கள் இவ்வகையில் குறிக்கத்தக்கன.

இந்தியாவில் பிரான்ஸ் நாட்டின் ‘டுபான்ட்’ என்பவர் ‘லைப் ஆப் கிறிஸ்ட்’ என்ற படத்தை மும்பையில் திரையிட்டார். இவர் இந்தியாவின் பல நகரங்களிலும் இத்திரைப்படத்தைத் திரையிட்டார். இவரிடமிருந்து திருச்சியைச் சார்ந்த சாமிக்கண்ணு வின்சென்ட் என்பவர் இத்திரைப்படத்தையும், ஒளிபரப்புக் கருவியையும் விலைக்கு வாங்கி இவர் பல இடங்களில் இப்படத்தைத் திரையிட்டார்.

1897 ஆம் ஆண்டு எம். எட்வர்ட் என்பவர் சென்னையில் முதல் நகரும் படம் திரையிடப்பெற்றது. இந்தியாவின் முதல் திரையரங்கு கொல்கத்தாவில் என்பின்ஸ்டன் பிக்சர் பேலஸ் என்ற பெயரில் உருவாக்கப்பெற்றது. சென்னையில் எலக்ட்ரிக் திரையரங்கு 1900 ஆம் ஆண்டு உருவாக்கப்பெற்றது.

1913 ஆம் ஆண்டு ‘தாதா சாகிப் பால்கே’, ‘ராஜா அரிச்சந்திரா’ என்ற படத்தைத் தயாரித்தார். 1931 ஆம் ஆண்டு காளிதாஸ் என்ற பேசும்படம் சென்னையில் திரையிடப்பெற்றது.

இவ்வாறு உருவான திரைப்பட ஊடகம் இன்று தொலைக்காட்சி, இணையம் என்ற ஊடகங்களிலும் முக்கிய இடம் பெற்றுவருகிறது.



## 11.1.10.தொலைபேசி ஊடகம்

வானொலி, தொலைக்காட்சி ஆகியன ஒருவழித் தகவல் பரிமாற்றத்திற்கே வழி வகுத்தன. தகவல் பரிமாற்றத்தின் இருவழித் தொடர்புகொள்ளலை தொலைபேசி ஊடகம் தந்தது. 1876 ஆம் ஆண்டில் அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் என்ற அமெரிக்கர் கம்பிவழியாக இருமுனை தொடர்பை ஏற்படுத்திய தொலைபேசிக் கருவியை செயல்முறையாக இயக்கிக் காட்டினார்.

தொடர்ந்து இன்று செல்பேசி உலகத் தொடர்பியலுக்கு முக்கியமான கருவியாக ஆகிவிட்டது. 1973 ஆம் ஆண்டு கம்பிவழியின்றி அலைவரிசை வழியாகப் பேசும் மொபைல்ஃபோன் என்றழைக்கப்படும் செல்பேசி மோன்ட்ரோலா என்ற நிறுவனம் உருவாக்கியது.

1992 ஆம் ஆண்டு, ஐபிஎம் நிறுவனம் வெளியிட்ட ‘சைமன் பர்சனல் கம்யூனிக்கேட்டார்’ என்ற பெயரில், முதன்முதலில் தொடுதிரையுடன் கூடிய அலைபேசியொன்று ‘காம்டெக்ஸ் கம்ப்யூட்டர் அண்ட் டெக்னாலஜி டிரேட்ஷோ’வில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வகையில் திறன்பேசியாக இன்று வளர்ந்து இணைய வசதியுடன், ஒலி ஒளி வசதியுடன், நேரடியாகத் திரைவழி கண்டு பேசும் வசதியுடன், தேடுதல் வசதியுடன் திகழ்ந்துவருகிறது. கைக்குள் உலகினை அடக்கி வாழும் நடைமுறையை இத்திறன்பேசிகள் தற்போது சாத்தியப்படுத்திவிட்டன.

இந்தத் தொழில்நுட்பத்தின் அடிப்படையில், இதன் தொடர்ச்சியாக தொலை அச்சு, தொலைநகல் போன்ற கருவிகளும் உருவாக்கப்பட்டன.

## 11.1.11.கணினி ஊடகம்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தொடர்பு இணைப்பாக இணையம் மக்களுக்கு பெரும் வாய்ப்பாகக் கிடைத்துள்ளது. இந்த இணையத்திற்கான இணைப்பாக கணினிகள் விளங்குகின்றன. கணினி மிகச் சிறந்த அறிவியல் கண்டுபிடிப்பாக விளங்குகிறது. பதினாறாம் நூற்றாண்டு முதல் கணினி கண்டுபிடிப்பிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன. ‘பாஸ்கல்’, (1642), ‘சார்லஸ் பாபேஜ்’ (1833) போன்றோர் தம் முயற்சிகள் கணினி உருவாகக் காரணமாகின. மார்க்-1 (1944) கணினி, எனியாக் (1945) கணினி போன்றனவும் கணினி வளர்ச்சியின் அளவீடுகள் ஆகும்.

செய்திகளை உள்ளீடவும், செய்திகளை அச்சிடவும் கொண்ட முழு அமைப்பாக கணினி விளங்குகிறது. இது மட்டும் இல்லாமல் ஒரு கணினியை மற்றொரு கணினியுடன் இணைக்கும் நடைமுறையும் கணினி தொழில் நுட்ப வளர்ச்சியில் முக்கிய நிலைப்பாடாக விளங்கியது. இன்றைக்கு அச்சு எந்திரப்பணிகள் கணினி வரவால் எளிமையாகிவிட்டன. பிரதேச மொழிகளுக்கு இடம் தந்து கணினி தன் வளர்ச்சியை மேம்படுத்திக் கொண்டது. கணினி இல்லாத வீடில்லை என்ற அளவிற்குக் கணினியின் வளர்ச்சி உச்சத்தில் உள்ளது.

அனைத்துத் துறைகளிலும் கணினியின் ஆதிக்கம் உள்ளது. கணினியின்றி எதுவும் இல்லை என்னும் அளவிற்கு கணினியின் தேவையைத் தற்போது உலகம் உணர்ந்துள்ளது. கணினி தகவல் தொடர்பியல் துறையிலும் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. மக்களுக்குத் தகவல்களை ஒலி, ஒளி வடிவில் வழங்கவும், தகுந்த தலைப்புகளைத் தரவும், நிகழ்வுகளை ஒருங்கிணைக்கவும் கணினிகள் பயன்படுகின்றன.

### 11.1.12.இணையம்

கணினி, தொலைபேசித் தொடர்பு இவை இணைந்ததே இணையம் ஆகும். தற்போது உருவாக்கப்படும் கணினிகளில், வளர்ந்துள்ள கணினி தொழில்நுட்பத்தால், தொலைபேசி கம்பி வடத்தையும் இணைத்துக் கொள்ள முடிகிறது. இதனால் கிடைத்த அரியதொரு பயன்பாடே இணையம் என்பதாகும்.

இது 1960 ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புத் துறைக்காக உருவாக்கப்பட்டதாகும். 1990 ஆம் ஆண்டளவில் இந்தத் தொழில்நுட்பம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அறிமுகம் செய்யப்பட்டது. அடுத்த பத்தாண்டுகளில் தொலைத்தொடர்புத் துறையில் மட்டுமல்லாது பல்வேறு துறைகளின் அடிப்படையையே மாற்றியமைத்து விட்டது இந்தத் தொழில்நுட்பம்.

சிங்கப்பூரைச் சார்ந்த நா. கோவிந்தசாமி என்பவரால் இணையத்தில் தமிழ் நுழைவு பெற்றது. தற்போது இணையம் மக்கள் தகவல் தொடர்பியல் அழிக்கமுடியாத நிலையான இடத்தைப் பெற்றுள்ளது.

இவ்வாறு ஊடகவியலில் பல்துறை கண்டுபிடிப்புகள் அமைந்து ஊடகவியலைப் பெரிய வளர்ச்சி பெறவைத்துள்ளன.

## 11.2. ஊடக சாதனங்களின் வகைகள்

ஊடகக் கருவிகள் அதன் வெளிப்பாட்டுத் தன்மைக்கு ஏற்ப ஐந்து பகுப்புகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. அவை பின்வருமாறு.

1. மரபுசார் ஊடக சாதனங்கள்
2. அச்சு ஊடக சாதனங்கள்
3. அலை ஊடக சாதனங்கள்
4. காட்சி ஊடக சாதனங்கள்

5. மின்னனு ஊடக சாதனங்கள்

என்பனவாகும். இவை பற்றிய சிறு விளக்கங்களையும், இவற்றில் அடங்கிய பகுப்புகளும் பின்வருமாறு.

## 11.2.1.மரபு சார் ஊடக சாதன வகைகள்

ஒரு நாட்டின் மரபு வழி மக்கள் தொடர்பு முறைகள் தொன்று தொட்டு இருந்துவந்துள்ளன. அவற்றின் வழி செய்திகள் பரப்பப்பட்டுள்ளன. இன்னும்கூட அவை நடைமுறையில் உள்ளன.

தமிழகத்திற்கான மரபு சார் ஊடக முறைகளாக

1. முரசு அறைதல்
2. பறை அறைதல்
3. வில்லுப்பாட்டு
4. பொம்மலாட்டம்
5. தெருக்கூத்து
6. தோல்பாவைக் கூத்து
7. மரப்பாவைக் கூத்து
8. கோலட்டம்
9. கும்மி
10. நாட்டுப்புற விளையாட்டுகள்
11. கிராமிய நடனம் ஆடுதல்
12. நாட்டுப்புறப் பாடல்கள் பாடுதல்
13. மேடை நாடகம் நடித்தல்
14. நையாண்டி மேளம்
15. பொய்க்கால் குதிரை ஆட்டம்
16. குறவன் குறத்தி ஆட்டம்
17. கரகாட்டம்
18. கழைக் கூத்து

ஆகியன தொடர்ந்து இருந்துவருகின்றன. இக்காலத்திலும் கிராமப் பஞ்சாயத்து கூட்டம் பறைஅறைந்து தெரிவிக்கப்படும் நடைமுறை உள்ளது. மேலும் மேற்காட்டி அனைத்து மரபுசார் கலை வடிவங்களும் மக்களிடம் செய்திகளைச் சேகரிக்க தற்போது பயன்பாட்டில் உள்ளன. எனவே மரபுசார் ஊடகக் கருவிகள் நிரம்பிய பகுதியாகத் தமிழகம் விளங்கியுள்ளது என்பதை மறுக்க இயலாது.

### 11.2.2.அச்சு ஊடக சாதன வகைகள்

அச்சகத்தில் இருந்து வெளிவருவன அனைத்தும் அச்சு ஊடக சாதன வெளிப்பாட்டு ஆவணங்களாக விளங்குகின்றன.

1. சிறு பிரசுரங்கள்
2. சுவரொட்டிகள்
3. நாளிதழ்கள்
4. வார இதழ்கள்
5. சிறப்பு இதழ்கள்
6. மாத இதழ்கள்
7. ஆண்டு இதழ்கள்
8. காலாண்டு இதழ்கள்
9. அரையாண்டு இதழ்கள்
10. திங்கள் இருமுறை இதழ்கள்
11. வாரம் இருமுறை இதழ்கள்
12. காலை இதழ்கள்
13. மாலை இதழ்கள்
14. சிற்றிதழ்கள்
15. இலக்கிய இதழ்கள்
16. துப்பறியும் இதழ்கள்
17. மகளிர் இதழ்கள்
18. சிறுவர் இதழ்கள்
19. விவசாய இதழ்கள்

குறிப்பு

20. மருத்துவ இதழ்கள்
21. ஆன்மீக இதழ்கள்
22. ஜோதிட இதழ்கள்
23. பஞ்சாங்கங்கள்
24. நிறுவன வெளியீடுகள்
25. அரசிதழ்கள்
26. அறிக்கைகள்
27. நீதிமன்ற ஆணைகள்
28. அலவலக ஆணைகள்
29. செய்தி மடல்கள்
30. வணிக இதழ்கள்
31. வேலை வாய்ப்பு இதழ்கள்
32. கணினி உலக இதழ்கள்
33. திரை இதழ்கள்

போன்ற வகைகளில் அச்சக வெளியீடுகள் வெளிவந்து மக்களுக்குச் செய்திகளைப் பரப்பி வருகின்றன.

### 11.2.3.அலை ஊடக சாதனங்கள்

அலைவழியான தகவல் தொடர்புகளை ஏற்படுத்தும் வானொலி, தொலைக்காட்சி, செல்பேசி போன்றவற்றை அடிப்படையாக வைத்துச் செயல்படும் ஊடக சாதனங்கள் அலை ஊடக சாதனங்கள் எனப்படுகின்றன. இவையும் பல்வேறு வகைப்படுகின்றன.

1) வானொலி நிகழ்ச்சிகள்
2) பண்பலை நிகழ்ச்சிகள்
3) சிற்றலை நிகழ்ச்சிகள்
4) நேரடி வானொலி நிகழ்ச்சிகள்
5) இணைய வானொலி நிகழ்ச்சிகள்
6) செயற்கைக்கோள் வானொலி நிகழ்ச்சிகள்

7) வாட்ஸ் அப்
8) டிவிட்டர்
9) குறுஞ்செய்தி
10) முகநூல்
11) இன்ஸ்டாகிராம்

போன்ற பல அமைப்புகள் அலைவழி செய்திகளைப் பரப்பிட உதவுகின்றன.

### 11.2.4.காட்சி ஊடக சாதனங்கள்

காட்சி வழியாக செய்திகளைப் பரப்பும் சாதனங்கள் காட்சி ஊடக சாதனங்கள் எனப்படுகின்றன. அவை பின்வரும் வகைப்பாடுகளை உடையனவாகும்.

1) தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
2) தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
3) தொலைக்காட்சி செய்திகள்
4) தொலைக்காட்சி ஆவணப் படங்கள்
5) குறும் படங்கள்
6) நேரலை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
7) காணொளிகள், காணொளி படப்பிடிப்பு கருவிகள்
8) திரைப்படங்கள்
9) பல்வேறுபட்ட துறை சார்ந்த திரைப்படங்கள்
10) புகைப்படங்கள், புகைப்படக்கருவிகள்
11) ஸ்கைப்
12) காட்சி வழி தொலைபேசி உரையாடல்
13) வாட்ஸ் அப்
14) முகநூல்

போன்றன காட்சி வழி ஊடக சாதன வகைகளாகும்.

குறிப்பு

## 11.2.5.மின்னனு ஊடக சாதனங்கள்

பெரும்பாலும் கணினி, இணையம் சார்ந்த சாதனங்கள் அனைத்தும் மின்னணு சாதனங்கள் என்று கொள்ளத்தக்கன. இவையும் பல்வகைப்படும்.

1. உள்வட்ட கணினித் தொடர்பு
2. வெளிப்புற கணினித் தொடர்பு
3. இணையத் தொடர்பு
4. சமூக வலைதளங்கள்
5. வலைப் பூக்கள்
6. மின்னஞ்சல்
7. வாட்ஸ்அப்
8. முகநூல்
9. பேச்சு மொழி பதிவும் பரிமாற்றமும்
10. விளம்பரங்கள்
11. மென்பொருள்கள்
12. தேடு பொறிகள்
13. நில அமைப்புகள்
14. பாதை தெரிதல்
15. அகராதிகள்
16. மின்நூல்கள்
17. மின் ஆவணங்கள்
18. படங்கள்
19. காணொளிகள்
20. ஒலி வடிவங்கள்

போன்றன மின்னணு சாதனங்கள் ஊடக பரிமாற்றத்திற்குப் பயன்படுகின்றன. இவைதவிர தந்தி வழியும் செய்திகள் வழங்கப்பெற்றன. தற்போது அம்முறை மக்கள் பயன்பாட்டில் இல்லை. ஆனால் தந்தி முறை மரபு சார் ஊடகங்களுக்கும் நவீன

ஊடகங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் மிகச் சிறந்த மக்கள் தொடர்பு சாதனமாக இருந்துள்ளது.



தொலைநகலி என்பது பாக்ஸ் எனப்படும் செய்தி பரிமாற்ற முறையாகும். தொலைபேசி ஊடக வழியான மின்னச்சு வழி வெளிப்பாட்டு முறை தொலைநகலி ஆகின்றது. தற்போது இது வழக்கில் குறைந்துள்ளது. ஆவணங்கள் மின்படியாக மாற்றம்பெற்று மின்னஞ்சல் வழி அனுப்பப் பெறுவதால் இம்முறை தற்போது அதிக பயன்பாட்டில் இல்லை.

இவ்வாறு ஊடக சாதனங்களின் வகைகள் பாகுபடுத்தப்பெறுகின்றன.

**தற்சோதனை வினாக்கள்**

**குறுவினாக்கள்**

1. விளம்பரம் என்பதன் சொற்பொருள் விளக்கம் தருக.
2. இந்திய அளவில் செயல்படும் இரு செய்தி நிறுவனங்களைக் குறிப்பிடுக.
3. உலக அளவில் செயல்படும் இரு செய்தி நிறுவனங்களைக்குறிப்பிடுக.
4. ஊடகச் சாதனங்களின் வகைகள் நான்கினைத் தருக.

**நெடு வினாக்கள்**

1. பத்திரிக்கைச் சட்டங்கள் குறித்து எழுதுக.
2. பதிப்புரிமைச் சட்டத்தின் இன்றியமையாமையை விளக்குக.
3. ஊடக வகைகள் பற்றி எழுதுக.

# பிரிவு 4

# கணினியியல், இணையம்

## கூறு. 12. தொலைக்காட்சி, செயற்கைக்கோள், கணினி, இணையம், வலைதளம், முகநூல், மின்னஞ்சல், மின்னணு இதழ்

குறிப்பு

### நோக்கம்


தற்காலத்தில் மிக வலிமை வாய்ந்த மக்கள் தகவல் தொடர்பு சாதனமாக இணையமும் அதனைச் சார்ந்த செயலிகளும் விளங்கிவருகின்றன. இணையத்தைப் பயன்படுத்துவது, இணையத்தில் எழுதுவது போன்ற செயல்பாடுகளுக்கு ஊக்கம் அளிக்கும் நிலையில் இப்பாடம் இணையத்தில் செயல்பட வழிகாட்டுகிறது.

### 12.நவீன கால ஊடக வளர்ச்சி

இக்கால உலகம் தகவல் தொடர்பு உலகம் எனப்படுகிறது. தகவல்களே இவ்வுலகை ஆட்சி புரிகின்றன. இந்நிலையில் தகவல் மிகவிரைவாக பெறவும்,அனுப்பவும் வசதி வந்தாயிற்று. சிங்கப்பூருக்கு ஒரு செய்தியை வான்வழி அனுப்ப ஒருநாள் ஆகும் என்ற நிலை மாறி இரண்டு நொடிகளில் செய்திகள் சென்று சேரும் நிலை வந்துவிட்டது. இதற்கு நவீன சாதனங்களின் கண்டுபிடிப்பும் பயன்பாடும் காரணம். அவை பற்றிய செய்திகள் இங்குத் தரப்பெறுகினற்ன.

## 12.1.செயற்கைக்கோள் தொலைக்காட்சி

குறிப்பு




தொலைக்காட்சிகள் பெரும்பாலும் தரையில் இருந்து, ஒளிபரப்புகளை நிகழ்த்தி வந்த நிலையில் செயற்கைக்கோள்களை விண்ணிற்கு அனுப்பி அவற்றின் வழியாக செய்திகளை, நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் முறை செயற்கைக்கோள் தொலைக்காட்சி ஒளிபரப்புமுறை எனப்படுகிறது. செயற்கைக்கோள் என்பது விண்வட்டப் பாதையில் சுற்றிவரும்படியாக இயந்திரக் கூட்டுக்கலவையால் செய்யப்பட்ட பொருளாகும். இதன்வழி விரைவாக, எளிதாக, நேரடியாகத் தகவல்களைப் பெற இயலும்.

செயற்கைக்கோள் தொலைக்காட்சியின் முக்கியமான பணி சந்தாதாரர்களுக்கு மட்டும் நிகழ்ச்சிகள் தெரியும்படியும், மற்றவர்கள் இணையாத அளவும் செய்யப்படவேண்டும். இவ்வகையில் இவ்வொளிபரப்பு கட்டமைக்கப்பெற்றுள்ளது. இது டிடிஎச் எனப்படுகிறது. அதாவது டைரக்ட் டு ஹோம் அதாவது நேரடியாக வீட்டுக்கு என்ற நிலையில் இத்தொலைக்காட்சிகள் செயற்கைக்கோளில் இருந்து வீட்டுக்குச் செய்திகளை அனுப்புகின்றன.

சன் குழுமம், ஏர்டெல் குழுமம். தூர்தர்ஷன் குழுமம் போன்றன இச்சேவையை மக்களுக்கு வழங்கி வருகின்றன.

இச்செயற்கைக்கோள் தொலைக்காட்சி என்பது இருவகைப்படும். அவை

1. நிலையான சேவை செயற்கைக்கோள்.
2. நேரடி ஒளிபரப்பு செயற்கைக்கோள்

## 12.1.1.நிலையான சேவை செயற்கைக்கோள்

நிலையான சேவை செயற்கைக்கோள்கள் என்பன தொலைநிலைக்கல்வி நிலைய ஒளிபரப்புகள், கல்வி சார் ஒளிபரப்புகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில் இருந்துப் பின்வரும் செயற்கைக்கோள்கள் ஏவப்பெற்றுள்ளன.

1. ஆரியபட்டா -19 ஏப்ரல் 1975

2. பாசுக்கரா (பாஸ்கரா -ஐ)-07 சூன் 1979

3. ரோகிணி- 10 ஆகஸ்டு 1979

4. ரோகிணி - 18 சூலை 1980

5. ரோகிணி(ஆர்.எசு-டி1) -31 மே 1981

6. ஆப்பிள் (செயற்கைக்கோள்)-19 சூன் 1981

7. பாசுக்கரா (பாஸ்கரா -ஐஐ) - 20 நவம்பர் 1981

8. இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு (இன்சாட்-1ယு)- 10 ஏப்ரல்1982

9. ரோகிணி - 17 ஏப்ரல் 1983

10. இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு (இன்சாட்-1) - 30 ஆகஸ்டு 1983

11. நீட்டித்த ரோகிணி செயற்கைக்கோள் வரிசை - 4 மார்ச்சு 1987

12. இந்திய தொலை உணர்வு செயற்கைக்கோள் - 17 மார்ச்சு 1988

13. நீட்டித்த ரோகிணி செயற்கைக்கோள் வரிசை - 13 சூலை 1988

14. இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு (இன்சாட்-1) - 21 சூலை 1988

15. இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு (இன்சாட்-1) -12 சூன் 1990

16. இந்திய தொலை உணர்வு செயற்கைக்கோள் - 29 ஆகஸ்டு 1991

17. நீட்டித்த ரோகிணி செயற்கைக்கோள் வரிசை - 20 மே 1992

18. இந்திய தேசிய செயற்கைக்கோள் அமைப்பு - 26 பெப்ருவரி 1992

இச்செயற்கைக்கோள்கள் செய்திகள் வழங்குவது, பருவநிலை மாற்றங்களை அறிவிப்பது, கனிம வளங்களைக் காட்டுவது என்பதோடு தகவல் தொடர்பு ஒளிபரப்பிற்கும் இவை பயன்படுத்தப்பட்டன.


### 12.1.2.நேரடி ஒளிபரப்பு செயற்கைக்கோள்

நேரடி ஒளிபரப்பு செயற்கைக்கோள், தொலைக்காட்சி சேவைகளுக்குப் பயன்படுகிறது. தற்போது இவ்வகை

செயற்கைக்கோள்கள் வாடகை அளவில் சேவையை வழங்கி வருகின்றன. இதற்காக தனிப்பட்ட செயற்கைக்கோள்கள் ஏவப்படுகின்றன.



## 12.2.இணையம்



தற்காலத்தில் மிகப் பெரிய தகவல் ஊடகமாக விளங்குவது இணையம் ஆகும். தொலைபேசி இணைப்பினை அடிப்படையாக வைத்து ஒலி அலைகளை பன்முக அலைகளாக மாற்றித் தகவல்களை வழங்குவது இணையம் ஆகும். ஒரு கணினியில் உள்ள தகவல்களை மற்றொரு இடத்தில் உள்ள கணினிக்கு விருப்ப அடிப்படையில் தருவது இணையம் ஆகும். படங்கள், அசைபடங்கள், ஒலிகள், நேரடி நிகழ்ச்சிகள், செய்திகள், படைப்புகள் என எல்லாவற்றையும் எண்வழியில் கொணர்ந்து அதனை வெளியிடும் நிலையில் இணையம் விளங்குகிறது.

இது இண்டர் நேஷனல் நெட் ஒர்க் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகிறது. அதன் சுருக்கமாக இண்டர்நெட் என்றும் இது குறிக்கப்படுகிறது.

## 12.2.1.வலை தளம்

இணையம் தொடர்பினை வழங்கினாலும் அத்தொடர்புகளை இணையதளம் வாயிலாகத்தான் காண இயலும். இணைய தளம் கணினியில் தெரியும் முதல் பக்கமாக அமையலாம். இதனுள் பல வலை பக்கங்கள், பல் ஊடக (காட்சி, ஒலி,ஒளி) உள்ளடக்கம் அமைந்திருக்கலாம். இதற்கு ஒரு தலைப்பு, டொமைன் ஆகியன தேவை. www- (world wide web ) என்பதைத் தொடக்கமாக எல்லா வலை(இணைய)தளங்களும் கொண்டு அமையும். அதன்பின் அத்தளத்தின் தலைப்பு அல்லது டொமைன் அதன்பிறகு முற்றுப்புள்ளி, அதன்வகைப்பாடு ஆகியன குறிக்கப்படும். எடுத்துக்காட்டுக்கு www.dailythanthi.com என்பதைக் குறிப்பிடலாம். இதில் வேர்ல்டு வைட் வெப் என்பது முதல் பகுதியாகவும் டெய்லி தந்தி என்பது நிறுவனத்தின் பெயராகவும், . என்பது முற்றுப்புள்ளியாகவும், காம் என்பது வியாபாரம் சார்ந்தது என்பதும் அறியத்தக்கது.

.காம் என்பது மாறும் தன்மையது. கல்வி நிறுவனமாக இருந்தால் இது இடியு (Edu) எனவாகவும், அமைப்பாக இருந்தால் ஓஆர்ஜி (Org) எனவாகவும் அமையும். இதுபோன்று இன்னும் பல வகைகள் உள்ளன.

## 12.2.2.முகநூல்

முகநூல் என்ற சமூக வலையமைப்பு 2004 ஆம் ஆண்டு அறிமுகம் ஆனது. இதனை ஆங்கிலத்தில் பேஸ் புக் என்று அழைப்பர். நண்பர்களை ஒருங்கிணைக்கும் வலையமைப்பாக இது

பயன்பட்டுவருகிறது. மார்க் சக்கர்பர்க் என்ற ஹார்வர்ட் பல்கலைக் கழக மாணவரால் தொடங்கப்பட்ட இவ்வமைப்பு பரவலாகத் தற்போது உலகம் முழுவதும் பயன்படுத்தப்பெற்று வருகிறது. நண்பர்கள் ஒன்று கூடுகையில், அவர்களின் நண்பர்களும் தொடர்பு பெற பெரிய சமூக வலையமைப்பாக இது வளர்ந்து வருகிறது. இதன்வழி நேரடி ஒளிபரப்புகளையும் ஒலிபரப்ப இயலும்.



குறிப்பு

இந்தியாவில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் முகநூலில் பங்கேற்க முடியும் என்ற கட்டுப்பாடு உள்ளது. முகநூலில் இணைய விரும்புபவர்கள், முதல் முகநூலில் ஒரு கணக்கினை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதன்பின் மற்றவர்கள் இணைய வாய்ப்பினையும் வழங்கி அவர்களையும் இணைத்துக் கொள்ளலாம்.

இவ்வமைப்புகள் வழி பிறந்தநாள் வாழ்த்துகள், நண்பரான நாளின் நினைவுகள், சென்ற ஆண்டுகளில் நடந்து நிகழ்வுகளின் மீள்பதிவுகள் போன்றனவற்றையும் வெளியிட இயலும். மேலும் இணையவழி உரையாடலையும் செய்ய இயலும்.

நண்பர்களாக இருக்க விருப்பமில்லாதவர்களை விலக்கவும் வாய்ப்பு உண்டு.

### 12.2.3.மின்னஞ்சல்



இணைய வழியாக கடிதப் பரிமாற்றம் செய்யும் முறை மின்னஞ்சல் எனப்படுகிறது. உலகின் எந்த மூளைக்கும், மிக விரைவாக செய்தியை அனுப்பவும், அனுப்பிய செய்திக்குப் பதில் பெறவும் மின்னஞ்சல் வழி முடியும். இதனை இமெயில் என்று ஆங்கிலத்தில் அழைப்பர்.

குறிப்பு

மின்னஞ்சல் பயன்படுத்துபவருக்கு முதலில் கணக்கு துவங்கப்பட வேண்டும். பின்பு அவ்வஞ்சல் பெறுவோரின் முகவரிக்கு அதனை அனுப்ப வேண்டும். இவ்வாறு அனுப்புகையில் பல மின்னஞ்சல் முகவரிகளுக்குச் செய்தியை, ஒரே நேரத்தில் அனுப்ப இயலும். கடிதம் எழுதும் முறையில் அனுப்புபவர் முகவரி, பெறுபவர் முகவரி இருப்பதைப் போலவே இம்முறை நடைமுறையில் உள்ளது. இவ்வஞ்சல் செலவு இல்லாதது. எத்தனை முறை வேண்டுமானாலும் அனுப்பலாம். படங்கள், ஒலிக்கோவைகள், குறும்படக் கோவைகள் என எல்லாவற்றையும் மின்னஞ்சல்வழி அனுப்ப இயலும். ஒருவர் அனுப்பிய அஞ்சலை மற்றொருவருக்கு அப்படியே அனுப்பும் வசதியும் உள்ளது.

யாகூ, ஜிமெயில், ஹாட்மெயில் போன்ற நிறுவனங்கள் மின்னஞ்சல் சேவையை இலவசமாக வழங்கி வருகின்றன.

இவ்வஞ்சல் முறை வழியாகவே இன்றைக்கு ஊடகங்கள் பெரும்பாலும் செயல்படுகின்றன.

### 12.2.4.மின்னணு இதழ்கள்

இணைய வழியாகவும் இதழ்கள் நடத்தப்படுகின்றன. இவை மின்னிதழ்கள், இணைய இதழ்கள், இ. ஜெர்னல்ஸ் என்றும் இவை அழைக்கப்படுகின்றன. தமிழ் மொழியில் பல இதழ்கள் இணையம் வழியாக நடத்தப்படுகின்றன. இணையத்தில் உள்ள இதழ்களைப் பெரும்பாலும் கட்டணமின்றி வாசிக்க இயலும். சில பிரபல இதழ்கள் இணையத்திலும் வெளிவந்து அவற்றினைப் படிக்கக் கட்டணம் பெறுகின்றன. இணையத்தில் உள்ள இதழ்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவை

1. இணையத்தில் மட்டும் வெளிவரும் இதழ்கள்
2. அச்சுவடிவிலும், இணையத்திலும் வெளிவரும் இதழ்கள்.


என்பனவாகும்.



## 12.2.4.1. இணையத்தில் மட்டும் வெளிவரும் இதழ்களும் அவற்றின் தனித்தன்மைகளும்.

குறிப்பு








இணையத்தில் வெளிவரும் இதழ்களை இணைய இணைப்பு இருக்கும் நிலையில் மட்டுமே வாசிக்க இயலும். இவற்றை அச்சுவடிவிலோ வேறு வடிவிலோ வாசிக்க இயலாது. இணைய இணைப்பின் உதவியில் அச்சடிப்புச் செய்து வாசிக்க இயலும்.

வண்ணங்களுடன், பகுப்புகளுடன், தகுந்த தலைப்புகளுடன் இணைய இதழ்களில் படைப்புகள் வெளிவருகின்றன. இப்படைப்புகளைப் படைப்பு அடிப்படையிலும், ஆசிரியர்

அடிப்படையிலும் பகுத்துத் தொகுத்துக் காண இயலும். பழைய இதழ்களையும் படிக்க இயலும். படைப்புகள் அனைத்தும் சேமிப்பு மையத்தில் இருக்கும்.

இணையப் பரப்பில் அடுத்து முக்கியமாகக் கருதத்தக்கது இணைய இதழ்கள் ஆகும். இணையத்தில் மட்டுமே இடம் பெறும் இதழ்களை இணைய இதழ்கள் என்று குறிப்பிடவேண்டும். பிரபல தமிழ் நாளிதழ்கள், தமிழ் வார இதழ்கள் அனைத்தும் இணைய முகவரியைப் பெற்றுள்ளன. இருப்பினும் இவற்றை இணைய இதழ்கள் எனக் கருதமுடியாது. இணையத்தில் மட்டுமே செய்திகளைத் தருகின்ற இதழ்களே இணைய இதழ்கள் எனப்படும். அவ்வகையில் குறிக்கத்தக்க தமிழ் இணைய இதழ்களாகக் கருதத்தக்கனவாக திண்ணை, பதிவுகள், முத்துக்கமலம், வரலாறு.காம், வார்ப்பு, நிலாச்சாரல், தமிழோவியம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பதிவுகள், நிலாச்சாரல், தமிழோவியம் போன்றன வெளிநாட்டுத் தமிழர்கள் நடத்தும் இணைய இதழ்கள் ஆகும். இவற்றுள் திண்ணை இதழ் மிகச் சிறப்பான இடத்தை வகித்து வருகின்றது. இது வாரம் ஒருமுறை தன் பக்கத்தை மாற்றி அமைக்கிறது. பல இலக்கியச் செய்திகள் இதில் இடம் பெறுகின்றன. வார்ப்பு இதழ் கவிதைகளை மட்டுமே தாங்கி வரும் இதழாகும். இதனுடன் கவிதை நூல்களின் விமர்சனங்கள், மற்றும் நிகழ்வுகளின் அறிவிப்புகள் போன்றனவும் இவ்விதழில் இடம் பெறுகின்றன. இது தவிர இன்னும் பல இணைய இதழ்கள் தமிழ் இணையப் பரப்பில் உள்ளன.

வரலாறு .காம் என்ற இதழ் திருச்சி அறிஞர் கலைக்கோவன் அவர்களின் மேற்பார்வையில் நடத்தப் பெற்றுவருகின்றது. இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வு மையத்தின் பல செய்திகளை, அரிய புகைப்படங்களுடன் தாங்கி வரும் இணைய இதழ் இதுவாகும். பழைய இதழ்களைக் காணும் வசதியும் இதில் உள்ளது. எனவே இது நல்லதொரு ஆவணமாக விளங்குகின்றது.

ஏறக்குறைய ஆயிரம் செய்திகளைத் தொட்டுவிடும் தூரத்தில் இது வளர்ந்து வருகிறது. இது ஒரு மாத இதழாகும்.

செய்திகளை மட்டும் வழங்கும் தமிழ் இணைய இதழ்களும் உள்ளன. தட்ஸ் தமிழ்.காம், எம்.எஸ்.என் வெப்துனியா.காம், யாஹு தமிழ்.காம் போன்ற தளங்கள் இவ்வகையில் குறிக்கத்தக்கன. இந்நிறுவனங்கள் உலக அளவில் பெருமை பெற்றனவாகும். இவை தமிழிலும் தளங்கள் வைத்திருப்பது தமிழின் இணைய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாக உள்ளது. இவற்றின் வழி உலகத்தின் உடனடிச் செய்திகளை உடனே தெரிந்து கொள்ளமுடிகின்றது.

### 12.2.4.2.அச்சு வடிவிலும், இணையத்திலும் வெளிவரும் இதழ்கள்

தமிழில் வெளிவரும் பிரபல இதழ்களான தினமலர், தினமணி, தினபூமி, விடுதலை, தினத்தந்தி, தினகரன், மாலைமலர், தமிழ் இந்து போன்ற நாளிதழ்கள் அச்சுவடிவிலும் வருகின்றன. இதுவல்லாமல் இ. பேப்பர் என்ற நிலையில் இணைய நாளிதழாகவும் படிக்கக் கிடைக்கின்றன. இவற்றில் தினத்தந்தி, தமிழ் இந்து போன்ற கட்டணம் செலுத்திப் படிக்க வேண்டியனவாக உள்ளன. காலையில் ஏழு மணிக்குத்தான் ஊருக்குள் செய்தித்தாள் வரும் என்ற நிலையில் காலை மூன்று மணிக்கே செய்தித்தாளை இணையத்தில் காண இயலும். ஆனந்தவிகடன், குமுதம் போன்ற இதழ்களும் கட்டண அடிப்படையில் இணையத்தில் வாசிக்கக் கிடைக்கின்றன.

# கூறு.13

## கைபேசி – வாட்ஸ்அப், குறுஞ்செயலி – பிற சாதனங்கள்

குறிப்பு

### 13.1.கைபேசி

கணினி என்பது ஒரு கட்ட வளர்ச்சியாகும். இதன் அடுத்த கட்ட வளர்ச்சி இணையம் ஆகும். இதன் அடுத்த கட்ட வளர்ச்சி கைபேசி வழி தொடர்பாக உள்ளது. கைபேசி என்பது இணையத்துடன் இணைந்த சிறு கணினியாகவே இன்று விளங்குகிறது. அதுமட்டும் இல்லாமல் மின்படி எடுக்கவும், ஒலி ஒளிக் காட்சிகள் காணவும், படமெடுக்கவும், அசை படம் உருவாக்கவும், முகத்துக்கு முகம் பேசிடவும், முகநூல், இணையத் தேடுதல் போன்றன நிகழ்த்தவும் கைபேசி தற்போது பயன்பட்டுவருகிறது.

கைபேசி பேசுதல், கேட்டல் என்ற இரு செயல்பாடுகளைக் கடந்து அனைத்தும் கொண்ட கையடக்கக் கணினியாகவே தற்போது விளங்குகிறது.

### 13.2.வாட்ஸ் அப் (கட்செவி)

கைபேசியில் தற்போது பெருமளவில் பயன்படுத்தப்படும் சமூக வலைதளமாக விளங்குவது வாட்ஸ்அப் என்ற கட்செவி அமைப்பு ஆகும். இது கைபேசிக்கெனத் தயாரிக்கப்பெற்ற செயலி என்றாலும், கணினியிலும் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது.

இதன்வழி குறைந்த செலவில் தொலைவில் பேசவும், தொலைவில் உள்ளவர்களுடன் முகத்துக்கு முகம் நேரடியாக

உரையாடவும், தகவல்களை அனுப்பவும், தகவல்களைப் பெறவும் இயலும். செய்திகளை ஐந்துபேருக்குப் பரவச் செய்ய இயலும். மேலும் கட்செவிக் குழுமங்களை உருவாக்கி அதன்வழி செய்திகளைப் பரிமாறிக்கொள்ள இயலும். குழு வழியாகச் செய்தி பரிமாறும்போது பலருக்கு ஒரே நேரத்தில் ஒரே செய்தி அனுப்ப வாய்ப்புள்ளது. இது மிக பாதுகாப்பானது. பேசுபவர், கேட்பவர் ஆகிய இருவர் தவிர வேறுயாரும் அவ்விருவர் அனுமதியின்றித் தகவல்களைப் பெற இயலாது.

## 13.3.குறுஞ்செயலி

குறுஞ்செயலி என்பது தனிப்பட்ட குறுகிய பயன் பெறுவதற்கான அமைப்பு முறையாகும். தற்போது கைபேசியில் பயன்படுத்தும் அளவிற்கு குறுஞ்செயலிகள் பல நாளுக்கு நாள் உண்டாக்கப்பெற்று வருகின்றன. குறிப்பாக தொடர் வண்டி நேரங்கள், தொடர் வண்டிகளின் தற்போதைய நிலை போன்றன அறிந்து கொள்ளவும், ஒருங்குறித் தமிழ் தட்டச்சு, அல்லது ஒலிஉள்ளீடு செய்யவும் ஆன செயலி, மொழி பெயர்ப்புச் செயலி, தொடர் கண்டறிதல் செயலி போன்றன உருவாக்கப் பெற்றுள்ளன. இவ்வகையில் குறுஞ்செயலி என்பது குறுகிய அளவிலான பயனைப் பெற உதவும் கணினி மொழி மென்பொருள் பகுதியாகும்.

# கூறு 14.



குறிப்பு

## மின்தமிழ்- இணையத்தில் இணைந்த தமிழ், இணையவழி தமிழ்க்கல்வி, கணினியியலில் தமிழ் - தமிழில் தகவல் தொடர்பியல்

### 14.மின்தமிழ் - இணையத்தில் இணைந்த தமிழ்

**ஐந்தமிழ்** என்ற நிலை மாறி ஆறு தமிழ் என்ற வழக்கு வந்துவிட்டது. இயல், இசை, நாடகம், அறிவியல், ஆய்வு, இணையம் போன்ற ஆறுநிலைகளில் தமிழ் இன்று வளர்ந்துவருகிறது. இணைய வானொலி, இணைய நூலகம், இணையச் செய்தி பரிமாற்றம் போன்றனவற்றிலும் தமிழ் அழியா இடம் பெற்றுவருகிறது.

### 14.1.இணைய நூலகம்

தமிழில் உள்ள நூல்களை இணையத்தில் வாசிக்கமுடியும். தமிழ் நூல்களை மின்நூல்களாக மாற்றி இணையத்தின் வழியாக அனைவரும் பயன்கொள்ளும்படிச் செய்யப்பட்டு வருகிறது. இவற்றை மின் நூலகம், இணைய நூலகம் என்று அழைக்கின்றனர். கள்வரால் களவாடப்பட முடியாமல், வெந்தணலில் தமிழ் ஏடுகள் தற்போது இணையத்தில் ஏற்றி அழியா நிலைக்குச் சென்றுவிட்டன.

மதுரைத்திட்டம் என்ற இணைய தளம் ஏறக்குறைய பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தன்னுள் மின்பதிப்பாகக் கொண்டுள்ளது. இத்தளத்தின் சிறப்பு என்னவென்றால் பல தமிழ் அன்பர்கள் ஒன்றுகூடி, அவர்கள் அவர்களாகவே சிலச்சில நூல்களை மின்வடிவமாக மாற்றி ஒட்டுமொத்தமாகத் தந்திருப்பதுதான். இது ஒரு கூட்டு முயற்சியாகும்.

தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் இணைய நூலகம் மிகவும் பயன்பாடு மிக்கது. இதனுள் பல நூறு நூல்கள் சேமிக்கப்

பெற்றுள்ளன. நூல்களை அடுத்த அடுத்த பக்கங்களுக்குச் சென்று படிப்பது போல இணையப் பக்கங்களைப் புரட்டி நூல்களைப் பார்வையிட முடியும். மேலும் இந்நூலகத்தில் தேடுதல் வசதி உள்ளது. அதாவது தேடுதல் வசதி என்பது சொல் தேடல் என்பதாகும். திருக்குறளில் ஏதாவது ஒரு சொல் எந்தெந்த இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கண்டறியவேண்டுமானால் இத்தளத்திற்குச் சென்று திருக்குறள் பகுதியை அழுத்தி அதன்பின் தேடல் பகுதியில் தேவையான சொல்லை இட்டால் அந்தச் சொல் பயன்படுத்தப் பட்டுள்ள இடங்கள் அனைத்தும் கிடைக்கும். இப்படியே ஒவ்வொரு நூலிலும் தேடல் வசதி தரப் பெற்றுள்ளது. தற்போது தமிழ் இணையப் பல்கலைக் கழகம் என்ற பெயர் உலகத் தமிழ் இணையப் பயிற்சிக் களம் என்பதாக பெயர் மாற்றம் பெற்றுள்ளது.இத்தளத்தில் கலைக்களஞ்சியங்களும் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தி சொல் வளம் பெற இயலும்.

அடுத்து சென்னை லைப்ரரி என்ற தளம் குறிக்கத்தக்கது ஆகும். சிறுகதைகள், நாவல்கள் முதலியனவற்றைப் படிப்பதற்கு இந்தத்தளம் உதவுகின்றது. குறிப்பாக சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியங்கள் போன்றனவும் இத்தளத்தில் கிடைக்கின்றன. கம்பராமாயணம் முழுவதும் இதனுள் கிடைக்கின்றது. பெரும்பாலும் இணையத்தில் தற்போது மூல நூல்கள் மட்டுமே கிடைக்கின்றன. உரை நூல்கள் கிடைப்பதில்லை. கல்கியின் நாவல்கள், புதுமைப்பித்தன் கதைகள், ஜெயகாந்தன் படைப்புகள் போன்றவற்றை இதனுள் பெற இயலும்.

அடுத்துப் பொள்ளாச்சி நசன் அவர்களின் தமிழம்.நெட் இணைய தளம் பல அறியப்படாத நூல்களைத் தன்னுள் கொண்டுள்ளது. இத்தளத்தில் இன்னும் பல சிறப்புகள் உள்ளன. முன்னூறு தமிழ் அறிஞர்களின் புகைப்படங்கள் கிடைக்கின்றன. மேலும் சிற்றிதழ்களின் கண்காட்சியாக பல சிற்றிதழ்கள்

குறிப்பு

பார்வைக்கு உள்ளன. தமிழில் உள்ள குறிக்கத் தக்க இணையதளங்களுக்கான இணைப்பு தரப்பெற்றுள்ளது. இவ்வகையில் மிக முக்கியமான தளமாக இது விளங்குகின்றது.

இதுபோன்று தமிழ் மரபு அறக்கட்டளை நூலகம்.காம் போன்ற பல தளங்கள் வாயிலாக தமிழ் நூல்களை இணைய நூல்களாகக் காண முடிகின்றது. தமிழ் மரபு அறக்கட்டளை இணையதளம் ஓலைச்சுவடிகளை மின்வடிவில் தருவதில் பெரு முயற்சி எடுத்து வருவது குறிக்கத்தக்கது.

சமண சமய நூல்களினைப் பார்வையிட ஜெயின்வோர்ல்டு .காம் என்ற இணையதளம் பயன்படுகிறது. தமிழ் விக்கிபீடியா என்ற இணையதளம் தமிழின் கட்டற்ற கலைக் களஞ்சியமாக உள்ளது. தமிழ்மொழியில் உள்ள தகவல்களைப் பெற இத்தளம் மிக முக்கியமானதாகும். மேலும் இதனுள் இடுகை இடுதலை யார் வேண்டுமானாலும் செய்யலாம். யார் வேண்டுமானாலும் திருத்தலாம். அதற்கான வழிமுறைகள் படி நுழைய வேண்டும். இதனை வளப்படுத்தவே தற்போது இளைஞர்களுக்குப் போட்டிகள் வைக்கப் பெற்றுள்ளன.

இணையத்தமிழ் வானொலி சேவை இன்னும் குறிக்கத்தக்கதாகும். பி.பி.சி தமிழ்ச்சேவை, வேரித்தாஸ்வானொலி, சக்தி பண்பலை போன்றன இவற்றுள் குறிக்கத்தக்கன. இதனுள் மிக முக்கியமான வசதி என்னவென்றால் நாள் தேதி குறிப்பிட்டு வானொலி நிகழ்ச்சிகளைத் திரும்பக் கேட்க இயலும் என்பதுதான். வானொலி நிகழ்ச்சிகளை உரிய நேரத்தில் கேட்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இவற்றில் இல்லை. தேவையான நிகழ்ச்சியை தேவையான போது கேட்டுக் கொள்ளும் வசதி இதனுள் உள்ளது.

இவைதவிர தமிழ்த் திரை இசைப் பாடல்களைக்கேட்க பல தளங்கள் உள்ளன. தேனிசை. காம், ஓசை.காம் போன்றன இவ்வகையில் குறிக்கத்தக்கன. இவ்வாறு இசைத்தமிழ் பல

நிலைகளில் முன்னேறி இணையத்துக்குள் ஆட்சி செலுத்தி வருகின்றது.

குறிப்பு

இவைதவிர குழந்தைகள் கற்பதற்கான தமிழ்ப் பாடத் தளங்கள் பல உள்ளன. குறிப்பாக தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் தளம் இதற்குப் பெரிதும் உதவுகின்றது. மழலைக் கல்வி முதல் இளங்கலைக் கல்வி வரை அனைத்து நாட்டுத் தமிழரும் கற்கும் வண்ணம் ஒலி, ஒளிக் காட்சிகளுடன் பாடங்கள் இதனுள் அமைக்கப் பெற்றுள்ளன. மேலும் இணைய வகுப்பறை சேவையும் இதனுள் தொடங்கப் பட்டுள்ளது. இதன் வழியாக வகுப்பறைத் தோற்றத்தினை வீட்டில் அமர்ந்து பெற இயலும். இணையவழித் தேர்வுகளும் இதன் வழியாக நடத்தப்படுகின்றன.

மழலைகள்.காம் என்ற தளமும் குழந்தைகளுக்கான தகவல்களை வழங்கி வருகிறது. இதுபோன்று பல தளங்கள் தமிழைக் குழந்தைகளிடம் கொண்டு சேர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றன. இதுதவிர தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தன் பாடநூல்களை இணையத்தில் இட்டுள்ளது. இதன் காரணமாக இந்தப் பாட நூல்களை உலகத்தமிழர் காணும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர்கள் குறிப்பிட்ட பாட நூலைத் தன் குழந்தைகளுக்கு வழங்கி அவர்களின் தமிழறிவை வளர்க்க இயலும். இவ்வாறு அடுத்த தலைமுறைக்குத் தமிழ் இணையத்தின் வாயிலாகக் கொண்டு சேர்க்கப்படுகிறது. இதுதவிர நகைச்சுவைப் பக்கங்களும் உள்ளன. அப்புசாமி. காம் என்ற தளம் பிரபல எழுத்தாளர் பாக்கியம் ராமசாமியால் நடத்தப்படுகிறது. இவரின் கைவண்ணத்தில் எழுந்த நகைச் சித்திரங்களை இவற்றில் வாசிக்க முடியும். இதுபோன்று தனிநபர் இணையப் பக்கங்களும் தமிழில் அதிகமாக வாசிக்கப் பெறுகின்றன. எழுத்தாளர்களான ராமகிருஷ்ணன், ஜெயமோகன், சாருநிவேதிதா போன்றோர் தனக்கான இணையப் பக்கங்களை உருவாக்கியுள்ளனர். இதனுள்

குறிப்பு

வாசகர்களுடனான உரையாடலையும் அவர்கள் நிகழ்த்துகின்றனர். சமையல் குறிப்புகள், ஜோதிடக் குறிப்புகள் போன்றவற்றைத் தமிழில் தரும் தளங்களும் உள்ளன.

மின்அஞ்சல் குழுமங்கள் என்ற குழு அமைப்பும் இணையத்தமிழுக்குப் பெருமை சேர்த்து வருகின்றது. அதாவது மின் அஞ்சலை ஒரே நேரத்தில் பலருக்கு அனுப்பலாம். இதற்குக் குழு மடல் என்று பெயர். இந்தக் குழு மடல் போலவே ஒரு குழுவை மின்அஞ்சல்காரர்கள் உருவாக்கிக் கொள்வார்கள். இதில் இணைவதற்கு உரிய நடைமுறைகளைச் செய்துவிட்டால் ஒருவர் மின்மடல் குழுமத்தில் உறுப்பினராகிவிடலாம். பின் ஒருவர் இடும் மடல் அனைத்து உறுப்பினருக்கும் கிடைக்கும். ஒரு செய்தியைப் பற்றி அனைவரும் விவாதிக்கலாம். இந்த முறையில் முத்தமிழ்குழுமம், மின்தமிழ் குழுமம் போன்ற மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. இவையும் பல இணையத் தமிழ் விவாதங்களுக்கு களம் அமைத்துத் தருகின்றன.

மொத்தத்தில் உலக அளவில் தமிழின் தரத்தை உயர்த்த இணையத்தமிழ் உதவி வருகின்றது. இதனைச் சரியான பாதையில் கொண்டு செல்ல வேண்டிய கடமை அனைத்து தமிழ் இணையப் பக்கங்களுக்கும் உண்டு.

இணையம் முத்தமிழையும் வளர்க்கும் தளமாக தற்போது விளங்குகிறது. அதன் முத்தமிழ் வளர்ச்சியை இப்பகுதி விளக்கி நிற்கிறது.

## 14.1.இணையத்தில் இயல் தமிழ்

இயல் தமிழ் என்ற பகுப்பில் தமிழின் பழமையான இலக்கண இலக்கியங்கள் தற்போது இணையத்தில் எழுத்துவடிவில் கிடைக்கின்றன. தமிழ் இலக்கிய இலக்கணங்கள் பற்றிய அறிமுகச் செய்திகள், கட்டுரைகள் போன்றனவும் இணைய தளங்களில் கிடைக்கின்றன. இவ்வகையில் பழைய அரிதான இலக்கண

இலக்கியங்களை கைச்சுட்டுக்குள் அடக்கி உடன் கிடைக்கச் செய்யும் இணையதளங்கள் பல உள்ளன.

குறிப்பு

குறிப்பாகத் திருக்குறள் பற்றி அறிந்து கொள்ள பல இணையதளங்கள் உள்ளன. இவற்றில் பொருளும், வார்த்தைத் தேடல்களும், மொழிபெயர்ப்புகளும் சேர்ந்துக் கிடைப்பது குறிக்கத்தக்கது ஆகும். குறிக்கத்தக்க சில இணையதளங்கள் பின்வருமாறு.

http://chittarkottai.com/thirukural/search.php இத்தளத்தில் திருக்குறளில் இடம் பெற்றுள்ள சொற்களின் அடிப்படையில் தேடுதலை நிகழ்த்த முடியும். திருக்குறள் முழுமையும் தனித்த பாடமாக வைக்கப் பெற்றுள்ள மாணவர்களுக்கு இத்தளம் மிகச் சிறப்பான பலன்களைத் தரும்.

http://www.thirukkural.com இத்தளம் திருக்குறளுக்கு கலைஞர், மு.வ. போன்றோர் உரைகளைத் தருகின்றது. மேலும் ஆங்கில ஆக்கங்களையும் இணைத்து இது தருகின்றது.

இவை போன்ற பல தளங்கள் திருக்குறளுக்குக் கிடைக்கின்றன. தேடுதல் அடிப்படையில் இவற்றைத் தொகுத்தால் இம்முயற்சி பெருகும். எவ்வாறு திருக்குறள் பதிப்பு அளவிலும், பரவுதல் அளவிலும் மற்ற தமிழ் நூல்களை விட முன்னணி பெற்றுள்ளதோ அதுபோல இணைய தள அளவிலும் அதிக அளவினைப் பெற்றுத்திகழ்கின்றது. திருக்குறளை இசையோடு வழங்குகின்ற தளங்கள் பலவும் உள்ளன.

இது போன்று தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் போன்றவற்றையும் தமிழ் இணையப் பல்கலைக்கழகமமதுரைத்திட்டம், சென்னை லைப்ரரி போன்ற இணைய தளங்களில் பெற முடிகின்றது. சென்னை

குறிப்பு

லைப்ரரியில் நாவல்கள், சிறுகதைகள் போன்றனவற்றையும் பெற முடிகின்றது.

இவ்வகையில் உடனுக்கு உடன் தமிழ் இலக்கிய இலக்கணங்களை அவற்றின் மூலபாடம், உரை இவற்றுடன் பெற்றுக் கொள்ளும் இவ்வசதி வழியாக மாணவர்களுக்கு மூல பாடத்தைப் பார்க்கச் செய்ய இயலும். உரைகளை ஒப்பிட்டு நோக்க இயலும்.

பொள்ளச்சியில் உள்ள சிற்றிதழ் சேகரிப்பாளர் திருமிகு நசன் அவர்கள் தமிழம். காம் என்ற இணையதளத்தை நிறுவியுள்ளார். தமிழ் மொழிக்குச் சீரிய முறையில் தொண்டாற்றி வருகின்ற தளங்களில் இது குறிக்கத்தக்கதாகும். இத்தளத்தில் இருநூற்று எழுபத்தாறு தமிழறிஞர்களின் புகைப்படங்கள் அடங்கியுள்ளன. பெரும்பான்மையான தமிழறிஞர்கள் இற்றைக் காலத்திற்கு முன்னான முன்னூறு ஆண்டுகளுக்குள் வாழ்ந்த பெரியார்கள் என்பதும் குறிக்கத்தக்கது.

இத்தளத்தின் வாயிலாக இதழியல் படிக்கின்ற மாணவர்கள் சிற்றிதழ்களை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் பல வசதிகள் இதனுள் உள்ளன.

தனி நபர்களும் தங்களின் இணையதளங்கள் வழி தமிழ்க்கல்விக்குத் தொண்டாற்றி வருகின்றனர். எடுத்துக்காட்டிற்கு ஒன்று காட்ட இயலும். கடையம் என்ற ஊரில் தற்போது வாழ்ந்துவரும் ஒருவரின் வலைப்பூ குறிக்கத்தக்கதாகும். http://barathikannammablogspot.com என்ற இணைய தளம் பாரதியார் வாழ்ந்த கடையப்பகுதிகளைக் கண்முன் விரிக்கின்றது.

தமிழ் நேசன் என்ற வலை தளம் தமிழ்ப் பண்பாடு, தமிழர் இலக்கியம் குறித்த பல்வேறு தகவல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் தந்து கொண்டுள்ளது. சிலப்பதிகாரம் பற்றிய தகவல்கள் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. மதுரை தீப்பற்றிய காட்சியை ஓர்

குறிப்பு

ஓவியரின் கற்பனைப் படைப்பில் விளைந்த நிலையை இத்தளம் தந்துள்ளது சிறப்பிற்குரியது. இத்தளத்தைப் பார்த்துவிட்டுப் பாட ஆசிரியர்கள் பாடம் நடத்துவது நல்லது எனக் கூறும் அளவிற்கு இதனுள் பல செய்திகள் அடைந்து கிடக்கின்றன.

இதுபோன்றே அறிமுகச் செய்திகளை வழங்கும் விக்கிப்பீடியா என்ற தளமும் கவனிக்கத்தக்கது. இதுதற்போது மேம்படுத்தப்பட்டு வருகிறது. சில செய்திகள் இவற்றில் சுருங்கிய அளவில் உள்ளன. இதனை மேம்படுத்த இதனைப் பார்ப்பவர்களையும் அழைக்கும் தளமாக இதனுள் உள்ளது.

நூலகம் என்றொரு தளம் தினம் ஒரு நூலை இணையத்தில் ஏற்றி வருகின்றது. இத்தளம் இலங்கைத் தமிழ் நூலாசிரியர்களின் நூல்களை இணைய மயமாக்குவதன் வாயிலாக இலங்கைத் தமிழ் சார்ந்தத் திறனாய்வாளர்களை, படைப்பாளர்களைப் பற்றியும் அவர்களின் ஆக்கங்கள் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. www. noolagam.net)

சொற்பொருள் தெரிவிக்கும் அகராதிகள் பலவும் இணையதளங்களில் கிடைக்கின்றன. இதற்கு ஓர் காட்டாக விளங்குவது http//dsal.uchicaco.edu என்ற தளமாகும். இத்தளத்தில் ரோமன் ஆங்கில முறையில் அமைந்த ஒலிபெயர்ப்பு நிலையில் சொற்களை உள்ளிட்டுப் பொருள் பெற இயலும்.

மேலும் தனிநபர் வலை தளங்களில் குறிக்கத்தக்கனவாக இக்கால எழுத்தாளர்களின் தளங்கள் விளங்குகின்றன. மறைந்த எழுத்தாளர் சுஜாதா தான் உயிருடன் இருக்கும் காலத்தில் இத்தகைய தனிநபர் வலைதளமாக தன் தளத்தை உருவாக்கிப் பல வாசகர்களுடன் தொடர்பு கொண்டார். தற்போது எஸ். இராமகிருஷ்ணன், ஜெயமோகன் போன்றோரின் இணையதளங்கள் இவற்றில் முக்கியத்துவம் வகிக்கின்றன.

பல்சுவை தரும் இணையதளங்கள் பல தமிழில் ஆக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குக் காட்டாக அப்புசாமி . காம் என்பது அமைகிறது. இதனுள் பல்சுவை நிரம்பிய பல பக்கங்களைக் காணமுடிகிறது.பாக்கியம் ராமசாமி என்பவரின் கற்பனைப்பாத்திரமான அப்புசாமி சீதாப்பாட்டி இருவரும் இதழியல் உலகால் அதிகம் உணரப் பெற்றவர்கள். இவர்களை இணையத்தில் சந்திக்க இந்தத்தளம் வாய்ப்பளிக்கிறது.

செம்மொழித்தமிழுக்கு வளம் சேர்க்கும் வகையில் மைசூரில் உள்ள இந்திய நடுவண் அரசின் மொழி நிறுவனம் செம்மொழிக்காக ஒரு தளத்தை உருவாக்கி உள்ளது. இதன் வழியாக ஒரு நூலகமும் இயங்கி வருகின்றது. மேலும் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் போன்றன இசைவடிவமாகக் கிடைக்கின்றன. இவை மாணவர்களுக்குப் பெருத்த பயன் அளிப்பனவாகும்.

இவ்வகையில் இயல்தமிழின் ஆற்றலுக்கு இணையம் சிறப்போடு தன்னால் ஆன உதவிகளைச் செய்து வருகின்றது. இதன் வழியே சென்றால் தமிழின் பெருமையும் தகைமையும் கூடும் என்பதில் ஐயமில்லை.

## 14.2. இணையத்தில் இசைத்தமிழ்

தமிழிசை என்பது தற்போது தேய்ந்து வரும் சூழலாக உள்ளது. இதனை மீட்டெடுக்கும் முயற்சியாக தமிழிசை இணையதளங்கள் விளங்குகின்றன. குறிப்பாக சைவத் திருமுறைகள் கற்பிக்கும்போது இத்தளங்கள் மிகவும் உதவுகின்றன. ஆசிரியருக்குப் பாடத் தெரியவில்லை என்ற குறையை இவை போக்குகின்றன. மேலும் மாணவர்களுக்கு உண்மையான தமிழிசையின் மாண்புகளை இவை அறிவிக்கின்றன.

தமிழ்ச்சங்கம்.பிளாக்ஸ்பாட். காம் இசைத்தமிழ்ப் பற்றிய பல தகவல்களை அளிப்பதாக உள்ளது. ஓதுவார்.காம் என்ற தளம் பல

திருமுறை ஓதுவார்களின் பாடல்களைத் தக்கப் பின்னணி இசையுடன் வழங்கி வருகின்றது. இது கௌமாரம். காம் என்ற இணையதளத்தின் இணைப்பில் உருவானதாகும். கௌமாரம்.காம் என்ற தளம் மிக்கப் பயனுடையது. கந்தன் குறித்தப் பனுவல்கள் அனைத்தும் இதனுள் கிடைக்கின்றன. இசைவடிவம், எழுத்து வடிவம், காட்சி வடிவம் எனப் பல இதன் வழியில் கிடைக்கின்றன.

முதுசொம் இசையரங்கு என்ற தளம் தமிழிசைப்பாடல்கள் கொண்ட இணையதளங்களின் பெயர்களைத் தரும் தொகுப்புத் தளமாக விளங்குகிறது.

தமிழிசை மும்மூர்த்திகள், அருணாசல கவிராயர் போன்றோரின் பாடல்களை ஒலிபரப்பும் தளங்கள் கூட உள்ளன.

இதுதவிர தற்போது திரைஇசைப்பாடல்களும் பாடப்பகுதிகளாக அமைந்துவருகின்றன. அவ்வகையில் திரையிசைப்பாடல்களைக் கேட்க ஓசை.காம், தேனிசை.காம் போன்றன உள்ளன. இத்தளங்கள் வழியாக பாரதியார் பாடல்கள், பாரதிதாசன் பாடல்கள், பட்டுக்கோட்டை பாடல்கள், சுரதா பாடல்கள் போன்றவற்றைப் பதிவிறக்கம் செய்து ஒலிபரப்ப இயலும்.

இவற்றின் அடிப்படையில் இணைய வானொலி ஒன்றைப் புதியதாக மாணவர்கள் கூட உருவாக்க முடியும்.

இவை தவிர நாட்டுப்புற இசை, பக்தி இசை, பாரதியார்பாடல்கள் போன்றனவற்றைத் தரும் இணையதளங்களும் உள்ளன.

இவ்வாறு இசைத்தமிழ் மேன்மைபட பல இணையதளங்கள் உதவி வருகின்றன

## 14.4.இணையத்தில் நாடகத்தமிழ்

தமிழ் இலக்கிய வரலாற்றில் எவ்வாறு தமிழநாடகத்தின் இடம் சுருங்கிக்கிடக்கிறதோ அதுபோலவே இணைய உலகத்திலும் இதன் பக்கங்கள் குறைவாகவே உள்ளன. இதன் இடத்தைக் குறும்படங்கள் எடுத்துக் கொண்டுள்ளன. குறும்படங்கள் தமிழில் அதிகமாக வெளிவரத்தொடங்கியுள்ளன. இவற்றின் ஒட்டு மொத்த சேமிப்புக் கூடமாக தமிழ்ஸ்டுடியோ.காம் விளங்குகின்றது. கூத்தரங்கம் என்ற ஒரு தளம் இலங்கையின் நாடக முயற்சிகளை வெளியுலகிற்கு அளிக்கின்றது.

கௌமாரத்தில் கந்தபுராணக் காட்சிகள் காட்டப் பெறுகின்றன. இவை நாடகப்பாங்கிற்கு உதவுகின்றன. தமிழ் இணையப்பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டம் ஓரளவிற்கு பிளாஷ் பிளேயரில் ஓடக்கூடிய அசைபடங்களை உருவாக்கிப் பாடம் சொல்லும் முயற்சியைக் கையாண்டு வருகின்றது. சிலப்பதிகாரம் இவற்றுள் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது.

இவ்வாறு பல நிலைகளில் தமிழ் இணையதளங்கள் தமிழ்க்கற்பிப்பு முயற்சிக்கு உறுதுணையாக நின்று விளங்கி வருகின்றன. இவற்றின் பெருக்கம் படிப்போரை ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை.

## தற்சோதனை வினாக்கள்

**குறு வினாக்கள்**

1. இணைய வசதிக்கு அடிப்படையாக தேவையானவற்றை எழுதுக.
2. முகநூல் தொடர்பின் வழி பெறலாகும் பயன்கள் யாவை?
3. மின்னிதழ்கள் நான்கினை எழுதுக.
4. வாட்ஸ் அப் -விளக்கம் தருக.
5. மின்னஞ்சல் பற்றி எழுதுக.

**<u>நெடு வினாக்கள்</u>**

1. மின்னிதழ்கள் பற்றி எழுதுக.
2. வலைதளம் பற்றி எழுதுக.
3. இணையத்தமிழ் பற்றி எழுதுக.
4.

**இன்னும் வாசிக்க**

**இணையமும் இனிய தமிழும்** - க. துரையரசன், இசை பதிப்பகம், கும்பகோணம், 2009

**இணைய தளத்தில் தமிழ்த் தரவுதளங்கள்** துரை. மணிகண்டன், கௌதம் பதிப்பகம், சென்னை 2011,

**இணையத்தில் தமிழ் வலைப் பூக்கள்,** துரை . மணிகண்டன், இணையத்தில் தமிழ் வலைப்பூக்கள், கௌதம் பதிப்பகம். சென்னை, 2010

**தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள்** கமலினி பதிப்பகம், கச்சமங்கலம், 2012

குறிப்பு

# அழகப்பா பல்கலைக்கழகம்

## தொலைதூரக் கல்வி இயக்ககம்

## ஊடகவியல் -10753

**(மாதிரி வினாத்தாள்)**

காலம்: 3மணி மதிப்பெண்: 75

**பகுதி – அ**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க (10X2 =20)**

1. ஊடகவியல் என்பதற்கான சொற்பொருள் விளக்கம் தருக.
2. ஊடகங்களின் மிகச் சிறந்த பணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. செய்தியின் உள்ளடக்கத்தில் அமைய வேண்டிய கேள்விகள் நான்கினைக் குறிப்பிடுக.
4. நிருபர்கள் வழி செய்தி சேகரிப்பு நடைபெறும்போது மேற்கொள்ளப்பெறும் நடைமுறைகளில் இரண்டினைக் குறிப்பிடுக.
5. விளம்பரம் என்பது என்ன?
6. நிருபர்களுக்கு உரிய தகுதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
7. பதிப்புரிமை என்றால் என்ன?
8. வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக
9. சார்லஸ் பாபேஜ் பற்றி குறிப்பு வரைக.
10. மரபு சார் ஊடகங்கள் நான்கினைக் குறிப்பிடுக

**பகுதி – ஆ**

பின்வரும் வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடைதருக (5X5=25)

11. அ) ஊடகவியல் குறித்த அறிஞர்களின் கருத்துரைகளைத் தருக.

(அல்லது)

ஆ) ஊடகங்களின் இன்றைநிலை பற்றி எழுதுக.

12.அ) இதழ்களின் உள்ளடக்கம், செய்தி விளக்கம், சேகரிப்பு பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) ஒரு செய்தியின் தலையங்கம், தலைப்பு, உடல்பகுதி எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் காட்டுக.

13.அ) மின்வழி ஊடகங்களின் தன்மைகள், வகைகள் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) இந்தியச் செய்தி நிறுவனங்கள் பற்றியும் அவற்றின் செயல்பாடுகள் பற்றியும் எழுதுக

14)அ) இணையவழி தமிழ்க்கல்வி பற்றியும் அதன் நன்மைகள் குறித்தும் எழுதுக

(அல்லது)

ஆ) கணினியியலில் தமிழ் குறித்து எழுதுக.

15) அ) பத்திரிக்கைச் சட்டங்கள் இரண்டு குறித்து விவரிக்க.

(அல்லது)

ஆ) மின்னனு இதழ்கள் பற்றி எழுதுக.

குறிப்பு

**பகுதி - இ**

**எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க (3X10=30)**

**16)** ஊடகவியலின் வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.

17) இதழ்களின் தகவல் தொடர்புப்பணி குறித்தும், அவற்றின் வகைகள் குறித்தும்

எழுதுக.

18) மரபு வழி ஊடகங்கள் குறித்து எழுதுக.

19) நிருபர்களின் தனித்தகுதிகள் பற்றிக் கருத்துரைக்க.

20) இணையத்தில் இணைந்த தமிழ் குறித்துக் கட்டுரை வரைக.

# NOTES

**NOTES**